விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள்: இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail :valampurii@yahoo.com
valampurii@sltnet.lk


கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2046 மார்கழி 20 செவ்வாய்க்கிழமை (05.01.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 017

# இராணுவம் வெளியேற்றப்பட்டு மீள்குடியேற்றம் துரிதமாகும்

## பிரதமர் உறுதியளிப்பு



(கொழும்பு)

போரில் பாதிக்கப்பட்ட அப்பாவி தமிழ் மக்களுக்கு இவ் வருடத்துக்குள் சகல உரிமைகளையும் வழங்குவதோடு இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் சகல காணிகளையும் விடுவித்து மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்துவோம் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க

## 6500 மாணவர்கள் 3ஏ சித்தி பெற்றனர்

(கொழும்பு)

2015ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் தோற்றிய 6 ஆயிரத்து 547 பரீட்சார்த்திகள் மூன்று ஏ சித்திகளைப்

23ஆம் பக்கம் பார்க்க

## பாக். பிரதமருக்கு செங்கம்பள வரவேற்பு

(கொழும்பு)

மூன்று நாள் அதிகாரபூர்வ பயணமாக நேற்று மாலை இலங்கை வந்த பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்புக்கு, கட்டுநாயக்க விமான நிலையத்தில் செங்கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

கட்டுநாயக்க விமான நிலை

23ஆம் பக்கம் பார்க்க

## விளக்கமறியல் நீடிப்பு!

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டு விளக்கமறியலில் இருந்த 49 இந்தியமீனவர்களுக்கும் எதிர்வரும் ஜனவரி மாதம் 18ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டதாக

இராமேஸ்வரம் பகுதியை சேர்ந்த 27 மீனவர்களும், புதுக் கோட்

23ஆம் பக்கம் பார்க்க

## ரொனி பிளேயர் நேற்று கூட்டமைப்புடன் பேச்சு



(கொழும்பு)

இலங்கை வந்துள்ள முன்னாள் பிரித்தானிய பிரதமர் ரொனி பிளே யர் நேற்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான இரா.சம்பந்தனை கொழும்பில் சந்தித்தார். இந்த சந்திப்பினபோது தமிழ் மக்கள்

23ஆம் பக்கம் பார்க்க

## பொங்கலுக்கு முன் விடுதலை இல்லையேல் மக்கள் புரட்சி

### கைதிகள் எச்சரிக்கை

(கொழும்பு)

நல்லாட்சி எனக் கூறும் அரசு எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் எம்மை விடுதலைசெய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளாது விட்டால் மக்கள் புரட்சி வெடிக்கும் என தமிழ் அரசியல் கைதிகள் எச்சரித்துள்ளதுடன், பொங்கல் விழாவை புறக்கணித்து தமது விடுதலைக்காக போராடுமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 21 தமிழ் அரசியல் கைதிகள் நேற்றையதினம் விசாரணைக்காக கொழும்பு நீதவான் நீதிமன்று இலக்கம் 8இல் ஆஜர்படுத்தப்பட்டனர். மன்றுக்கு வெளியே ஊடகங்களு

23ஆம் பக்கம் பார்க்க

## இராணுவத்தை வெளியேறக் கோரி கேப்பாப்புலவு மக்கள் ஆர்ப்பாட்டம்

### பெருமளவான மக்கள் திரள்வு




(முல்லைத்தீவு)

கேப்பாப்புலவு எங்கள் நிலம்; இராணுவமே வெளியேறு என்ற கோசத்துடன், கேப்பாப்புலவில் பொது மக்களின் காணிகளை இராணுவம் அபகரிப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து அப்பகுதி மக்கள் ஒன்றிணைந்து பெரும் போராட்டம் ஒன்றினை நேற்றுக் காலை முன்னெடுத்துள்ளனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில்

23ஆம் பக்கம் பார்க்க

## ஆர்ப்பாட்டத்துக்கு ஜே.வி.பி அழைப்பு

(கொழும்பு)

ஆட்சி மாற்றம் ஏற்பட்டு எதிர்வரும் 8ஆம் திகதியுடன் ஒருவருடம் நிறைவடையவுள்ள நிலையில், அன்றைய தினம் மாபெரும் ஆர்ப்பாட்ட பேரணியொன்றை நடத்த மக்கள் விடுதலை முன்னணி தீர்மானித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது, கட்சியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் இதனைத் தெரிவித்தார்.

நல்லாட்சியின் கனவுகள் சிதைந்துள்ளதாக குறிப்பிட்ட அவர், அரசாங்கத்திற்கு அதனை நினைவுறுத்துவதோடு, அரசாங்கம் வழங்கிய கோரிக்கையை நிறைவேற்றுமாறு கோரியும், உண்மையான நல்லாட்சியை ஏற்படுத்துமாறு வலியுறுத்தியும் இந்த ஆர்ப்பாட்ட பேரணியை ஒழுங்குசெய்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

23ஆம் பக்கம் பார்க்க

## அரசியல் கைதிகளுக்கு விளக்கமறியல் உத்தரவு

(கொழும்பு)

தமிழ் அரசியல் கைதிகள் 21 பேரை எதிர்வரும் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்று நேற்றையதினம் உத்தரவிட்டுள்ளது.

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விளக்கமறியலல் வைக்கப்பட்டுள்ள கைதிகளில் 21 பேர் நேற்றையதினம் கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

அவர்களில் கடந்த 2015 ஆம் ஆண்டுகைதுசெய்யப்பட்ட 3 அரசியல் கைதிகளும் ஒருபெண் அரசியல் கைதியும் உள்ளடங்குகின்றனர்.

23ஆம் பக்கம் பார்க்க

## பஸ்-ஆட்டோ விபத்து வயோதிப பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)

தென்பகுதியைச் சேர்ந்த சுற்றுலா பேருந்தும் ஆட்டோவும் நேருக்கு நேர் மோதி விபத்துக் குள்ளானதில் வயோதிப பெண்மணி ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று மாலை 6.20 மணியளவில் பொன்னாலை காரைநகர் வீதியில் இடம்பெற்றுள்ளது.

காரைநகரிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பிரயாணமான தென்பகுதியை சேர்ந்த பேருந்தும் யாழிலிருந்து காரைநகர் நோக்கி பிரயாணமான ஆட்டோவும் நேருக்கு நேர் மோதியதிலேயே மேற்படி

23ஆம் பக்கம் பார்க்க

## இந்திய வெளிவிவகார செயலர் 10ஆம் திகதி இலங்கை வருகை

(கொழும்பு)

இந்திய வெளிவிவகாரச் செயலாளர் எஸ்.ஜெய்சங்கர் எதிர்வரும் 10ஆம் திகதி கொழும்புக்கு உத்தியோகபூர்வமாக வருகிறார்.

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் நேற்று திங்கட்கிழமை இரண்டு நாள் அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள நிலையில் இந்திய வெளிவிவகாரச் செயலாளர் ஜெய்சங்கரின் பயணம் அமைகின்றது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜின் இலங்கை பயணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்வதும், இந்திய - இலங்கை கூட்டுக்குழுக் கூட்டத்துக்கான திட்ட வரைபுகளை தயாரிப்பதுமே இவரது பயணத்தின் முக்கிய நோக்கம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் அடுத்த மாதம் இடம்பெறவுள்ள இந்திய - இலங்கை கூட்டுக்குழுக் கூட்டத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஸ்மா சுவராஜ் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிலையில், கொழும்புக்கு அடுத்த வாரம் வரவுள்ள இந்திய வெளிவிவகாரச் செயலாளர் இலங்கை வெளிவிவகார அமைச்சர் மங்கள

23ஆம் பக்கம் பார்க்க

# அரசாங்கம் மீது குற்றச்சாட்டு

## ஜனாதிபதி கவலை



(கொழும்பு)

முன்னர் ஆட்சி நிர்வாகத்தினால் மேற் கொள்ளப்பட்ட அழிவுகளுக்கு இன்று எமது அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தப்படுவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல, "எமது கிராம" வளாகத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ் வாறு குறிப்பிட்டார்.

இந்த நாட்டின் அனைத்து வளங்களையும் பாதுகாப்பதற்கு முன்னுரிமை வழங்கி உரிய நடவடிக்கைகளை அரசாங்கம் முன் னெடுப்பதாகவும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

மேலும், 2020-ம் ஆண்டு தொடக்கம் இந்நாட்டில் புகையிலை உற்பத்தியை முற்றாக தடை செய்வதற்கு எதிர்பார்த்துள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இதன் போது தெரிவித்தார். (எ-11)


## தவறிவிட்டது

வல்லைவெளி பீச் Hotel முன்பாக நெல்லியடி வீதியில் கடந்த 01.01.2016 அன்று மோட்டார் சைக்கிளில் வரும் போது கூலிங்கிளாஸ் (Sunglass) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்வரும் கைத்தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும். (3068)

**0771673375 or 0776315961**

## சதாபொன்ஸ் - அல்வாய்

A/L 2018 - A/L மீட்டல் வகுப்புக்கள்

**கலை,வர்த்தகப் பிரிவுகள்**

06.01.2016 - புதன்கிழமை காலை 7.00 மணிக்கு ஆரம்பம் (சி-3327)

## A/L தமிழ் Day Class

K.சந்திரலிங்கம்

ஆரம்பம் நாளை காலை 06.30க்கு

**D.C.M யாழ்.நகர்** (சி-3325)


## மரண அறிவித்தல்

### திருமதி Coffey scan சிவமதி

திருமதி Coffey scan சிவமதி கடந்த (02.01.2016) சனிக் கிழமை அன்று U.S.A இல் காலமானார்.

அன்னார் அமரர் இரா.சண்முகலிங்கம், திருமதி சண் சுசியின் கனிஷ்ட புத்திரியும், தயாளன், சுதாமதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (08.01.2016) வெள்ளிக்கிழமை Bostan U.S.A இல் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (3072)

சண் சுசி :- 0018585468542

தகவல் : சித்தப்பா, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி லீலாவதி நடராஜா



எமது கல்லூரி ஆசிரியை திருமதி வ.தவனேசன் அவர்களின் அன்பு மாமியார் திருமதி லீலாவதி நடராஜா அவர்கள் நேற்று (04.01.2016) காலமானார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன்

அவரது இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்,**

**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.**

(சி-3329)


## பொருளியற் கல்லூரி

நாவலர் றோட், யாழ்ப்பாணம். (இரு இடத்திலும்) K.K.S றோட், இணுவில்.

கலை, வர்த்தகத்துறையில் அதிதிறமைச்சித்தி பெற்ற 3A மாணவர்களையும் ஏனைய சிறப்புத் தேர்ச்சிபெற்ற மாணவர்களையும் வாழ்த்துவதில் பெரும் மகிழ்ச்சி கொள்கின்றோம்

## A/L Day Class

**கலை வர்த்தகப் பிரிவு**

**யாழ் நகரில்**

ஆரம்பம் :- 06.01.2016 புதன்கிழமை

வர்த்தகப்பிரிவு : 7.00am - கலைப்பிரிவு : 8.00am

**இணுவிலில்**

ஆரம்பம் :- 11.01.2016 திங்கட்கிழமை 8.00am

*உங்கள் அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும்*

குறிப்பு: எமது மற்ற நிறுவனமான **BARATHY** சித்தன்கேணியிலும் 06.01.2016 (A/L Day Class) ஆரம்பமாகின்றன.

(சி-3320)

அரசாங்க/தனியார் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கும் பதவி உயர்விற்கும் சம்பள உயர்வுக்குமான

**UGC அங்கிகாரம் பெற்ற கற்கை நெறிகள்.**

| Courses | Entry Qualification | Duration |
|---|---|---|
| B.Sc. in Computer Science | O/L or A/L | 2-3 Years |
| Top Up in B.Sc. in Computer Science | 2 Years Diploma or HND | 1 Year |
| P.G.D. in Computer Science | Any Degree | 1 Year |
| M.Sc. in Computer Science | B.Sc. in Comp. Sc. or P.G.D in Comp. Sc. | 1 Year |
| B.Ed | A/L or Trained/Dip. Teachers | 3 Years |
| P.G.D. Ed | Any Degree | 1 Year |
| M.Ed [கல்வி அமைச்சின் அங்கீகாரம் பெற்ற] | P.G.D. Ed / B.Ed | 1 Year |
| Hotel Management | O/L or A/L | 1 Year |

**North Lanka IIT**

**Peoples Bank Bulilding, Top Floor, Stanly Road, Jaffna.**

**Contact: 0777592666 , 0769440075**

(சி-3322)

# சிறப்பு நீதிமன்றம் அமைக்கும் விடயத்தில் அரசு அவசர நடவடிக்கையில் ஈடுபடாது!

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு)

**மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சிறப்பு நீதிமன்றத்தை அமைக்கும் விடயத்தில் இலங்கை அரசாங்கம் அவசரமான நடவடிக்கைகளில் ஈடுபடாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். இந்தியாவின் முன்னணி நாளிதழான த ஹிந்துவுக்கு நேற்று முன்தினம் வழங்கிய விசேட செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.**

தமது இல்லத்தில் வைத்து ஹிந்துவுக்கு செவ்வியளித்த ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்,

முதலில் போரில் என்ன நடந்தது என்பதை ஆய்வு செய்ய வேண்டியுள்ளது. அதன் பின்னரே உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் யோசனைகளை நடைமுறைப்படுத்துவதில் படிப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இலங்கை அரசாங்கம் இதனை செய்ய வேண்டும் என்று கட்டளையிடப்படவில்லை. எனினும் அரசாங்கம் தேவையான அனைத்தையும் மேற்கொள்ளும்.

இதன் அடிப்படையிலேயே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் தலைமையில் நல்லிணக்கம் தொடர்பான பணிகள் முன்னெடுக்கப்படுகிறது.

அத்துடன் காணாமல் போனோர் தொடர்பில் தீர்வுகளை பெற்றுக் கொடுக்க மற்றும் ஒரு அமைப்பு செயற்படுகின்றது.

இதேவேளை இலங்கையில் புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்கும் ஆரம்ப நடவடிக்கைகள் எதிர்வரும் 9ம் திகதியன்று மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன்போது அனைத்து தரப்பினரின் பிரதிவாதங்களும் பரிசீலிக்கப்பட்டு புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும்.

இந்தநிலையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதில் மாற்றுக் கருத்தில்லை.

இந்தியாவின் உதவியுடனான 13வது அரசியலமைப்பின் நடைமுறை குறித்து கருத்துரைத்த அவர், வாத பிரதி வாதங்களின் பின்னர் அதனை புதிய அரசியல் அமைப்பில் சேர்த்துக் கொள்வது தொடர்பில் இறுதி முடிவெடுக்கப்படும்.

அதிகாரப்பரவலாக்கம் தொடர்பில் நீண்ட வரலாறு இலங்கையில் உள்ளது. எனினும் உரிய ஆய்வின் பின்னர் புதிய அரசியலமைப்பில் அது உள்வாங்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

மாற்றங்களை விரும்பிய உலக தலைவர்களான ஆபிரகாம் லிங்கன் , மார்டின் லூதர் கிங், ஜூனியர், மகாத்மா காந்தி மற்றும் எஸ் டபிள்யூ ஆர்.டி.பண்டாரநாயக்க ஆகியோர் கொலை செய்யப்பட்டனர்.

இதில் இருந்து மனிதநேயத்துக்கு எப்போதும் எதிர்ப்பு இருப்பது தெரிகிறது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இதேவேளை இந்திய பிரதமர் நரேந்திரமோடி தமது மிகச் சிறந்த நண்பர் என்றும் மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## முன்மொழிவில் இரண்டும் இல்லை

எதிர்வரும் 9ஆம் திகதியன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள முன்மொழிவுகளில், ஒற்றையாட்சி மற்றும் பௌத்தத்துக்கு முதலிடம் ஆகிய முக்கிய விடயங்களை அரசாங்கம் தவிர்த்து விட்டது என மக்கள் ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினரான தினேஷ் குணவர்த்தன குற்றஞ்சாட்டினார்.

1978ஆவது அரசியலமைப்பில், ஒற்றையாட்சி மற்றும் பௌத்தத்துக்கு முக்கிய இடம் வழங்கல் ஆகியன காணப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

நாட்டைப் பிரதானமாக பாதிக்கும் இந்த இரண்டு விடயங்களையும் தவிர்ப்பது தொடர்பாக மக்களுக்கு தெரியப்படுத்தப்படவில்லை என ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குதல், விகிதாசார பிரதிநிதித்துவத்திற்கு பதிலாக தனியாள் பெற்ற வாக்கின் அடிப்படையில் தெரிவு எனும் இரண்டு பிரபல முன்மொழிவுகளுக்கு மட்டுமே கருத்துக் கணிப்பினூடாக மக்களின் அங்க்காரம் பெற அரசாங்கம் விளைகின்றது என அவர் குற்றஞ்சாட்டினார்.தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றின் முன்மொழிவுகளின் விளைவாகவே இந்த மாற்றங்கள் ஏற்பட்டன என தான் சந்தேகிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.(இ-7)

## தேசிய பொங்கல் விழாவுக்கு பதிவுகளை மேற்கொள்ளலாம்

பலாலி கண்ணார் வயல் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நடைபெறவுள்ள பொங்கல் விழாவில் கலந்துகொள்ள விரும்பும் பொதுமக்கள் எதிர்வரும் 8 ஆம் திகதி வரை தமது பதிவினை மேற்கொள்ள முடியும் என ஆலய நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர்.

2016 ஆம் ஆண்டுக்கான தேசிய பொங்கல் விழா எதிர் வரும் 15ஆம் திகதி (வெள்ளிக்கிழமை) பலாலி கண்ணார் வயல் ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரமதர் ரணில் விக்கிரமசிங்க, மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், சிறுவர் இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வின் போது ஆலயத்தில் நடைபெறவுள்ள விசேட பூஜை வழிபாடுகளில் கலந்து கொள்ள விரும்பும் பொதுமக்கள் தமது பதிவினை 077 417 1780 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு எதிர்வரும் 8 ஆம் தீகதி நண்பகல் 12 மணி வரை மேற்கொள்ள முடியும்.

அத்துடன் எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 8 மணிக்கு வயாவிளான் மத்திய கல்லூரிக்கு அருகில் உள்ள இராணுவ காவலரண் அருகில் சமுகமளிக்குமாறு ஆலய நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (இ-7)

## உரிய முறையில் சேவையிலிருந்து விலகாத கடற்படையினரை கைது செய்ய நடவடிக்கை

பொதுமன்னிப்பு காலத்தில் உரிய முறையில் சேவையிலிருந்து விலகிக் கொள்ளாது தொடர்ந்தும் சேவைக்கு சமுகமளிக்காதிருக்கும் கடற்படை வீரர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடற்படையிலிருந்து முறையாக விலகிச் செல்லாது சேவைக்கு சமுகமளிக்காதவர்களுக்காக பொது மன்னிப்பு காலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

2015ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 31ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் 31ஆம் திகதி வரையில் இந்த பொது மன்னிப்புக் காலம் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே குறித்த காலத்தில் முறையாக சேவையிலிருந்து விலகாத கடற்படை வீரர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்படுவர் என கடற்படைப் பேச்சாளர் அக்ரம் அலவி தெரிவித்துள்ளார்.

எனினும் இந்த பொதுமன்னிப்புக் காலத்தில் 2553 கடற்படையினர் சட்ட ரீதியாக படையிலிருந்து விலகிக் கொண்டுள்ளதாக கடற்படைப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## சர்வதேச விடுமுறையாகும் வெசாக் பௌர்ணமி தினம்

இலங்கையில் பௌத்தர்களுக்கு மிகவும் முக்கியமான தினங்களில ஒன்றாக கருதப்படும் வெசாக் பௌர்ணமி தினம், சர்வதேச விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வெசாக் பௌர்ணமி தினம் ஐக்கிய நாடுகள் அமைப்பில் விடுமுறை தினமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.இதன்படி, எதிர்வரும் மே மாதம் 21 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் அமைப்பின் விடுமுறை தினமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அண்மையில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் 193 உறுப்பு நாடுகளும் கூடிய போது, வெசாக் பௌர்ணமி தினத்தை விடுமுறையாக அறிவிக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.இதற்கு மேலதிகமாக தீபாவளி பண்டிகை, பெரிய வெள்ளி, யூதர்களின் யோமி கிப்புர் தினம் உள்ளிட்ட 7 நாட்கள் சர்வதேச விடுமுறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

1999 ஆம் ஆண்டு முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் வெசாக் மற்றும் பொசன் பௌர்ணமி தினங்களை சர்வதேச தினங்களாக பிரகடனம் செய்ய வேண்டுமெனவும், சர்வதேச விடுமுறை தினங்களாக அறிவிக்க வேண்டுமெனவும் கோரியிருந்தார்.

சர்வதேச தினமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட போதிலும் விடுமுறை வழங்குவது குறித்த யோசனை நிராகரிக்கப்பட்டிருந்தது.

எனினும், யூதர்கள் யோமி கிப்புர் தினத்தை சர்வதேச விடுமுறை தினமாக அறிவிக்க வேண்டுமென தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வந்த நிலையில் இந்த தினமும் தீபாவளி, வெசாக் உள்ளிட்ட தினங்களும் சர்வதேச விடுமுறை தினங்களாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது என கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

## இலங்கையில் பசுமை துறைமுகங்கள் அமைக்கப்படும்- அமைச்சர் அமரவீர



இலங்கையில் எதிர்கால த்தில் அமைக்கப்படும் துறைமுகங்கள், பசுமை துறைமுகங்கள் என்ற அடிப்படையில் அமைக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

அம்பாந்தோட்டையில் மீன்பிடித்துறைமுகம் ஒன்றை நேற்று முன்தினம் அங்குரார்ப்பணம் செய்து வைத்த அமைச்சர் மஹிந்த அமரவீர இதனை தெரிவித்துள்ளார்.


நாட்டில் தற்போது செயற் படும் துறைமுகங்கள் புனர மைக்கப்படும். அத்துடன் வடக்குகிழக்கில் புதிய துறைமுகங்களும் அமைக்கப்படவுள்ளன.

இதேவேளை அம்பாந்தோட்டை மீன்பிடித்துறை முகத்தில் மணல் காரண மாக கடந்த காலங்களில் 6 விபத்துக்கள் இடம்பெற்று ள்ளன.

இந்தநிலையில் மீனவ ர்களின் பாதுகாப்பு கருதி தற்போது உரிய நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் தெரிவித்தார். (இ-7)

# போராடும் தென்னாபிரிக்கா

## புதிய மைல்கல்லை எட்டிய டி வில்லியர்ஸ்




இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியுள்ளது.

தென்னாபிரிக்கா- இங்கிலாந்து கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான 2வது டெஸ்ட் போட்டி கேப்டவுனில் நடைபெற்று வருகிறது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 6 விக்கெட் இழப்பிற்கு 629 ஓட்டங்கள் குவித்து டிக்ளேர் செய்தது.

பின்னர் தென்னாபிரிக்கா தனது முதல் இன்னிங்சை தொடங்கியது. அந்த அணி 3வது நாளான நேற்று 3 விக்கெட் இழப்பிற்கு 353 ஓட்டங்கள் எடுத்து விளையாடி வருகிறது.

அம்லா, டிவில்லியர்ஸ் இங்கிலாந்து பந்துவீச்சாளர்களுக்கு சவால் கொடுக்கும் வகையில் விளையாடியது.

அம்லா 157 ஓட்டங்களுடனும், டுபிளசி 51 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். டி வில்லியர்ஸ் 88 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

டி வில்லியர்ஸ் அரைசதத்தை கடக்கும்போது 8ஆயிரம் ஓட்டங்கள் என்ற மைல்கல்லை எட்டினார். 104 இன்னிங்சில் விளையாடி அவர் இந்த மைல்கல்லை எட்டியுள்ளார்.

இதற்கு முன் தென்னாபிரிக்காவின் கலிஸ் (170 இன்னிங்ஸ்), ஸ்மித் (173 இன்னிங்சிஸ்) 8ஆயிரம் ஓட்டங்களை கடந்துள்ளனர்.

போட்டியின் 4 ஆம் நாளான ஆட்டம் இன்று விறு விறுப்பாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது (க)

# ரெனேகட்ஸ் வெற்றி



பிக் பாஷ் இருபது-20 தொடரின் நேற்றைய லீக் போட்டியில் ஹோபர்ட் ஹரிகேன்ஸ்- மெல்போர்ன் ரெனேகட்ஸ் அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற மெல்போர்ன் ரெனேகட்ஸ் அணி பீல்டிங் தேர்வு செய்தது. அதன்படி முதலில் பேட்டிங் செய்த ஹோபர்ட் அணி 20 ஓவர்கள் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 140 ஓட்டங்கள் சேர்த்தது.

பின்னர் 141 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் மெல்போர்ன் ரெனேகட்ஸ் அணியின் ஆரோன் பிஞ்ச், கிறிஸ் கெய்ல் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். இருவரும் அதிரடியாக விளையாடினார்கள்.

கெய்ல் 15 பந்தில் 4 பவுண்டரி, 3 சிக்சருடன் 41 ஓட்டங்கள் குவித்து அவுட் ஆனார். பிஞ்ச் 39 பந்தில் 11 பவுண்டரியுடன் 60 ஓட்டங்கள் சேர்த்தார். இவர்களது அதிரடியால் மெல்போர்ன் ரெனேகட்ஸ் அணி 14 ஓவரிலேயே 144 ஓட்டங்கள் எடுத்து எளிதில் வெற்றி பெற்றது. (க)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன்

**இராஜரட்ணம் தனிஷ்ரன்**

எமது கிராமத்தில் வசிக்கும் **திரு.இராஜரட்ணம் தனிஷ்ரன்** கடந்த க.பொ.த (உ/த) பரீட்சை 2015 உயிரியல் பிரிவில் (3A) சித்தி பெற்று மாவட்ட நிலையில் 5ஆம் இடத்தை பெற்றமையை பாராட்டி வாழ்த்துகிறோம்

**நிற்சாமம் வாழ் மக்கள்**

(3075)

# 31–ம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

## அமரர் செல்லர் இராசமணி



எம் குலத்தின் விருட்சமாகி அன்புக்கு இலக்கணமாய் பாசத்தின் உறைவிடமாய் எம்முடன் வாழ்ந்து எம்மை எல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எமது அன்புத் தெய்வம் அமரர் செல்லர் இராசமணி அவர்கள் கடந்த 06.12.2015 அன்று சிவபதமடைந்தார்.அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (05.01.2016) செவ்வாய்கிழமை காலை 5 மணிக்கு கீரிமலை தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெற்று தொடர்ந்து மதியபோசன நிகழ்வு **மீசாலை கிழக்கு சித்திர வேலாயுதர் கோவில் திருப்புகழ் மண்டபத்தில்** நடைபெறும். இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் எமது குடும்பத்தலைவரின் இழப்பால் நாம் துயருற்றிருந்த வேளை ஓடிவந்து எமக்கு ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், தொலைபேசி, மின்னஞ்சல் மூலமாக துயரைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும், நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், மலர் வளையங்கள், துண்டுப்பிரசுரங்கள் மற்றும் அஞ்சலி உரையை நிகழ்த்தியவர்களுக்கும், அன்னார் வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டிருந்தபோது அவருக்கு சேவையாற்றிய வைத்தியர்கள், தாதியர்கள் அனைவருக்கும் எமது உளம் நிறைந்த நன்றிகளைத் நவிழ்கிறோம்


**இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.**

மீசாலை கிழக்கு,
மீசாலை.

*தகவல்:*
குடும்பத்தினர்

(3074)





இந்து பொதுச் சேவைக்கழகத்தின் தெய்வீக சபை அரங்கு மாலை மத்திய சனசமூக நிலையத்தில் அண்மையில் இடம்பெற்றது.இந்நிதழ்வில் யாழ். சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் ஜாக்ரத சைதன்யா சுவாமிகள் கலந்து கொண்டிருந்தார்.

## சட்டவிரோதமாக நீர் பெற்றவர்கள் 4 கோடியே 20 லட்சம் செலுத்தினர்

சட்ட விரோதமான முறையல் நீரினை பெற்றுக் கொணடோருக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு ஊடாக 4 கோடியே 20 இலட்சம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கொழும்பை அண்டிய நகரங்களில் 2015 ஜனவரி மாதம் முதல் டிசெம்பர் மாதம் வரை 9 ஆயிரத்து 500 இடங்களில் சோதனையிட்ட போது குடியிருப்பாளர்கள் சட்டவிரோதமான முறையில் நீரினைப் பெற்றுக் கொண்டமை தெரிய வந்தது.

இதில் மீற்றருக்கு அப்பால் வேறு மாற்று வழிகளை உபயோகித்து நீரினைப் பெற்றுக் கொண்டவர்கள் , நீர் வழங்கல் சபையால் நீர் விநியோகம் துண்டிக்கப்பட்டும் திருட்டு முறையில் நீரினைப் பெற்றுக் கொண்டவர்கள் என பலர் இனங் காணப்பட்டனர்.

இத்தகைய சட்ட விரோதச் செயல் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்தமை தொடர்பாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபைக்கு தெரிய வந்ததையடுத்தே குடிநீரினை சட்ட விரோதமாக பெற்றுக் கொண்ட குடியிருப்பாளர்களுக்கு தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# ஊழல், வீண்விரயம் என்பவற்றை தவிர்த்து மக்களின் குரலுக்கு செவிசாய்க்க வேண்டும்

## ஜனாதிபதி அறிவுரை

அனைத்து அரச நிறுவனங்களின் தலைமையகமான ஜனாதிபதி செயலகத்தில் பணியாற்றுகின்ற அனைவரும் ஊழல், வீண்விரயம் என்பவற்றை தவிர்த்து மக்களின் குரலுக்கு செவிசாய்க்க வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

வருட ஆரம்பத்தில் வட மத்திய மாகாணத்தில் உத்தியோகபூர்வ நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்ததுடன், ஜனாதிபதி செயலகத்தின் செயற்பாடுகளையும் அவர் நேற்று ஆரம்பித்து வைத்தார்.

இதேவேளை ஜனாதிபதி செயலகத்தில் கடமையாற்றுகின்ற ஊழியர்களை சந்தித்த ஜனாதிபதி, அவர்களுக்கு புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

தமக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பை உரிய முறையில் மேற்கொள்வதற்கு காட்டுகின்ற அக்கறை செயற்றிறன் மற்றும் தொழில் தன்மை என்பன சேவைக் காலத்தில் காணப்படுகின்ற சிரேஷ்டத்துவத்தை விட அதிக பெறுமதியை கொடுப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

ஊழியர்கள் சேவையாற்றுவது தனக்கல்ல இந்த நாட்டு மக்களுக்கு என்பதை கருத்திற்கொண்டு செயற்பட வேண்டும் என ஜனாதிபதி கூறியுள்ளார்.

அரச நிறுவனங்களை நிர்வகிக்கின்ற பிரதான இடமான ஜனாதிபதி செயலகம் நாட்டு மக்களின் தேவைகளை கருத்திற்கொண்டு செயற்படுகின்ற இடமாக அமைய வேண்டும் என அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியாக பதவியேற்று ஒருவருட காலத்தில் நாட்டில் முன்னெடுத்த பல வேலைத் திட்டங்களுக்கு ஜனாதிபதி செயலகஊழியர்கள் வழங்கிய பங்களிப்புக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்துள்ளார்.

அரச சொத்துக்களை மிகவும் அவதானமாக கையாள வேண்டும் என்பதோடு ஏனைய அரச நிறுவனங்களுக்கு ஜனாதிபதி செயலகம் முன்னுதாரணமாக அமைய வேண்டும் என ஜனாதிபதி செயலகத்தின் ஊழியர்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-7)


விற்பனையாகிறது

SPOKEN ENGLISH IN 50 DAYS (தமிழ் மூலம்)

50 நாட்களில் ஆங்கிலம் பேசுவோம். யாரும் படிக்கலாம்.

ஆக்கம்: சண்-மாஸ்ரர்

ஆ.சண்முகலிங்கம்

ரூபா 250/-

ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.

தொடர்புகளுக்கு:

(3052) 077 284 5000


## க.பொ.த. உ/த மீள்திருத்தத்திற்கு பெப்.5ஆம் திகதி வரை வாய்ப்பு

(கொழும்பு)

வெளியாகியுள்ள கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை மீள்திருத்த வேண்டுமாயின், அதற்காக எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5ஆம் திகதி வரை கால அவகாசம் வழங்கப்படும் எனவும், அத்தினத்துக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்க வேண்டும் எனவும் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தவிர, மேற்படி பெறுபேறுகள் தொடர்பான தகவல்கள் எதனையும் பெற வேண்டுமாயின் 011 278 4208, 011 278 4537 அல்லது 1911 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என்று பரீட்சைகள் ஆணையாளர் டபிள்யூ. எம்.என். ஜே.புஷ்பகுமார தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்து கருத்து தெரிவித்த பரீட்சைகள் ஆணையாளர், மீள் பரீட்சை செய்ய வேண்டுமாயின் அது தொடர்பான விண்ணப்பங்களை, பாடசாலை விண்ணப்பதாரிகளாயின் பாடசாலை அதிபர்கள் ஊடாகவோ தனிப்பட்ட பரீட்சார்த்திகளாயின் பரீட்சைத் திணைக்களத்துக்கு தனிப்பட்ட ரீதியில் தபால் மூலமாகவோ அனுப்பி வைக்க முடியும் என்றும் அவர்மேலும் அறிவித்துள்ளார். (இ-7)

## சிங்க லே இயக்கத்துக்கு ரோஹித அறிவுரை

சிங்க லே இயக்கம், பொதுபல சேனாவை போன்று செயற்படாது ஸ்ரீலங்காவின் இயக்கமாக செயற்பட வேண்டும்என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் இளைய மகன் ரோஹித ராஜபக்ஷ ஆலோசனை வழங்கியுள்ளார்.

தமது முகநூலில் இந்த கருத்தை அவர் பதிவு செய்துள்ளார். நுகேகொடையில் முஸ்லிம் வீடுகளின் வாயிற்கதவுகளில் சிங்க லே என்ற சொல் எழுதப்பட்டிருந்தது. இது இனவாதத்தை தூண்டும் செயல் என்று பலரும் விமர்சனம் செய்த நிலையிலேயே ரோஹித ராஜ பக்ஷ தமது கரு த்தை பதிவு செய்துள்ளார். (இ-7)


அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோவில் இலட்சார்ச்சனை பெருவிழாவில் இசை ஆராதனை செய்யும் கலைஞர்கள்

இசை ஆராதனை

நிகழ்ச்சி

05.01.2016 செவ்வாய்க்கிழமை

யாழ்ப்பாணம் இணுவையூர் திரு.சு.கோபிதாஸ் குழுவினர் வழங்கும் நாத சங்கமம்

வயலின்: திரு.சு.கோபிதாஸ்

மிருதங்கம்: திரு.க.கண்ணதாசன்

கடம்: திரு.ச.ரவிசங்கர்

கஞ்சிரா: திரு.நா.சிவசுந்தர சர்மா

முகர்சிங்: திரு.கி.செந்தூரன் (2901)

இசை ஆராதனை

முற்பகல் 11 மணிக்கு

அனுசரணை வழங்குவோர்

பிரதீபன், உரும்பிராய்


# இராசி பலன்

05.01.2016

(மார்கழி 20, செவ்வாய்க்கிழமை)

சூரிய உதயம் காலை 6.24 மணிக்கு,

ஏகாதசி பின்னிரவு 6.23 மணிவரை

விசாகம் முழுவதும்

சுபநேரம் 11.01-12.31 மணிவரை

இராகுகாலம் 3.31-5.01 மணிவரை

ஸ்மார்த்த ஏகாதசி விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>ரேவதி, அச்சுவினி<br>இரவு 12.19ற்கு<br>விரு-சந் | | |
| | | | |
| சூரி<br>புத | சனி<br>சுக் | சந்<br>செவ் | குரு<br>ராகு |

**மீனம்**
அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, செலவுகள் அதிகமாகும், ஆதாயமில்லாத அலைச்சல்களால் மனச்சோர்வு ஏற்படலாம், உடல் நலனில் கவனம் தேவை.

**மேடம்**
விருப்பங்கள் நிறைவேறும் நாள், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**இடபம்**
அதிகம் செலவாகுமென நினைத்த காரியமொன்று குறைந்த செலவில் முடியலாம், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள்.

**மிதுனம்**
மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், முன்னேற்றத்திற்கு உதவிய சிலரைச் சந்திப்பீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**கும்பம்**
குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், வீண் பழிகள் அகலும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**கடகம்**
தொலைதூரத்திலிருந்து நல்ல செய்திகள் வந்து சேரலாம், புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், புதிய திட்டங்களைத் தீட்டுவீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மகரம்**
உதிரிவருமானங்கள் வந்து சேரலாம், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சொல்லை செயலாக்கி காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**சிம்மம்**
ஆதாயம் அதிகரிக்கும் நாள், குடும்பத்தில் நல்ல காரியங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, நண்பர்கள் சொல்லும் ஆலோசனை உங்களுக்கு நல்லதாகத் தெரியும்.

**தனுசு**
கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், தூர தேசத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், பிரபலமானவர்களின் சந்திப்புண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**விருச்சிகம்**
வீட்டுப் பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும், தொழில் ரீதியில் எடுத்த முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு கிடைக்கும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**துலாம்**
காரிய வெற்றிக்கு கண்ணனை வழிபட வேண்டிய நாள், பக்கபலமாக நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பணப்பிரச்சினைகள் தீரும், கற்பனை மிகுதியான நாள்.

**கன்னி**
வாக்கு வாதங்களைத் தவிர்ப்பதன் மூலம் வளர்ச்சி காணும் நாள், வியாபாரத்தை விரிவுபடுத்த நினைப்பீர்கள் வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும் வகையில் அமையும்.

# உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள்-2015

2015 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப்பரீட்சைப் பெறுபேறுகள் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டன. இதில் யாழ்மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களின்பெறுபேறுகள்...

**யா/ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை**

**கணிதப்பிரிவு**

என்.மனோஜ்-3ஏ, ரி.துஜானனன்-3ஏ, எஸ்.கௌசிகன்-3ஏ, ஆர்.பிரசன்னா-3ஏ, ஜே.அமுதீசன்-2ஏபி, ஜே.கிரிசிகேசன்-2ஏபி, ஆர்கபில்ராஜா-2ஏபி, ஜே.கபிலானந்த்-2ஏபி, என். இசைப்பிரியன்-ஏ2பி, எஸ்.தனுஜன்- ஏ2பி, எஸ்.செரன்-2ஏபி, எஸ்.சிந்துஜன்-2ஏபி, எஸ்.சதீஸ்வரன்-2ஏபி.

**விஞ்ஞானப்பிரிவு**

கே.மகிந்தன்-2ஏபி, ஆர்.கீர்த்தன்-2ஏபி, ஆர்ஆதித்யன்-2ஏசி, கே.பிரசாந்த்-ஏ2பி, எம்.சிவதர்சன்-2ஏசி, ரி.பிரவீன்-2ஏசி, எஸ்கார்த்திகேயன்-ஏ2பி.

**வர்த்தகப்பிரிவு**

ரி.பிரணவன்-3ஏ, எஸ்.கரிகரசர்மா-ஏ2பி, எஸ்.அனுசன்-ஏ2பி, எம்.திவாகரன்-ஏ2பி.

**கலைப்பிரிவு**

என்.நிறோஜன்-ஏ2பி.

**யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை பருத்தித்துறை**

**கணிதப்பிரிவு**

வி.கோபிகா-3ஏ, என்.லாவன்யா-2ஏபி, பி.தர்சிகா-2ஏபி, ரி.தக்ஷா-2ஏபி, ரி.அனுசா-2ஏபி, எஸ்.சுதேசனா-ஏ2சி, வி.ஆதுரி-3பி.

**விஞ்ஞானப்பிரிவு**

பி.லக்ஷனா-3ஏ, கேஅருள்ஜெனனி-3ஏ, எஸ்.அபிநயா-2ஏபி, ரி.பிரதிகா-2ஏபி, கே.மயூரி-2ஏபி, எஸ்.சஜிதா-2ஏபி, வி.அகல்யா-2ஏபி, ரி.வேணுஜா-ஏபிசி, எஸ்.பவுனா-2ஏசி, கே.ஆர்திகா-ஏபிசி, பி.மயூரிகா-ஏபிசி, ஜே.சுகன்யா-ஏபிசி.

**வர்த்தகப்பிரிவு**

சி.சிந்துராணி-3ஏ, கே.நிறோசினா-2ஏபி, ஏ.ஜெயவ தனா-2ஏபி, ரி.அகிலா-ஏ2பி, கே.ராகவி-ஏ2பி, வி.கீர்த்திகா-ஏபிசி, ரி.மஞ்சுளா-ஏபிசி.

**கலைப்பிரிவு**

ஆர்.கோகிலவதனா-2ஏசி, வி.புனிதமலர்-ஏ2பி, பி.ரஜிகா-2ஏபி, என்.சுகன்யா-ஏ2பி, ஜே.பூங்கோதை-ஏபிசி.

**தொழில்நுட்பப்பிரிவு**

எம்.தர்சிகா-2ஏசி, ஆர்.ஜாலனி-2ஏபி, ரி.மிசருஜா-3பி, வி.சோபனா-3பி, கே.மெலோடினா-பி2சி, வி.சோபியா-ஏ2சி, எஸ்.சிவப்பிரியா-3சி, வி.வனஜா-3சி, எஸ்.ஜெயந்திகா-பி2சி, ஆர்.உமாசாளினி-3சி.

**யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி**

**விஞ்ஞானப்பிரிவு**

எஸ்.சிவதர்சிகா-2ஏபி, கே.ரூபினி-ஏ2சி, எம்.வெண்ணிலா-2பிசி, கே.ரஜிலதா-2சிஎஸ், சி.டிலோஜி-2சிஎஸ்.

**கணிதப்பிரிவு**

ஆர்.சுரேகா-பி2சி, எஸ்.கோகிலா-பி2சி, பி.சர்மிலா-2பிசி, கே.அர்ச்சனா-2பிசி, கே.கீர்த்தனா-2பிசி, வீ.கஜிதா-3சி.

**வர்த்தகப்பிரிவு**

எம்.காயத்திரி-3ஏ, எம்.இந்துஜா-3ஏ, பி.பிறேமிகா-2ஏபி, ரி.கோமகள்-3ஏ, ஆர்.நிஜந்தி-2ஏபி, எஸ்.பாரதி-ஏ2பி, ஜே.பிரியந்தி-3பி.

**கலைப்பிரிவு**

ஏ.லக்ஷனா-2ஏபி, கே.விதுர்சா-2ஏபி, எஸ்.தர்மினி-ஏ2பி, ஏ.மேரிலக்சிகா-2ஏசி, ஆர்.வித்தியா-ஏபிசி.

**யாழ்/இந்துக்கல்லூரி**

**தொழில்நுட்பப்பிரிவு**

பி.ஞானகீதன்-3ஏ, ஏ.யதுபிரியன்-2ஏபி, எஸ்.ஐங்கரன்-2ஏபி, ஜே.தர்சன்-2ஏபி, எஸ்.கணேசன்-ஏ2பி, எஸ்.புருசோத்-ஏ2பி, ஜி.சிவலக்சன்-ஏபிசி, பி.பஜீத்- 2பிசி, எஸ்.பவீசன்-பி2சி.

**யா/வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை**

**விஞ்ஞானப்பிரிவு-தமிழ்மொழிமூலம்-3ஏ**

எஸ்.சாரங்கா, எஸ்.தர்சிகா, ஏ.யதுஷ்னா, ஆர்.அபிராமி, என்.சாம்பவி, ஏ.சரண்யா, எஸ்.சாந்ததாரணி.

**ஆங்கிலமொழிமூலம்**

கே.சலோம் துஷ்யந்தி, ஜே.சர்மிஜா, எஸ்.பாவனா.

**தமிழ்மொழிமூலம்-2ஏபி**

கே.சுபேக்கா, கே.கீர்த்தனா, பி.ரிசாந்தினி, ஆர்.சிந்துஜா, ரி.வைஷ்ணவி, பி.விசாகஜா, ரி.சன்சியா, ரி.மதுவந்தி, கே.துஷ்யந்தினி, யு.கீர்த்திகா, எம்.பவித்திரா, எஸ்.நவனீதா, ரி.மிதுஷா, எம்.சுலக்ஷனா, எம்.தனுஷியா, பி.கோபிகா.

**கணிதப்பிரிவு**

**தமிழ்மொழிமூலம்**

எஸ்.சுகிர்தா-3ஏ, கே.சுஜான்-2ஏபி, கே.ரோஜினி-2ஏபி, வி.சிவசங்கீதா-ஏ2பி.

**ஆங்கிலமொழிமூலம்**

யு.சரண்யா-2ஏபி, கே.சரோன் வான்மதி-2ஏசி.

**வர்த்தகப்பிரிவு-3ஏ**

எம்.குகாயினி, ஏ.தர்சாளினி, ரி.அருணியா, எஸ்.ஹம்சவாகினி, கே.வனோஜா, ஜே.ஜீவிகா, எஸ்.சஞ்சீவி.

**ஆங்கிலமொழிமூலம்**

பி.கேசாயினி-2ஏசி, ஐகிருஷ்ணவேணி-2ஏபி, கே.மதுரகா-ஏ2பி, எஸ்.யதுர்ஷா-ஏ2பி, கே.அபர்ணா-ஏபிசி, எஸ்.கவியா-ஏபிசி.

**கலைப்பிரிவு**

பி.கதிர்தர்சினி-3ஏ, எஸ்.பானுஜா-2ஏசி, பி.அர்ச் சனா-ஏ2பி, கே.சிவரஞ்சினி-ஏ2பி, கே.விபிரீத்திகா பிரியா-ஏபிசி, ஏ.நிஷாந்தினி-ஏபிசி.

**பொறியியல் தொழில்நுட்பவியல் பிரிவு**

ரி.மேரிசுதர்சினி-2ஏசி, எஸ்.தர்சினி-ஏபிசி, ரி.வவிதா-ஏபிசி, எம்.நிஷாங்கினி-3பி.

**உயிர் முறைகள் தொழில்நுட்பவியல் பிரிவு**

ஆர்.சுதனா-3ஏ, ரிடினேஷா-3ஏ, ரி.சக்தி-2ஏபி, ஆர்.நிவேதா-ஏ2பி, பி.பவித்திரா-ஏ2பி.

**யா/மானிப்பாய் இந்துக் கல்லூரி**

**கணிதப்பிரிவு**

ஏ.நிதுர்சன்-3ஏ, எஸ்.மயூரன்-ஏபிசி, பி.பானுசன்-ஏபிசி, எஸ்.தனுசன்-ஏ2எஸ்.

**விஞ்ஞானப்பிரிவு**

ரி.சிந்துஜன்-ஏசிஎஸ், இ.துவாரகன்-2பிசி.

**வர்த்தகப்பிரிவு**

ஐ.இராகவன்-ஏ2சி, இ.தினேஸ்- ஏ2சி.

**உயிரியல் தொழில்நுட்பப்பிரிவு**

எம்.அபிசாந்-3சி, ஏ.ஆனந்த விஸ்ணு-2சிஎஸ்.

**பொறியியல் தொழில்நுட்பப்பிரிவு**

ஏ.ஜீசஸ்றொக்கின்சன்-2பிஎஸ், ஆர்.டினோஜன்-பி2சி, வைகஜன்-பி2சி, எஸ்.அர்ஜீன்-3சி, கே.திலீப்குமார்-3சி, ஜெ.திசாங்கன்-2சிஎஸ்.

**கலைப்பிரிவு**

பி.குருபரேசன்-ஏ2பி, கே.பிரதீபன்-ஏபிசி, ரி.தனுஜன்-2பிசி.

யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி

உயிரியல் பிரிவு

எல்.வேணிசா-ஏபிசி, கே.ஜஸ்மிதா- ஏ2சி ஏனையோரின் பெயர் விபரம் நேற்றைய வலம்புரியில் வெளியாகியிருந்தது.

# முயற்சியும் ஒத்துழைப்பும் இருந்தால் இலட்சியத்தை இலகுவில் அடையலாம்

## யாழ்.சன்மார்க்க மாணவி கீர்த்திகா தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

முயற்சியும் ஒத்துழைப்பும் இருந்தால் எமது இலட்சியத்தை இலகுவில் அடைய முடியும் என க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் கலைப்பிரிவில் யாழ்.மாவட்டத்தில் 9 ஆவது இடத்தைப் பெற்ற யாழ்.சன்மார்க்க மகாவித்தியாலய மாணவி நந்தகுமார் கீர்த்திகா தெரிவித்துள்ளார்.

எனது கல்விக்கும் வெற்றிக்கும் எனது பெற்றோரும் எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்களுமே முழு ஒத்துழைப்பை வழங்கினார்கள்.

பல பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளை சிறிய பாடசாலை எனவும் அங்கு கற்றல் வசதிகள் இல்லை எனவும் கூறி பலர் தமது பிள்ளைகளை சேர்க்க மறுக்கிறார்கள்.

ஆனால் உண்மை அது அல்ல சிறிய பாடசாலைகளிலும் ஊக்கத்துடன் படித்தால் வெற்றியை பெற்றுக் கொள்ள முடியும். அதை எனது பாடசாலையில் கல்விகற்று வெற்றியடைந்ததன் மூலம நான் நிரூபித்துள்ளேன்.

மாணவர்கள் குறைவாக உள்ள பாடசாலைகளில் அக்கறை கூடுதலாக இருக்கும். அத்துடன் எம்மீது மற்றவர்கள் வைத்த நம்பிக்கைகளைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணமும் சுற்றியுள்ளவர்களின் ஊக்கமும் தான் எது வெற்றிக்கு காரணமாக இருந்தது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# நீதிமன்றத்தை நாட முடிவு

## இ.போ.ச. யாழ்.சாலை அறிவிப்பு

பொதுமக்களது சேவையில் இலங்கை போக்குவரத்து சபையும் தனியார் போக்குவரத்து சேவையும் இரண்டு பக்கங்கள். எமது இரண்டு பகுதியினரது குறிக்கோள்களும் ஒன்றே. அந்த வகையில் நாம் இருவரும் முரண்படுவதும் மாற்று அறிக்கை விடுவதும் வேதனைக்குரியதாகும். ஆயினும் அவ்வாறான தொரு நிலைக்கு நாம் பலவந்தமாக தள்ளப்பட்டுள்ளோம்.

எம்மால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் குறிப்பிடப்பட்ட வாசகங்களை முற்றிலும் மறுப்பதாக தனியார் போக்குவரத்து உரிமையாளர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். அண்மையில் எமது பேருந்துகள் சேதமாக் கப்பட்டமை தொடர்பாக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டவர்களை உற்று நோக்கும் பொழுது இவர்களது மறுப்பறிக்கை சரியானதா? அன்றி தவறானதா? என்பதனை ஊகிக்க முடியும். வட மாகாணத்திற்குள் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகளுக்கு வழங்கப்படுகின்ற அனுமதிப்பத்திரம் தொடர்பாக நாம் முரண்படுவதனை விட்டு இதனை நீதிமன்ற நடவடிக்கைக்கு கொண்டு செல்ல நாம் தீர்மானித்திருக்கின்றோம்.

தனியார் பேருந்துகள் நேர அட்டவணைக்கு அமைவாக செயலாற்றுவதாக இருந்தால் அவர்களது நேர அட்டவணையினை சமர்ப்பிக்கும் பட்சத்தில் அதன் உண்மை நிலையை அறிய முடியும். இ.போ.ச. அதிகாரிகள் கடந்த காலங்களைப் போல் அன்றி ஊழியர்களது நலன்களிலும் சபையின் நலன்களிலும் அதிக அக்கறை செலுத்துவதனாலேயே ஊழியர்களுக்கு ஏற்படுகின்ற பாதிப்புகளுக்கு எவருக்கும் விலை போகாது குரல் கொடுக்கின்றோம் அதனை சுயநலம் என்று கூறுவதுஏற்க முடியாதது.

நாம் எப்பொழுதும் பொது மக்களின் சேவையிலேயே குறிக்கோளாக இருக்கின்றோம். 90% கழிவில் பாடசாலை பருவ காலச் சீட்டினை வழங்குகின்றோம். 35% கழிவில் அரச ஊழியர்களுக்கு பருவகாலச் சீட்டினை வழங்குகின்றோம். அத்துடன்தனியார்துறையினர் மாலை 7 மணியுடன் சேவையினை நிறுத்துகின்ற போதிலும் ஓரிரு பிரயாணிகளுடன் இரவு 8.30 மணிவரை உள்ளூர் சேவைகளை நடத்தி வருகின்றோம். இவ்வாறான எம்மை பார்த்து பொதுமக்களின் நலனில்அக்கறை இல்லாதவர்கள் என்றுகூறுவதுகேலிக்குரியதாகும்

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் இரு தடவைகள் கூட்டத்துக்கு அழைத்த போதும் சமுகம் தராது தமக்கு பாதிப்பு என்று கூறுவதை ஏற்க முடியாது எனவும் அதற்கான பொறுப்பினை இ.போ.சவே பொறுப்பேற்க வேண்டும் என்று கூறியிருப்பதானது நாம் கூட்டத்திற்கு சமுகமளிக்காத படியினால்தான் இவ்வாறு பேருந்து சேதப்படுத்தப்படுகின்றது என்பதனை சுட்டிக் காட்டுவதாக அமைகின்றது.

இவ்வாறான் நிலையில் எம்மால் எவ்வாறு கூட்டதில் கலந்து கொள்ள முடியும். பொதுமக்கள் பேருந்து சேவை வேண்டுமென கோரிக்கை விடுக்கின்ற பட்சத்தில் தனியார் சேவையினர் குறித்த சேவையினை நடத்தாது அச் சேவையினை இ.போ.சவே நடத்தி வருமானம் கூடுதலாக வரும் நேரத்தில் அப் பாதையில் தனியார் துறையினர் சேவையில் ஈடுபடுவது வழமையாகியுள்ளது. இந் நிலையில் தனியார் துறையினர் உண்மையினை திரிபுபடுத்தி செய்தியினை வெளியிட்டிருப்பது வேதனைக்குரிய விடயமாகும். எமது இ.போ.ச பேருந்துகள் கல்லெறிந்து தாக்கப்படும் பொழுது சம்பந்தப்பட்ட சாரதி, காப்பாளருக்கு அவர்களது பாதிப்பிற்கு ஏற்றவாறு சம்பளத்துடன் ஊடிய விடுமுறை வழங்கவேண்டியுள்ளது. மேலும் இப் பேருந்துகள் திருத்துவதற்கு ஒரு மாதத்திற்கு மேற்பட்ட காலம் தேவைப்படுகின்றது.

அத்துடன் எம்மால் கட்டுக் குத்தகை அடிப்படையில் பெறுகின்ற பேருந்துகளுக்கு ஒரு நாளைக்கு 3 ஆயிரத்து 500 ரூபா செலுத்த வேண்டியுள்ளது. பாதிக்கப்படுகின்ற பொதுமக்களுக்கு நட்டஈடும் வழங்க வேண்டியுள்ளது. இவ்வாறான நிலையில் எமது நிலைமையினை நன்குஅறிந்ததனியார்பேருந்து கம்பனிகளின் இணையம் இவ்வாறான செயற்பாடுகளை மூடி மறைக்க விளைவது மேலும் பாதிப்புக்களை ஏற்படுத்துமே ஒழிய நன்மையைத் தராது எனவே தவறுகளை சீர்தூக்கிப் பார்த்து வீண் விதண்டா வாதங் களை விடுத்து வன் செயலினை கைவிட்டு பொது மக்களுக்குநல்லசேவையினை செய்வதற்கு எமக்கு உதவ வேண்டுமென தனியார் பேருந்து கம்பனிகளின் இணையத்தினை கேட்டு கொள்கின்றேன் என இலங்கை போக்குவரத்து சபையின் யாழ்.சாலை முகாமையாளர் செ.குலபாலசெல்வம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ

# பட்டம் விடும் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

தமிழர் திருநாளான பொங்கல விழாவின் தார்ப்பரியத்தை மூவின இளைஞர் யுவதிகளுக்கும் தெளிவுபடுத்தும் முகமாக தேசிய பொங்கல் விழா யாழ். மாவட்டத்தில் நடைபெறவுள்ளது. இவ் விழாவினை முன்னிட்டு யாழ். மாவட்ட இளைஞர் சேவை மன்றத்தினால் பட்டம விடும் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கொள்கைத் திட்டமிடல் பொருளாதார விவகார அமைச்சு, வடமாகாண சபை மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இணைந்து தமிழர் திருநாளான பொங்கல் விழாவின் தார்ப்பரியத்தை மூவின இளைஞர் யுவதிகளுக்கும் தெளிவுபடுத்தும் முகமாக மாதிரி பொங்கல் விழா எதிர்வரும் 10 ஆம் திகதி வட்டுக்கோட்டை யாழ்ப்பாண தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தென்னிலங்கையைச் சேர்ந்த 750 சிங்கள, முஸ்லிம் இளைஞர், யுவதிகளும் வடமாகாணத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இவ் விழாவின் ஒரு அங்கமாக பட்டம் விடுதல் போட்டி இடம்பெறவுள்ளதால் இப் போட்டியில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் தமது பிரதேச செயலக பிரிவில் கடமையாற்றும் இளைஞர் சேவை அதிகாரியிடம் எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப்படிவத்தினை (முழுப் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம், தே.அ.அ.இல. மற்றும் பிரதேச செயலகப் பிரிவு அடங்கிய சுய விபரக்கோவையினை) அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

போட்டி தொடர்பான நிபந்தனைகளாக வால் இல்லாத பட்டங்களே அனுமதிக்கப் படுமென்பதோடு, பட்டத்தின் வர்ணனை, அளவு மற்றும் நுட்பம் ஆகியவற்றுக்கு புள்ளிகள் வழங்கப்படும்.

போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு முதலாவது பரிசாக 25 ஆயிரம் ரூபாவும், இரண்டாம் பரிசாக 15 ஆயிரம் ரூபாவும், மூன்றாம் பரிசாக 10 ஆயிரம் ரூபாவும், 5 ஆயிரம் ரூபா பெறுமதியான 5 ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படும் என யாழ். மாவட்ட தேசிய இளைஞர்சேவைகள்மன்ற உதவிஇயககுநர் அறிவித்துள்ளார். (இ-9)

# மனிதவுரிமைக்காக குரல்கொடுத்த மாமனிதர் குமார் பொன்னம்பலம்

**மனிதவுரிமைக்காக குரல் கொடுத்த துணிகரமிக்க அரசியல் வாதியும் சட்டவாதியுமான மாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்களின் பதினாறாவது நினைவு தினம் (2016.01.05) இன்றாகும். இதனை முன்னிட்டு இக் கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.**



அமரர் குமார் பொன்னம்பலத்தின் அகால மறைவு உலகம் வாழ் தமிழ் மக்கள் அனைவருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். தமிழீழ தேசத்தின் விடுதலைக்குள் சிங்கள–பௌத்த இனவாத ஆட்சியாளர்களது மிரட்டல்களுக்கும் பயமுறுத்தல்களுக்கும் பணிந்து போகாது தமிழ் பேசும் இனத்திற்காக அவர் ஓங்கிக் குரல் கொடுத்தார்.

இலங்கை ஒரு தீவு. அதில் இரண்டு தேசிய மக்கள் வாழ்கிறார்கள் என்றும் இந்த இரண்டு தேசிய இனங்களும் தேசிய மக்களும் இரண்டு சுதந்திரமாக சுயநிர்ணய உரிமையுடன் வாழ வேண்டும். அதுவே நிரந்தர அமைதிக்கு ஒரே வழியாகும் என்ற அரசியற் கோட்பாட்டைப் பகிரங்கமாக ஆதரித்து உள்நாட்டிலும் வெளி நாட்டிலும் குமார் பரப்புரை செய்து வந்தார்.

இலங்கையின் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற மனிதவுரிமை மீறல்கள், படுகொலைகள், கைதுகள், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் இவற்றிற்கு எதிராக நீதிமன்றப் படிக்கட்டுக்களில் ஏறி நீதி கோரி வாதாடினார். பாடசாலை மாணவி கிருசாந்தி குமாரசாமி பாலியல் வன்முறைக்குப் பலியாகிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தை நீதிமன்றம், உலக மனிதவுரிமை அமைப்புக்கள் இவற்றின் கவனத்திற்குக் கொண்டு வந்து அந்தக் கொடூரத்தை அம்பலப்படுத்தியவர் குமார் பொன்னம்பலம் அவர்களே.

கொழும்புத் தமிழ் கட்சிகளும் தமிழ் குழுக்களும் ஜனாதிபதி சந்திரிகாவிற்கு ஆதரவாக நாடாளுமன்றத்தில் செயற்பட்டபோது நாடாளுமன்றத்தில் மாதா மாதம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்ட அவசரகாலச் சட்ட விதிகளுக்கும் தமிழினத்துக்கு எதிரான இனப்படுகொலை யுத்தத்திற்கு வேண்டிய நிதி ஒதுக்கீட்டுக்கும் கையுயர்த்தி ஆதரவு தெரிவித்த போது அவற்றிற்கு எதிராகப் பேசியும் எழுதியும் வந்தவர் குமார் பொன்னம்பலம். இந்தக் கட்சிகளின், குழுக்களின் முகங்களைக் காட்டி தமிழ் மக்களின் பிரதிநிதிகள் இவர்கள்தான். இவர்கள் எங்கள் பக்கம் நிற்கிறார்கள் என்று ஜனாதிபதி சந்திரிகாவும் வெளியுறவு அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரும் உலகத்தை ஏமாற்றியபோது அவர்களின் சுயரூபத்தையும் நீதி நியாயத்தையும் கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள், கொழும்புக்கு வருகை தருகிற அரசியல்வாதிகள் போன்றவர்களுக்கு எடுத்துச் சொல்லி அவர்களது தார்மீக ஆதரவைத் திட்ட முயற்சி செய்தவர் குமார் பொன்னம்பலம். அவர் கொழும்பில் இருந்திரா விட்டால் வெளிநாட்டவர்கள் அரசாங்கத்து கருத்துக்களை கேட்டுக் கொண்டு இருப்பார்கள்.

அமரர் குமார் பொன்னம்பலம் அவர்கள் ஈழத்தமிழரின் மீது அரச படைகளாலும் அரச ஆதரவாளர்களாலும் இழைக்கப்படும் மனித உரிமை மீறல்களை வெளிப்படையாகக் கண்டித்து வந்தவுடன் அவற்றை கவனத்திற்குக் கொண்டு வருவதிலும், சட்டபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் முன்னின்று செயற்பட்டு வந்திருந்தார்.

மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலையில் இராணுவத்தினர் புரிந்த மனிதக் கொலைகள் பற்றி விசாரணை நடத்தப்பட்டபோது ஏனைய தமிழ்ச் சட்டத்தரணிகள் அஞ்சி ஒதுங்கிய வேளையில் அமரர் குமார் பொன்னம்பலம் துணிவுடன் முன் வந்து இராணுவத்திற்கு எதிரான விசாரணைகளில் தமிழ் பொது மக்கள் சார்பாக பங்கேற்றார்.

வெலிக்கடை, பூசா முகாம்களில் சட்ட நடவடிக்கைகள் இன்றி சிறைப் பட்டிருந்த நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் சார்பாக அவர் செயற்பட்டு அவர்களின் விடுதலைக்கு உதவியிருந்தார்.

புதுக்குடியிருப்பில் அரச விமானப்படை பொதுமக்கள் மீது நடத்திய விமானத் தாக்குதல்கள், மடு மாதா கோயில் சம்பவம் என்பவற்றை அவர் வெளிப்படையாகக் கண்டித்து அறிக்கையிட்டிருந்தார்.

கொழும்பில் இருந்து கொண்டு துணிவுடன் செயற்பட்ட ஒரு மனித உரிமை ஆர்வலரை இன்று ஈழத் தமிழர்கள் இழந்திருப்பது ஒரு ஈடு செய்ய முடியாத இழப்பாகும்.

ஈழத்தமிழர்கள் தமது எதிர் காலத்தை நிர்ணயிக்கும் சுய நிர்ணய உரிமைகொண்டவர்கள் என்பதையும் தமிழ் தேசம், சிங்கள தேசம் என்ற இரண்டு தேசங்கள் இணைந்தது தான் இலங்கை என்பதையும் ஆணித்தரமாக வலியுறுத்தி வந்தவர் அமரர் குமார் பொன்னம்பலம். இலங்கையில் தனித்து ஒலித்து வந்த இந்த ஜனநாயக மரபுவந்த தமிழ் அரசியல் வாதியின் குரல் ஒடுக்கப்பட்டமை மிதவாத அரசியல் நேர்மையான ஈழத்தமிழருக்கு இடம் இல்லை என்பதைக் காட்டுகிறது.

**தன்மானம் உள்ள தமிழனுக்கு மாமனிதர் குமார் பொன்னம்பலம் விடுவித்த அறிவுரை**

நீ உனது உயிரைப்பற்றிப் பயப்பட்டால் உனது வாயை மூடிக்கொண்டு இருக்கவேண்டும். நீ வாயை மூடிக் கொண்டே வாழவேண்டுமானால் அந்த வாழ்க்கையின் அர்த்தம் தான் என்ன? நான் ஒரு அடிமையாக வாழ்ந்து இனத் துவேசிகளும் ஆட்சியில் உள்ளவர்களும் கூறுபவைகளுக்குத் தலையாட்டிக் கொண்டிருக்க விரும்பவில்லை. அவர்கள் கூறுவதை நான் ஏற்றுக் கொள்ள முடியாவிடில் அவர்கள் கூறுவது எனது நம்பிக்கைக்கு எதிராக அமைந்தால் நான் ஏன் எனது மனச் சாட்சிக்கு எதிராக நடந்து மௌனம் சாதிக்க வேண்டும்.

க.மு.தர்மராஜா

# பக்கச்சார்பு

## நடத்துநர்கள் குற்றச்சாட்டு

பேருந்தில் பயணிகள் பயணச்சீட்டைப் பெற்றுக்கொள்ளாது பயணத்தை மேற்கொள்ளும் குற்றச்சாட்டில் பயணச்சீட்டை வழங்காத நடத்துநர்களுக்கு தண்டப்பணமும் தற்காலிக பணி நீக்கமும் வழங்கப் படுவதுடன் குறித்த குற்றத்திற்காக தமக்கு வழங்கப்படும் தண்டனைகளில் பக்கச்சார்பு காட்டப்படுவதாக இலங்கை போக்குவரத்துச் சபை யின வடபிராந்தியத்தில் கடமையாற்றும் நடத்துநர்கள் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

பேருந்தில் பயணிக்கும் ஒவ்வொருவரும் பயணச்சீட்டைப் பெற்றுக் கொண்டு பயணிக்க வேண்டும் என்பது கட்டாயமானது. இதனை வலியுறுத்தும் வகையில் "பயணச் சீட்டின்றி பேருந்தில் பயணிக்கும் பயணிகளுக்கு தண்டப்பணம் அறவிடப்படும்" என்ற வாசகம் பொறிக்கப்பட்ட அறிவுறுத்தும் துண்டுப் பிரசுரங்கள் பேருந்தில் ஒட்டப்பட்டுள்ளன.

இவ்வாறு உள்ள நிலையில் நாம் பேருந்தில் உள்ள பயணிகளின் எண்ணிக்கை குறைவாக உள்ள நிலையில் நேரடியாகச் சென்று பயணச்சீட்டை பெற்றுக்கொண்டுள்ளீர்களா என்பதை அறிவோம். மாறாக பேருந்தில் அதிகமான பயணிகள் பயணிக்கும் போது பயணிகள் அனைவருக்கும் கேட்கும் வகையில் உரத்து பயணச்சீட்டை பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்துவோம். எனினும், அவற்றையும் பொருட்படுத்தாமல் சில பயணிகள் பயணச்சீட்டு எடுக்காமல் பயணிப்பர். இத்தகைய நிலையில் பயணச் சீட்டு பரிசோதகர்களின் சோதனை நடவடிக்கையில் பயணச்சீட்டை பெறாதவர்கள் பிடிபட்ட நிலையில் எம்மீது தண்டனைகளும் தண்டப்பணமும் அறவிடப்படுகின்றன. ஆனால், குறித்த குற்றத்திற்காக பயணிகளுக்கும் தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும் என்ற நடைமுறை பின்பற்றப்படுவதில்லை.

இவ்வாறு குற்றத்திற்காக பயணிகளுக்கு தண்டனைகள் வழங்கலை நடைமுறைப்படுத்தாமல் விடுவதனாலேயே சில பயணிகள் பயணச்சீட்டை பெற்றுக்கொள்ளாமல் துணிச்சலாக பயணத்தை மேற்கொள்கின்றனர்.

இதேவேளை, பயணச்சீட்டை வழங்காத குற்றத்திற்கு எமக்கு வழங்கப்படும் தண்டனை, தண்டப்பணங்களிலும் பாரபட்சம் காட்டப்படுகின்றன. இதனால் நாம் பலவழிகளில் நெருக்கடிக்குள்ளாகி வருகின்றோம்.

இத்துடன், தற்காலிக பணிநீக்க தண்டனையின் கால அளவு அதிகமாக காணப்படுவதால் நாம் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியும் வருகின்றோம். இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தவேண்டும்.

மேலும், பயணச்சீட்டு வழங்கப்படாத குற்றத்திற்கு நடத்துநர்களாகிய நாம் தண்டனைகளுக்கும், தண்டப்பணத்திற்கும் உள்ளாகி வருவது போன்று, பயணச்சீட்டை பெறாது பயணிக்கும் பயணிகளுக்கும் உரிய அதிகாரிகள் தண்டனை வழங்கும் நடைமுறையை பின்பற்ற வேண்டும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பாக இலங்கை போக்குவரத்து சபையின் வடமாகாண பிராந்திய முகாமையாளர் (செயலாற்றல்) கே.கேதீசனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது குறித்த முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும் அது தொடர்பான கருத்துக்கள் எவையும் தற்போது தெரிவிக்க முடியாது எனவும் தெரிவித்தார். (இ-9)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா:14செவ் 12 இல்
உயரம்: 6'1"
தகைமை/தொழில்: Diploma/ அவுஸ்திரேலியா குடியுரிமை
தொ.இ: B/5372

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 18
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:சொந்ததொழில்
தொ.இ: B/5373

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 44
உயரம்: 168cm
தகைமை/தொழில்:ITபட்டதாரி/ ஆசிரியர்
தொ.இ: B/5374

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 16
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:பொறியியலாளர் கட்டார்
தொ.இ: B/5378

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 43செவ் 8 இல்
தகைமை/தொழில்:A/L/தனியார்
எதிர்பார்ப்பு:சைவபோசனம் அசைவமும் ஏற்கப்படும்
தொ.இ: G/3965

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 69செவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/3967

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 21செவ் 1 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: DIPLOMA/ ஆசிரியர்
தொ.இ: G/3971

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 24செவ் 2 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/3974

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# தண்ணிமுறிப்பில் மீள்குடியேறி வசிக்க விரும்பும் குடும்பங்கள் உடனடியாக பதிவு செய்து கொள்க!

(முள்ளியவளை)

தண்ணிமுறிப்புக் கிராமத்தில் மீள் குடியேறி வசிக்க விரும்பும் குடும்பங்களை உடனடியாக முள்ளியவளையில் இயங்கும் வன்னி மேம்பாட்டுப் பேரவையில் பதிவு செய்துகொள்ளுமாறு வடக்குமாகாண சபை உறுப்பினர் க.சிவநேசன் அறிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் விடுத்துள்ள ஊடகச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இக்கிராம மக்கள் இடம்பெயர்ந்து நீண்ட காலமாகியும் தம்மை மீள் குடியமர்த்தப் படாமையினால் இவர்கள் நம்பிக்கை இழந்த நிலையில் அயல் கிராமங்களில் சொந்தமாக சிறு துண்டுகள் காணிகளை கொள்வனவு செய்து தமது வீட்டுத்திட்டங்களையும் இங்கு கட்டியுள்ளனர். இதனால் இவர்களது காணிகள் பற்றைகள் நிறைந்து காடுகளாக மாறியுள்ளது. இதற்கு அடிப்படைக் காரணம் ஏனைய கிராம மக்களை மீள் குடியமர்த்திய வேளை இவர்களது காணிகள் இராணுவத்தினரால் விடுவிக்கப்படாத பிரதேசமாக இருந்தமையே ஆகும். இந்நிலையில் தாம் குடியமர்த்தப்படுவோமோ என்பதில் நம்பிக்கை இழந்த நிலையில் தமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு அயல் கிராமங்களில் தொடர்ந்து வசித்து வருகின்றனர். தற்போது இக்கிராமம் இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டுள்ள போதும் இவர்களது காணிகளிற்கு மிக அண்மையாக இராணுவ முகாம் ஒன்று காணப்படுவதால் இவர்கள் மீள்குடியமர்வதற்கு அஞ்சுகின்றனர். இந்த மக்கள் மீள் குடியமர்வதற்கு வசதியாக இராணுவத்தினர் தமது முகாமினை பின்நகர்த்தி உதவ வேண்டுமென அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். மேலும் தண்ணிமுறிப்புக் கிராமத்தில் மீள் குடியமர விரும்பும் மக்களிற்கு புலம் பெயர் மக்களின் நிதிப் பங்களிப்புடன் வன்னி மேம்பாட்டுப் பேரவை ஊடாக அவர்களின் காணிகளிலுள்ள பற்றைக்காடுகள் புள்டோசர் மூலம் தள்ளி துப்புரவு செய்யப்படும். இவர்கள் வசிப்பதற்கு அரை நிரந்தர வீடுகள் நிர்மாணித்து அமைத்துக் கொடுக்கப்படும்.

அத்துடன் இவர்களிற்கான போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் . இவர்களது பிள்ளைகளிற்கு விசேட கல்வி வசதிகள் அங்கேயே ஒழுங்கு செய்யப்படும் என மாகாண சபை உறுப்பினரின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இங்கு மீள் குடியமர்வதன் மூலம் வளம்மிக்க செழிப்பான இக்கிராமத்தை மேலும் வளம் நிறைந்த கிராமமாக மாற்ற முடியும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (2-302)

# மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ஒளிரும் வாழ்வு அமைப்பு உதயம்

முல்லைத்தீவு பிரதேச செயலகத்தில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் மாற்றுத் திறனாளிகளுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்குரிய கலந்துரையாடலொன்று பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

இதில் சுமார் 200 இற்கு மேற்பட்ட மாற்றுத் திறனாளிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது அங்கு உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் கருத்துத் தெரிவிக்கையில்,

இக்கலந்துரையாடலின் நோக்கமானது மாற்றுத் திறனாளிகளுக்கான அமைப்பு உருவாக்கப்பட்டு அவ்வமைப்பில் அவர்களே அங்கத்தவர்களாக இருக்க வேண்டும். அதனூடாகவே அவர்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கப்படவேண்டும்.

இவ்ஒளிரும் வாழ்வு அமைப்பானது முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேசங்களிலும் உருவாக்கப்பட வேண்டுமென்பதாகும்.

அந்தவகையில் துணுக்காய், மாந்தை கிழக்கு, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் ஆகிய இடங்களில் உருவாக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து தற்போது முல்லைத்தீவு கரைதுறைப்பற்றில் நேற்று ஒளிரும் வாழ்வு அமைப்பு உதயமானது.

இவ்வமைப்பின் ஊடாக மாற்றுத் திறனாளிகளுக்கான அனைத்து விதமான வாழ்வாதார உதவிகள் வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் கூறினார். (2-301)

# வவு. மாவட்ட அபிவிருத்திக் கூட்டம் ஜனவரி 15இற்கு முன் நடத்தப்படும்

(கற்குழி )

வவுனியா மாவட்ட அபிவிருத்திக் கூட்டம் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன் நடத்துவதற்கு ஒத்துழைக்குமாறு வவுனியா அரச அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார்.

வவுனியாவில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. பல்வேறு தேவைகள் இனங்காணப்பட்டுள்ளது என தெரிவித்த அவர் புதிய அரசாங்கம் பொறுப்பெடுத்தபின் மாவட்ட அபிவிருத்திக் கூட்டம் நடைபெறவில்லை. இதனால் ஆரம்பிக்கப்பட்ட பல திட்டங்கள் தொடர்பாக மீளாய்வு செய்ய வேண்டியுள்ளது .எனவே மிக விரைவில் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தை கூட்டி இதற்கு தீர்வு காண வேண்டிய தேவையுள்ளது. ஆகையால் சம்பந்தப்பட்டவர்கள் இதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் அரச அதிபர் கேட்டுள்ளார். (2-303)

# கிளிநொச்சியில் பல்சர் மோட்டார் சைக்கிள்களில் வலம் வரும் நபர்களால் வழிப்பறிக் கொள்ளை

கிளிநொச்சி ஏ-9 வீதியை அண்மித்த கணேசபுரம் பகுதியில் முகத்தை மூடி தலைக்கவசம் அணிந்து இலக்கத்தகடு மறைக்கப்பட்ட பல்சர் மோட்டார் சைக்கிளில் வலம்வரும் மர்மநபர்களால் வழிப்பறிக் கொள்ளைகள் நடைபெற்று வருவதாக பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, கடந்த இருநாட்களுக்கு முன்னர் கணேசபுரத்தைச் சேர்ந்த மோட்டார் சைக்கிள் திருத்துநர் ஒருவரிடம் இருந்த அவரது கைத்தொலைபேசியை பறித்துச் சென்றதுடன் கிளிநொச்சி கந்தசாமி கோவிலுக்கு முன்பாகவுள்ள புகையிரதக்கடவை பாதுகாப்பில் கடமை புரிபவரின் கைத்தொலைபேசியையும் பலவந்தமாகப் பறித்துச் சென்றுள்ளனர். அத்துடன் கணேசபுரம் முதலாம் வீதியால் பயணித்தவயோதிபப் பெண்ணொருவரிடமிருந்துமூவாயிரம் ரூபா பணத்தையும் பறித்துச்சென்றுள்ளனர்.

இதேபோன்றுகடந்தசிலநாட்களாக பல ரது கைத்தொலைபேசிகள் இந்த மர்ம நபர்களால் பறிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. எனவே பாதிப்பிற்குள்ளாகும் பொதுமக்களின நலனில் உரிய அதிகாரிகள் கவனமெடுத்து மர்ம நபர்களின் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென பாதிக்கப்பட்ட மக்கள வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-254)

# டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் அடையாளம் காணப்பட்டு புகையூட்டல்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள டெங்கு காய்ச்சல் காரணமாக நாளாந்தம் பெருமளவிலான மக்கள் பாதிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதன் தாக்கம் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகின்றது.

இதனைக் கட்டுப்பாட்டினுள் கொண்டு வருவதற்கான விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதற்காக முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் கடமையாற்றும்பொது சுகாதார வெளி உத்தியோகத்தர்கள், சுகாதார ஊழியர்கள் வரவழைக்கப்பட்டு யாழ்.மாவட்ட சுகாதாரப் பிரிவினருடன் இணைந்து டெங்கு கட்டுப் பாட்டு விசேட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கமைய நேற்றுக்காலை 6 மணி தொடக்கம் 9 மணிவரையும் மாலை 4 மணியிலிருந்து மாலை 6 மணி வரையும் பொது சுகாதார வெளி உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோரினால் டெங்கு நுளம்பிற்கான புகையூட்டல் நடவடிக்கை குருநகர் பகுதியில் மேற்கொள்ளப்பட்டது.

இதேவேளை பெருமளவான மக்கள் தங்கள் வீடுகள், காணிகள், பொது இடங்கள் ஆகியவற்றில் நுளம்பு பெருகும் இடங்களை இனங்கண்டு துப்புரவுப் பணியில் ஈடுபட்டனர்.

இந்நடவடிக்கையானது எதிர்வரும் நாட்களிலும் டெங்கு தாக்கம் காணப்படும் இடங்களில் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது . (2-301)




# கற்றல் உபகரணங்கள் மாணவர்களுக்கு வழங்கல்



மாணவத் தொண்டர்களுக்கான அப்பியாசப் புத்தகங்கள், புத்தகப் பைகள், பேனாக்கள் போன்ற கற்றல் உபகரணங்கள் நேற்று முன்தினம் காலை கிளிநொச்சி கிருஸணன் ஆலயத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

(பனிக்கன்குளம்)

வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்துள்ளார்.

கிளிநொச்சி கிருஸ்ணன் ஆலயத்தில் திருப்பாவை பாடல்களைப் பாடி வரும் மாணவர்களுக்குக கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் ஆலயப் பிரதமகுரு, திருப்பாவைப் பாடல்களைப் பாராயணம் செய்கின்ற அடியவர்கள் கோயில் நிர்வாகத்தினர் எனப்பலரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (2-281)

# ப.நோ.கூ. சங்கத்திற்கான கிளைக்குழுக்கள் தெரிவு

(பளை)

பச்சிலைப்பள்ளி பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கான 13 கிளைகளுக்குரிய கிளைக் குழு அங்கத்தவர்கள் தெரிவு கடந்த 27ஆம் திகதி முற்பகல் 10மணிக்கு பளை கோட்ட 13 பாடசாலைகளில் நடைபெற்றது.

இதன்போது கிளைகளுக்கான தலைவர், செயலாளர் தெரிவும் பொதுச் சபைக்கான அங்கத்தவர்கள் தெரிவு இடம்பெற்றது.

இதற்கமைய 13தலைவர்கள், 13 செயலாளர்கள் தெரிவாகினா.

பொதுச்சபைக்கான அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கேற்ப உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இதேவேளை பொதுச்சபைக்குரிய கூட்டம் மிக விரைவில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது பச்சிலைப்பள்ளி ப.நோ. கூட்டுறவு சங்கத்திற்கான தலைவர் தெரிவும் இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (2-291)

# நூலகம் அமையப் பெறவேண்டிய இடத்தில் மலசலகூடம் கட்டப்பட்டு பயன்பாடற்றுள்ளது

கிளிநொச்சி -கரைச்சி பிரதேசசபைக்குச் சொந்தமான நூலகம் அமைய வேண்டிய இடத்தில் மலசலகூடம் கட்டப்பட்டு அது பயன்பாடற்று காணப்படுகின்றது.

கரைச்சி பிரதேச சபைக்குச் சொந்தமான நூலகம் அமைய வேண்டிய இடத்தில் நூலகத்துக்கான கட்டடம் கட்டப்படவில்லை.

நூலகத்துக்குரிய மலசலகூடமானது, கடந்த 2011 ஆம் ஆண்டு கட்டப்பட்டு இன்று வரையில் பயன்பாடற்று காணப்படுகின்றது.

இது தொடர்பில் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் நா.வை. குகராசாவிடம் கேட்ட போது குறித்த இடத்தில் முன்னர் நூலகம் அமைந்திருந்ததாகவும் அந்தக்கட்டடம் முழுமையாக அழிவடைந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இதன் பின்னர் நூலகம் கட்டுவதற்கான நிதியானது பிரதேச சபையால் பல தரப்பினரிடமும் கோரப்பட்ட போதிலும் நிதி கிடைக்கவில்லை எனத் தெரிவித்தார்.

இந்நிலையிலே மலசலகூடம் கட்டுவதற்கான நிதி கிடைத்ததாகவும் மலசலகூடம் கடந்த 2011 ஆம் ஆண்டு கட்டப்பட்டு, 5 புதிய மலசலகூடங்கள் ஒரு மலசலகூடம் திருத்தியமைக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் பிரதேசசபை செயலாளர் ஜி.கிருஸ்ணகுமார் தெரிவிக்கையில், அரசியல் பிரச்சினைகள் காரணமாக நூலகம் அமைப்பதற்குரிய நிதி கிடைக்காமையால் அந்த இடத்தில் நூலகம் கட்டப்படவில்லை.

குறித்த நூலகம் தற்போது, மாவட்டச் செயலகத்துக்கு அருகிலுள்ள கட்டடம் ஒன்றில் இயங்குகின்றது.

பழைய நூலகம் இருந்த இடத்தில் கடைத்தொகுதிகளை கட்டுவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் 2016 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் இதனைச் செயற்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும் அதன் போது, கடைத்தொகுதிகளுக்கான மலசலகூடமாக அவற்றைப் பயன்படுத்தப்படும் எனக் கூறினார். (2-281)











முல்லைத்தீவு கேப்பாபிலவில் கடற்படையால் அபகரிக்கப்பட்டுள்ள தமது காணிகளை விடுவித்து அங்கு மீள்குடியேற்றக்கோரி கேப்பாபிலவில் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது. தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்றுக்காலை கேப்பாபிலவில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்ற இப்போராட்டத்தில் பெருமளவிலான மக்கள் கலந்து கொண்டிருந்தனர். இதன்போது பொதுமக்களை இராணுவ புலனாய்வாளர்கள் மற்றும் பொலிஸார் புகைப்படம் எடுத்து அச்சுறுத்தியிருந்தனர். (படங்கள்- உ. சாளின்)

# இருதயநோய் சிகிச்சை நிபுணராக தாய் மண்ணில் பணியாற்றுவேன்

**வவு/தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் விஞ்ஞானப்பிரிவில் முதலிடம் பெற்ற மாணவன் தெரிவிப்பு**



இருதய நோய் சிகிச்சை நிபுணராக தாய்மண்ணில் பணியாற்ற வேண்டும் என வவுனியா மாவட்டத்தில் விஞ்ஞானப் பிரிவில் முதலிடம் பெற்ற செந்தில்காந்தன் லக்சிகன் தெரிவித்துள்ளார்.


வெளியாகிய உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய மாணவன் செந்தில்காந்தன் லக்சிகன் விஞ்ஞான பிரிவில் 3 ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதல் நிலை பெற்றுள்ளார். தேசிய ரீதியில் 39 ஆவது இடத்தையும் பெற்றுள்ளார். இது குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் தெரிவிக்கையில்.

நான் இந்த நிலைக்கு வருவதற்கு உதவிய ஆசிரியர்கள், நண்பர்கள், பெற்றோர்கள் ஆகியோருக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

எதிர்காலத்தில் நான் இருதய நோய் சம்பந்தமான வைத்திய நிபுணராக வர வேண்டும் என்பதே என்னுடைய நோக்கமாக இருந்தது. இதற்காக முயற்சி செய்து தற்போது மாவட்ட மட்டத்தில் முதல் நிலை பெற்று படிப்பைத் தொடரவுள்ளேன். தாய் மண்ணில் இருந்து இருதய நோய் சிகிச்சை நிபுணராக பணியாற்ற விரும்புகிறேன். அதற்காக தொடர்ந்தும் உழைப்பேன் எனத் தெரிவித்தார். (2-250)

# இந்திய இழுவைப் படகு மோதியதில் முல்லை. மீனவர்களின் படகு சேதம்

**இந்திய இழுவைப் படகும் 8 மீனவர்களும் கரைக்கு கொண்டு வரப்பட்டு ஒப்படைப்பு**





முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் நேற்று அதிகாலை கடலில் மீன்பிடி தொழிலுக்கு சென்ற வேளை மீனவர்களின் ஒரு படகு இந்திய இழுவைப் படகினால் மோதுண்ட நிலையில் பலத்த சேதமடைந்து அப்படகு சிரமங்களுக்கு மத்தியில் மீனவர்களின் உதவியுடன் கரைக்கு இழுத்து வரப்பட்டது. இதேநேரம் படகு சேதமடைந்ததால் அதில் பயணித்த முல்லை. மீனவர்கள் கடலில் தத்தளித்த வேளை நீச்சல் தெரிந்த படியால் அருகில் மீன்பிடி படகுகளில் இருந்த மீனவர்களினால் காப்பாற்றப்பட்டனர். இந்நேரம் மோதுண்ட படகையும் உடைந்த நிலையிலிருந்த வெளி இணைப்பு இயந்திரத்தையும்ஏனையமீனவர்களின் உதவியுடன் கரைக்கு கொண்டு வந்து சேர்த்தனர்.

இதன்போது முல்லைத்தீவு மாவட்ட மீனவர்களின் 60 வலைகள் கடலில் மூழ்கி விட்டதாக கரைசேர்ந்த மீனவர்கள்கவலை தெரிவித்துள்ளனர்.

பின்னர் இந்திய இழுவைப்படகையும்அதில்மீன் பிடித்தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மீனவர்களை யும் முல்லை. மீனவர்கள் கரைக்கு கொண்டுவந்துசேர்த்தனர். இதேநேரம் முல்லைத்தீவு கள்ளப்பாடு தீர்த்தக் கரையில்ஏராளமான மீனவர்கள், பொது மக்கள்தகவலறிந்து கூடியிருந்தனர்.

இந்நிலையில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் அவ்விடத்திற்கு நேரில் சென்று மீனவர்களுடன் கலந்துரையாடினார்.




இதன்பின்னர் அவ்விடத்திற்கு விரைந்த முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர், கரைதுறைப்பற்று செயலாளர், வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆகியோரிடம் முல்லைத்தீவு மீனவர்கள், தமக்கான நஷ்டஈட்டைப் பெற்றுத் தரவேண்டுமென வலியுறுத்தினார். அத்துடன்8 இந்திய மீனவர்களையும் ஒப்படைத்தனர். பின்னர் அவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இதன்போது பொலிஸார், இராணுவத்தினர்பலர் அங்கு நின்றமை குறிப்பிடத்தக்கது. (2)

# கணக்காளராக வந்து பணியாற்றுவதே எனது அவா

**வர்த்தகப்பிரிவில் வவுனியா மாவட்டத்தில் முதலிடம் பெற்ற வவு/விபுலானந்த கல்லூரி மாணவன் தெரிவிப்பு**



நான் கணக்காளராக வந்து எமது மண்ணில் மக்களுக்கு பணியாற்றவேண்டும் என்பதே எனது அவா என வெளியாகிய க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் வர்த்தகப் பிரிவில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்ற வவுனியா விபுலானந்த கல்லூரி மாணவன் கிருஷ்ண சாமி தனிஸ்காந் தெரிவித்துள்ளார்.

தனது பெறுபேறு குறித்து கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

நான் இந்த நிலையை அடைவதற்கு பல ஆசிரியர்கள் மற்றும் தனியார் கல்விநிலையங்கள்பங்காற்றியுள்ளன.

அதேபோல் 2016 உயர்தர பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களும் எனக்கு உதவியுள்ளார்கள்.

இவ்வாறு எல்லோரது உதவியும் கிடைத்தமையால் தான் நான் இன்று இந்த நிலையை அடைந்துள்ளேன். அதனால் அவர்களுக்கு முதல் நன்றி கூறுகின்றேன்.

எமது பிரதேசம் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசம். எமது மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம் என்னிடம் உள்ளது. நான் கணக்காளராக வந்து எமது மண்ணில் மக்களுக்கு பணி யாற்ற வேண்டும் என்பதே எனது அவா என அவர் மேலும் தெரிவித்தார். (2-250)

## விளாத்திக் குளத்திலிருந்து இளைஞனின் சடலம் மீட்பு

வவுனியா புளியங்குளம் - விளாத்திக்குளத்தில் இருந்து இளைஞரொருவரின் சடலம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மீட்கப்பட்டு புளியங்குளம் வைத்தியசாலையில் வைக்கப் பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தை சேர்ந்த கவி என்று அழைக்கப்படும் 22 வயதான இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக புளியங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-281)

## க.பொ.த (உ/த) பரீட்சை பெறுபேறுகள்-2015

வவு/ஓமந்தை மத்திய கல்லூரி

ந.சதுயன்-சி2எஸ், ச.சிந்துஜன்-பி2எஸ், ம.மரியசாள்ஸ் அன்ரனி-2சிஎஸ், ப.கஜன்-ஏசிஎஸ், இ.இராஜசுஜாதன்-2சிஎஸ், றோ. யொநோஜன்-2ஏஎஸ், ச.சஜீபன்-ஏபிஎஸ், நா.கீர்த்திகா-2பிசி, த.சோபனா-2சிஎஸ்,வே.குகலினி-2சிஎஸ், பி.நிந்துஜா-2ஏசி, இ.தர்மிகா-பிசிஎஸ், வீ.ஜனனி-2பிஎஸ், வைகலைவாணி-ஏபிஎஸ், க.குகனேஸ்வரி-பிசிஎஸ், அ.காந்திமதி-2பிஎஸ், ச.சத்தியயாளினி-2பிசி, சே.சர்மிளா-சி2எஸ், அ.நிலக்சனா-2சிஎஸ்.

வர்த்தகப்பிரிவு

ஜெ.கோபிநாத்-3சி, க.கலைவதனன்-பி2சி, கு.விபூசன்-பி2சி, ந.லவண்யா-2சிஎஸ், கபிரதீகா-சி2எஸ்

விஞ்ஞானப்பிரிவு

கி.குசாந்தன்-3எஸ் (2)

# கம்பவாரிதிக்கு புருஷோத்தமனின் பதில்



பாகம் 02

பெருமதிப்பிற்குரிய கம்பவாரிதி அவர்களே!

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டமை ஒரு முரண்பாட்டைத் தோற்றுவித்தது எனக்கூறியிருந்தீர்கள்.

முதலமைச்சரின் அச் செயற்பாடு தொடர்பில் எவரும் ஐயம் கொண்டிருக்கத் தேவையில்லை. ஒரு சுமுகமான அறிகுறியை வெளிப்படுத்துவதென்பது அரசியல் இராஜதந்திரத்தின் தேவை என்பதை தாங்கள் மறுதலிக்கமாட்டீர்கள் என்று நம்புகின்றேன்.

இந்த அடிப்படையில் தான் ஜனாதிபதி மகிந்த முன்னிலையில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இது தொடர்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எந்த வகையிலும் மனக்கிலேசம் அடையத்தேவையில்லை. ஏனெனில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேதின நிகழ்வைக் கொண்டாடிய போது கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தர் ரணில் விக்கிரமசிங்கவோடு சேர்ந்து தேசியக் கொடியைத் தூக்கிப் பிடித்தார். சம்பந்தர் தேசியக் கொடியைத் தூக்கிப் பிடிப்பதில் எந்தத் தவறும் இல்லையே என்று நீங்கள் சொன்னால் அதற்கு நானும் ஆம் என்றுதான் சொல்லுவேன்.

ஆனால் 2009 ஆம் ஆண்டு வன்னிப் பெருநிலப்பரப்பில் எங்கள் உறவுகளைச் சங்காரம் செய்த கொடுமைத்தனம் எங்கள் இதயங்களை நெருப்பாக்கியிருக்கும் போது தேசியக் கொடியை தூக்கிப்பிடிப்பதில் நியாயம் இருப்பதாக நான் கருதவில்லை.

ஒவ்வொரு மனிதரும் செய்கின்ற செயல்கள் சந்தர்ப்ப சூழ்நிலைகளைக் கொண்டும் மதிப்பீடு செய்யப்படும் என்பதை நீங்கள் நிராகரிக்க மாட்டீர்கள் என நம்புகிறேன். அந்த வகையில் ரணில் விக்கிரமசிங்கவோடு சேர்ந்து தேசியக் கொடியை சம்பந்தர் தூக்கிப் பிடித்தார். இது கண்டு தமிழ்மக்கள் கொதித்தெழுந்த போது காளியின் வாகனம் சிங்கம். அதனால் எனக்கு சிங்கக் கொடிமீது அளவு கடந்த அன்பு என்று நியாயம் கூறினார் சம்பந்தர். இந்த நியாயத்திற்குள் தமிழ் மக்கள் தொடர்பில் சம்பந்தர் எத்தகைய நிலைப்பாட்டைக் கொண்டுள்ளார் என்பது தெளிவாகிறதல்லவா? இதுமட்டுமல்ல 2014 ஆம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்த மகிந்த ராஜபக்ஷ 2015ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த பின்னர் தேநீர் விருந்துபசாரம் ஒன்றை பாராளுமன்றத்தில் வழங்கினார்.

இதன்போது எங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் சிலர் மகிந்த ராஜபக்ஷவை ஆரத்தழுவிய காட்சியைக் கண்டபோது இராமனும் குகனும் கொண்டிருந்த அன்பின் வெளிப்பாடு இப்படித்தான் இருந்திருக்குமோ என்று எண்ணத் தோன்றிற்று.

ஆக இத்துணை சம்பவங்கள் நடந்திருக்கும் போது முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதென்பது ஒரு சம்பிரதாயச் சடங்கிற்குள் அமையுமேயன்றி அதனை விமர்சித்தல் எந்த வகையிலும் ஏற்புடையதன்று.

அன்பிற்குரிய கம்பவாரிதி அவர்களே! தாங்கள் எமக்கு எழுதிய அன்பு மடலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர், பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் விட்ட தவறுகள் பற்றியும் சுட்டிக்காட்டியிருந்தீர்கள். இது தங்களின் நடுநிலையான விமர்சிப்புக்கு தக்கசான்று என்றுணர்கிறேன்.

அதேநேரம் தமிழ் மக்கள் பேரவை என்ற ஒரு அமைப்பு உருவாகாமல் இருந்திருந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைகள் விட்ட தவறுகள் வெளிச்சத்திற்கு வந்திருக்குமா? என்பது கேள்வியே.

ஆக நீங்கள் தொடர்ந்தும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை கவனிப்பீர்களாக இருந்தால் பேரவையின் தோற்றத்திற்குப் பின்னர் அவர்கள் நிச்சயம் உசார் அடைவார்கள் என்பதைக் கண்டு கொள்வீர்கள்.

கூட்டமைப்பு உசார் அடைகின்ற போது அவர்கள் மக்களைத் தேடிச் செல்கின்ற சந்தர்ப்பங்கள் நிச்சயம் ஏற்படும். இதன் மூலம் மக்கள் படுகின்ற கஷ்டங்களை, துன்பங்களை கூட்டமைப்பின் பிரதிநிதிகள் அறிவதற்கு வாய்ப்பு உருவாகும் என்று நம்புகிறோம். அத்தகையதொரு மாற்றம் கூட்டமைப்பில் ஏற்பட்டால், அதற்குக் காரணம் மக்கள் இயக்கமாகிய தமிழ் மக்கள் பேரவையாகவே இருக்க முடியும்.

அன்புக்குரிய கம்பவாரிதி அவர்களே! தமிழ் மக்கள் பேரவை ஒரு அரசியல் கட்சியோ மாற்றுத் தலைமையோ அல்ல. அது ஒரு மக்கள் இயக்கம் என்பதை தங்களுக்கு மீளவும் உறுதிப்படுத்த விரும்புகின்றேன். எனினும் தமிழ்மக்கள் பேரவையை அரசியல் கட்சியாக- மாற்றுத் தலைமையாக பார்ப்பதில் இருந்து விடுபட முடியாதவராக நீங்கள் இருப்பதையும் என்னால் உணரமுடிகிறது.

அறத்தை, நீதியை உரைக்கக் கூடிய தாங்கள் உண்மையை உணரமுடியாத சூழ்நிலையில் இருப் பீர்களாயின் அது நாம் செய்த தவக்குறைவு என்றுரைப்பேனேயன்றி, நீங்கள் செய்த தவறு என்று நான் ஒருபோதும் நினைக்க விளையேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் ஆயிரம் பிரச்சினைகள் இருந்தாலும் அதனைக் கட்சிக்குள் தீர்ப்பதுதான் நியாயம். இதனை விடுத்து மாற்றணியோடு கைகோர்க்க முதலமைச்சர் நினைத்ததில் தங்களுக்கு துளியளவேனும் உடன்பாடில்லை என்று கூறியிருந்தீர்கள். இதற்காக விபீடணன் இராமனோடு சேர்ந்து போனதையும் உதாரணப்படுத்தியிருந்தீர்கள்.

எனது சந்தேகம் எல்லாம் மாற்று அணி என்று நீங்கள் யாரைப் பார்க்கிறீர்கள். யாரைக் கூறுகிறீர்கள் என்பதுதான்.


தமிழ்மக்கள் பேரவையில் இடம்பெற்றுள்ள அரசியல் கட்சிகள் அனைத்தும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள்.

ஆக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மட்டுமே விலகியிருந்தது. அப்படியானால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உரிமைக் கட்சிகள் அங்கத்துவம் பெற்றுள்ள தமிழ் மக்கள் பேரவையில் வடக்கின் முதலமைச்சர் இருப்பது எந்த வகையிலும் மாற்று அணியுடன் கைகோர்ப்பது என்பதாக இருக்க முடியாது.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எப், தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையிலான புளொட் ஆகிய கட்சிகள் இடம்பெற்றிருந்த போது அதுபற்றி யாருமே விமர்சிக்கவில்லை. கூட்டமைப்பில் இருக்கக்கூடிய அதே கட்சிகள், தமிழ் மக்கள் பேரவையில் இடம்பெற்றால் அது மாற்று அணி என்று பெயர் சூட்டப்படுவது எந்த வகையிலும் நியாயமாகாது என்பதை தாங்கள் அறியாதவர் அல்ல.

(நாளை தொடரும்)


புருஷோத்தமன்





காங்கேசன்துறை பொலிஸாரின் புதுவருட சத்தியப்பிரமாண நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை காங்கேசன்துறை பொலிஸ் மைதானத்தில் வடமேல் மாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் டபிள்யூ.எவ்.யூ.பெர்னாண்டோ தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் காங்கேசன்துறை பொலிஸார் மற்றும் உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். - (படங்கள்: தி.சோபிதன்)

வலி.வடக்கு பிரதேசத்துக்குட்பட்ட இரு சனசமூக நிலையங்களுக்கு தனது 2015 ஆம் ஆண்டில் குறித் தொதுக்கப்பட்ட நிதியொதுக்கீட்டின் கீழ் கட்டட புனரமைப்புக்கான நிதியுதவிகளை வட மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் அண்மையில் வழங்கி வைத்தார். வலி.வடக்கு (தெல்லிப்பழை) பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாகாண சபை உறுப்பினருடன் , வலி.வடக்கு பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலர், அதிகாரிகள், பயனாளிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.






தந்தையை இழந்த யாழ். பல்கலைக்கழக மாணவன் ஒருவனுக்கு சுவிஸ் வாழ் இராச நாயகம் என்பவரின் நிதியுதவி யுடன் துவிச்சக்கரவண்டி ஒன்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி யினால் அண்மையில் வழங்கப்பட்டது.

நிகழ்வின் நிழல்கள்




யாழ். எய்ட்டால் முன்னாள் போராளி களின் சுயதொழில் மேம்பாட்டிற் கான உதவிகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்ட போது...


கோப்பாய் வாழ்வின் எழுச்சி சமூக அபிவிருத்தி மன்றத்தின் கற்றல் மற்றும் வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு அண்மையில் கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார்.




வடமராட்சி-கரவெட்டி சிந்தாமணி முன்பள்ளியின் கலை நிகழ்வுகள் அண்மையில் இடம்பெற்றன. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

# இந்தியாவுக்கு தேவையான ஆயுதங்களை இந்தியாவிலேயே நாம் தயாரிக்க வேண்டும்

## பிரதமர் மோடி அறிவிப்பு



**இராணுவப் படைகளின் தேவைகளுக்கு ஏற்ப பாதுகாப்புத் துறையில் இந்தியா தன்னிறைவு பெற வேண்டுமானால் நமக்கு தேவையான நவீன ஆயுதங்களை இந்தியாவிலேயே நாம் தயாரிக்க வேண்டுமென பிரதமர் நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.**

கர்நாடகா மாநிலத்தில் ரூ.5 ஆயிரம் கோடி ரூபா மதிப்பில் உருவாகவுள்ள கிரீன்பீல்டு ஹெலி கொப்டர் திட்டத்துக்கு பிரதமர் மோடி நேற்று அடிக்கல் நாட்டினார்.

அதில் கலந்து கொண்டபிரதமர் மோடி மேலும் உரையாற்றுகை யில்,

இந்திய பாதுகாப்புப் படை இந் தியாவுக்காக எந்த தியாகத்தையும் செய்ய தயாராக உள்ளது.

அவர்களுக்கு வழங்கப்படும் ஆயுதங்களும், கருவிகளும் உலகி லேயே மிகச்சிறந்தவைகளாக இருக்க வேண்டும் என்பதற்கான நேரம் தற்போது வந்துவிட்டது.

ஆயுதங்களை இறக்குமதி செய்ய நாம் பல ஆயிரம் கோடி ரூபாயை செலவு செய்கிறோம்.

நமக்கு நவீன ஆயுதங்கள் தேவைப்படுகிறது. ஆனால் இந்த நவீன ஆயுதங்கள் நமக்கு தாம தமாக தான் கிடைக்கின்றன.

இந்த ஆண்டு உற்பத்தி ஆகும் ஆயுதங்கள் நமக்கு அடுத்த ஆண்டு தான் கிடைக்கின்றன.

மேலும், இறக்குமதி செய்யப் படும் ஆயுதங்கள் அதிக விலை மிக்கது. இதற்காக இந்தியா அதிக அளவு நிதியை செலவிட்டு வரு கிறது.

ராணுவப்படைகளின் தேவை களுக்கு ஏற்ப பாதுகாப்புத்துறையில் இந்தியா தன்னிறைவு அடைய வேண்டுமானால் நமக்கு தேவை யான நவீன ஆயுதங்களை நாமே உற்பத்தி செய்ய வேண்டும்.

அடுத்த 15 ஆண்டுகளில் 600 ஹெலிகொப்டர்களை இந்துஸ்தான் ஏரோநாட்டிக்கல் லிமிடெட் தயாரி க்கும் என எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

தற்போது தொடங்கி வைக்கப் பட்டுள்ள திட்டத்தால் துமாகுரு மாவட்டத்திற்கு மிகப்பெரிய முதலீடு கிடைத்துள்ளது.

இதன் மூலம் நேரடியாகவும், மறைமுகமாகவும், 4 ஆயிரம் வேலைவாய்ப்புகள் உருவாகக் கூடும்.

2018-ம் ஆண்டில் இருந்து உள் நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஹெலி கொப்டர்கள் பறக்கத் தொடங்கும்.

இந்த மாவட்டம் உலக வரை படத்தில் முக்கிய இடம் பெறும் என்று பிரதமர் நம்பிக்கை வெளி யிட்டார். (இ-7)

# வடகிழக்கு இந்தியாவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் 5 பேர் உயிரிழப்பு;50 இற்கும் மேற்பட்டோர் காயம்

(கவுகாத்தி)

வடகிழக்கு இந்தியாவில் ஏற் பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் 5 பேர் உயிரிழந்தனர். 50-க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்து உள்ளனர். மீட்பு பணிகள் தீவிர மாக நடைபெற்று வருகிறது.

நேற்று அதிகாலையில் வட கிழக்கு இந்தியா, மியன்மார், வங்காளதேசம் மற்றும் பூட்டானை உள்ளடங்கிய பகுதிகளில் 6.7 ரிக்டர் அளவுக்கொண்ட நிலநடுக் கம் ஏற்பட்டது.

இம்பாலுக்கு மேற்கே 29 கிலோ மீற்றர் தொலைவில் 57 கிலோ மீற்றர் ஆழத்தில், அதிகாலை 4.35 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது என அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது. மணிப பூர் தலைநகர் இம்பாலில் கட்டட ங்கள் இடிந்து விழுந்தது. பெரும் பாலான கட்டடங்களில் விரிசல் ஏற்பட்டது.

காலையில் நிலநடுக்கம் ஏற்பட் டதும், மக்கள் பீதியில் அலறியடித்து அவர்கள் வீடுகளை விட்டு ஓடினர். தாமெங்லாங் பகுதியில் அதிக மான கட்டடங்கள் இடிந்து விழுந்து உள்ளது. இம்பாலிலும் கட்டட ங்கள் இடிந்து விழுந்து உள்ளது. மார்க்கெட் பகுதிகளிலும் கட்டடங் கள் இடிந்து உள்ளது.



சில கட்டடங்கள் முற்றிலுமாக இடிந்துவிட்டது என்றும் தகவல்கள் வெளியாகியது. மேற்கு வங்காளம் ஒடிசா ஆகிய மாநிலங்களிலும் நிலஅதிர்வு உணரப்பட்டது. "இம் பாலில் நாங்கள் உணர்ந்த நில நடுக்கம் மிகவும் பெரியது," என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்து உள்ளனர்.

**5 பேர் உயிரிழப்பு**

மணிப்பூரில் நிலநடுக்கத்திற்கு 5 பேர் உயிரிழந்தனர் என்றும் 50-க்கும் மேற்பட்டோர் காயம் அடை ந்து உள்ளனர் என்றும் தெரிவிக்க ப்பட்டு உள்ளது. மக்கள் பெரிதும் அச்சத்தில் உள்ளனர். "இம்பாலில் இதுவரையில் நில நடுக்கத்திற்கு 5 பேர் உயிரிழந்து உள்ளனர் என் றும் 33 பேர் காயம் அடைந்து உள்ள னர் என்றும் தகவல்கள் தெரிவித்து உள்ளன. இம்பாலில் கட்டடங்கள் இடிந்து உள்ளது, குடியிருப்பு கட்ட டங்கள், அரசு அலுவலகங்கள் இடி ந்து உள்ளது என்று தகவல் தெரி விக்கப்பட்டு உள்ளது" என்று தேசிய பேரிடர் மேலாண்மை படை தரப் பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மீட்பு பணிகள் தீவிரம்**

அசாம் மாநிலம் கவுகாத்தியில் இருந்து தேசிய பேரிடர் மேலா ண்மை படை மீட்பு பணிக்கு பாதிக் கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பப்பட் டது. தொடர்ந்து மீட்பு மற்றும் நிவா ரணப் பணிகள் தீவிரமாக நடை பெற்று வருகிறது.

மணிப்பூர், அசாம், திரிபுரா, மிசோரம், மேகலயா, சிக்கிம், நாகாலாந்து மற்றும் மேற்கு வங் காளம் ஆகிய மாநிலங்களில் உள்ள கட்டுப்பாட்டு அறைகளுடன் தேசிய பேரிடர் மேலாண்மை படை பேசிஉள்ளது. "மணிப்பூர் மற்றும் நிலநடுக் கத்தினால் பாதிக்கப்பட்ட பிற மாநிலங்களுக்கும் மத்திய அரசு அனைத்து உதவிகளையும் செய் யும்," என்று மத்திய உள்துறை மந் திரி ராஜ்நாத் சிங் கூறி உள்ளார்.

**அசாமில் 20 பேர் காயம்**

வடகிழக்கு இந்தியாவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டதில் அசாம் மாநிலத்தில் 20 பேர் காயம் அடைந்து உள்ளனர். அசாமிலும் கட்டடங்கள் சேதம் அடைந்து உள் ளது. பல்வேறு கட்டடங்களில் விரிசல் ஏற்பட்டு உள்ளது.(இ-7)

# இந்தியாவிற்குள் ஊடுருவிய வங்காளதேசத்தினர் 29 பேர் கைதாகினர்

(பாஷிர்கத்)


வங்காளதேச நாட்டில் இருந்து சர்வதேச எல்லை வழியாக இந்தி யாவின் மேற்கு வங்காள மாநிலத் திற்கு அந்நாட்டினர் ஊடுருவி வருவது அதிகரித்து உள்ளது.

இந்த நிலையில் கடந்த சனிக் கிழமை இரவு வங்காளதேசத்தில் இருந்து மேற்கு வங்காள மாநிலம் வடக்கு 24 பர்கானா மாவட்டத்தில் பெங்கான் என்ற இடத்தில் உள்ள பெனாபோலே சோதனைச்சாவடி வழியாக இந்தியாவுக்குள் ஊடுருவ முயன்ற 8 பெண்கள், 4 குழந் தைகள் உட்பட 29 வங்காளதேச நாட்டினரை பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த எல்லை பாதுகாப்பு படையினர் கைது செய்தனர்.

பின்னர் அவர்களை வங் காளதேச எல்லை பாதுகாப்பு படையினரிடம் ஒப்படைத்தனர்.

வங்காளதேச எல்லை பாது காப்பு படையினர் 29 பேரையும் பெனாபோலே துறைமுக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். அங்கு அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு உள்ளது. (இ-7)

# உலகிலேயே மிகச்சிறிய பறக்கும் கமரா விற்பனைக்கு வருகிறது



ஆக்சிஸ் விடியஸ் என்ற நிறு வனம் உலகிலேயே மிகச்சிறிய பறக்கும் கமராவை தயாரித் துள்ளது.

1.5 இன்ச் அளவுக்கும் குறை வான மிகச்சிறிய குவாட்காப்டர் விமானத்தில் இந்த கமராவானது பொருத்தப்பட்டுள்ளது. 2.4 ஜிகா ஹெர்ட்ஸ் கன்ட்ரோலருடன் வெளி வரும் இந்த கமராவை ஆன்ட் ராய்டு, ஆப்பிள் ஸ்மார்ட்போன் அல்லது டேப்லட்டை பயன்படுத்தி நாம் இயக்கலாம்.

360 டிகிரியிலும் சுழலக்கூடிய இந்த கமரா 100 அடி உயரம் வரை பறக்கும். வை-பை இணைய இணைப்பு வழியாக இந்த கம ராவில் வானில் இருந்து பதிவு செய்யப்படும் வீடியோ நேர டியாக ஸ்மார்ட்போனுக்கு அனுப்பப் படுகிறது.

அதற்காக, பிரத்யேகமாக உருவாக் கப்பட்டுள்ள தொழில்நுட்பம்மூலம் உடனடியாக படம் பிடித்துக் கொண் டிருக்கும் வீடியோவை சமூக வலைத தளங்களிலோ, மின்னஞ்சலிலோ பகிர்ந்து கொள்ள முடியும். (இ-7)

# பதன்கோட் விமானதளத்தில் மீண்டும் துப்பாக்கிச் சூடு

## டில்லியிலும் தீவிரவாதிகள் ஊடுருவி உள்ளதாக தகவல்


பதன்கோட் விமானப் படை தளத்தில் மேலும் இரு தீவிரவா திகள் பதுங்கி இருப்பதால் மீண் டும் அங்கே துப்பாக்கிச் சூடு நடந்து வருவதாக தகவல்கள் வெளியாகி யுள்ளன.

பஞ்சாப் மாநிலத்தில் உள்ள பதன் கோட் விமானப்படை தளத்துக்குள் நேற்று முன்தினம் புகுந்து பெரும் நாச வேலைக்கு திட்டமிட்ட தீவிர வாதிகளின் முயற்சி முறியடிக்கப் பட்டது. தாக்குதலுக்கு வந்த 5 தீவிரவாதிகளும் சுட்டுக் கொல்லப் பட்டனர். பாதுகாப்பு படையினர் 7 பேர் உயிரிழந்தனர்.

பாதுகாப்பு படையினர் தீவிர வாதிகளை அழிக்கும் பணியில் ஈடுபட்டு உள்ளனர். இராணுவ போர் ஹெலகொப்டர்களும் பாது காப்பு மற்றும் தீவிரவாதிகளை தேடும் வேட்டையில் ஈடுபட்டு உள் ளது. விமானப்படை தளத்துக்குள் மேலும் இரு தீவிரவாதிகள் பது ங்கி இருப்பதால் மீண்டும் அங்கே துப்பாக்கிச் சூடு நடந்து வருகிறது.

இந்நிலையில், டில்லிக்குள் ஏற்கனவே இரு தீவிரவாதிகள் ஊடு ருவிவிட்டதாக தகவல்கள் வெளி யாகியுள்ளன. ரயில்களில் வெடி குண்டு வெடிக்கும் என்றும் மிரட் டல் விடுக்கப்பட்டுள்ளதால் கடும் சோதனைக்கு பின்னர் பாதுகாப் புடன் ரயில்கள் இயக்கப் படுகின் றன. (இ-7)

## அமெரிக்க ஜனாதிபதியின் கியூபா பயணம் எப்போது?



(வோஷிங்டன்)

அமெரிக்கா, கியூபா ஆகிய 2 நாடுகள் இடையே அரை நூற்றாண்டு காலமாக பகைமை நிலவி வந்தது. இப்போது அவ்விரு நாடுகள் பகைமைக்கு விடை கொடுத்துவிட்டு உறவுக்கு நட்புக்கரம் நீட்டியுள்ளன. தூதரக உறவும் மலர்ந்துள்ளது.

இந்த உறவினை மேலும் வலுப படுத்தும் விதமாக அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, கியூபாவுக்கு செல்லவுள்ளார்.

இது தொடர்பாக அமெரிக்க துணை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பென் ரோட்ஸ் ஹவாயில் நிருபர்களிடம் கூறுகையில், "கியூபாவுடனான உறவை வலுப்படுத்துவதற்காக ஜனாதிபதி பராக் ஒபாமா, அங்கு செல்ல உள்ளார். அவர் எப்போது செல்வார் என்பதை வெள்ளை மாளிகை அடுத்த 2 மாதத்தில் முடிவு செய்யும்" என தெரிவித்தார்.

ஒபாமா, கியூபா செல்வது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பயணமாக அமையும் என சர்வதேச நோக்கர்கள் கருதுகின்றனர. (இ-7)

# நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் இறுதி நாள்; வெளியான ரகசிய ஆவணங்களால் பரபரப்பு

(லண்டன்)

விமான விபத்தை சந்திப்பதற்கு முதல் நாளில் நேதாஜியின் பயணம் பற்றிய ரகசிய ஆவணங்களை இங்கிலாந்து இணையத்தளம் வெளியிட்டுள்ளது.

இந்திய சுதந்திர போராட்ட வீரர் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், 1945ஆம் ஆண்டு ஒகஸ்ட் 18ஆம் திகதி தாய்வானில் நடந்த விமான விபத்தில் சிக்கினார். அதில் அவர் இறந்து விட்டதாக கூறப்பட்ட போதிலும், அதை ஒருதரப்பினர் மறுத்து வருகிறார்கள். அதனால், நேதாஜி பற்றிய மர்மம் இன்னும் நீடித்து வருகிறது. இதுபற்றிய ரகசிய ஆவணங்கள் இன்னும் முழுமையாக வெளியிடப்படவில்லை.

இந்நிலையில், விமான விபத்தை சந்திப்பதற்கு முதல் நாளில் (17-8-1945) நேதாஜியின் பயணங்கள் பற்றிய ரகசிய ஆவணங்களை இங்கிலாந்தைச் சேர்ந்த ஓர் இணையத்தளம் வெளியிட்டுள்ளது. அந்த இணையத்தளத்தை சுயசார்பு பத்திரிகையாளரும், நேதாஜியின் உறவினருமான ஆஷிஸ் ரே நடத்தி வருகிறார்.

அந்த ஆவணங்களில் கூறப்பட்டுள்ளதாவது,

விமான விபத்துக்கு முதல் நாள், நேதாஜி, தாய்லாந்து தலைநகர் பாங்கொக்கில் இருந்து புறப்பட்டு, வியட்நாமில் உள்ள சியாகூனுக்கு போய்ச் சேர்ந்தார். அதற்கு இருநாட்களுக்கு முன்புதான், இரண்டாம் உலகப்போரில் தோல்வியை ஏற்று ஜப்பான் சரண் அடைந்திருந்தது. இருந்தபோதிலும், திட்டமிட்டபடி, நேதாஜி ஜப்பான் செல்வதற்கு நேரடி விமானம் கிடைக்கவில்லை.

இறுதியாக, ஜப்பான் அதிகாரிகளுக்கும், நேதாஜியின் இந்திய தேசிய இராணுவத்துக்கும் இடையே இணைப்பு பாலமாக செயற்பட்ட ஜெனரல் இசோடா என்பவர், தாய்வான வழியாக ஜப்பானுக்கு செல்லும் ஒரு விமானத்தில் இரண்டு இருக்கைகள் மட்டும் இருப்பதாக நேதாஜியிடம் தெரிவித்தார்.

இதன்மூலம், நேதாஜியின் பெருமபாலான ஆலோசகர்களும், அதிகாரிகளும் அவருடன் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

இருப்பினும், அந்த வாய்ப்பை ஏற்றுக்கொள்ளுமாறு நேதாஜிக்கு அறிவுறுத்தப்பட்டது. அவரும் ஏற்றுக் கொண்டு, தன்னுடன் பயணிப்பதற்கு இந்திய தேசிய இராணுவத்தைச் சேர்ந்த ஹபிப் உர் ரகுமானை தேர்ந்தெடுத்தார். அடுத்து, விமானத்தில் அளவுக்கு அதிகமான சுமை இருப்பதாக ஒரு பிரச்சினை எழுந்தது.

எனவே, நேதாஜி தனது புத்தகங்கள் மற்றும் ஆடைகளில் ஒரு பகுதியை அங்கேயே விட்டுச் சென்றார். அதன்பிறகும் சுமை அதிகமாக இருந்ததால், ஓடுபாதை முழுவதும் ஓடிய பிறகுதான் விமானம் மேலே எழும்ப முடிந்தது.

அதே விமானத்தில், ரஷ்ய விவகாரங்களை கவனிக்கும் ஜப்பானிய இராணுவ அதிகாரி ஷிதேயும் இருந்தார். அவர் சீனாவில் உள்ள மஞ்சூரியாவுக்கு சென்று கொண்டிருந்தார். அவருடன் நேதாஜியும் மஞ்சூரியாவுக்கு செல்ல வேண்டும் என்று அவருடைய ஆலோசகர்கள் யோசனை தெரிவித்தனர். அதை நேதாஜியும் ஏற்றுக்கொண்டார்.

விமானம் புறப்படுவதற்கு தாமதமாகி விட்டதால், திட்டமிட்டபடி தாய்வானுக்கு செல்வதற்கு பதிலாக, வழியில் வியட்நாமில் உள்ள டூரன் நகரில் அந்த விமானம் தரை இறக்கப்பட்டது. அங்கு ஜப்பானிய அதிகாரிகள், விமானத்தின் சுமையை குறைக்கும்விதமாக, விமானத்தை தகர்க்கும் இயந்திர துப்பாக்கிகள், வெடி பொருட்கள் உட்பட 600 கிலோ எடையுள்ள பொருட்களை கீழே இறக்கினர்.

அன்றைய இரவில், டூரன் நகரில் உள்ள ஹோட்டல் மோரினில் நேதாஜி தங்கினார்.

இவ்வாறு அந்த ஆவணங்களில் கூறப்பட்டுள்ளது.



நேதாஜி மர்மம் பற்றி விசாரிக்க, இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு அமைக்கப்பட்ட ஷாநவாஸ் கான் கமிட்டி முன்பு, நேதாஜியின் சுதந்திர இந்திய தற்காலிக அரசு, இந்திய தேசிய இராணுவம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அளித்த சாட்சியங்களும் இங்கிலாந்து இணையத்தளம் வெளியிட்ட இந்த இரகசிய ஆவணங்களில் இடம் பெற்றுள்ளன. (இ-7)




# இந்திய தூதரகம் மீது ஆப்கானில் தாக்குதல்

## 2 தீவிரவாதிகள் சுட்டுக்கொலை



(காபூல்)

ஆப்கானிஸ்தானில் இந்திய தூதரகம் மீது தாக்குதல் நடத்திய 2 தீவிரவாதிகள் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானின் வடக்கு நகரமான மசார்-இ-ஷெரிப்பில் இந்திய தூதரகம் செயற்பட்டு வருகிறது. நேற்று முன்தினம் தூதரகத்திற்குள் துப்பாக்கிகளுடன் நுழைய முயன்ற தீவிரவாதிகள் திடீரென குண்டு வீசி தாக்குதல் நடத்தினர்.

இத் தாக்குதலை நடத்திய 4 தீவிர வாதிகளில் 2 பேரை ஆப்கானிஸ்தான் இராணுவம்சுட்டுக்கொன்று விட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தாக்குதலுக்கு எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை.

பஞ்சாப் மாநிலம் பதன்கோட்டில இந்திய விமானப்படை தளம் மீது நடந்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில், ஆப்கானிஸ்தானில இந்திய தூதரகம் மீது தாக்குதல் நடந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

ஆப்கானிஸ்தானில் இந்திய தூதரகம் தாக்கப்படுவதும், தீவிரவாதிகளின் இலக்காவதும் தொடர் கதையாகவே உள்ளது.

2008 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் காபூல் நகரில்உள்ள இந்திய தூதரகம் மீது இரண்டுமுறை தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். இதில் 12 பேர் உயிரிழந்தனர். ஆப்கானிஸ்தானில் உள்ள ஹீராட் நகரில் கடந்த 2014 ஆம் ஆண்டு மே மாதம் ஆயுதம் ஏந்திய தீவிர வாதிகள் இந்திய தூதரக அலு வலகம் மீது தாக்குதல் நடத்தினர். தாக்குதலில் ஈடுபட்ட 4 தீவிர வாதிகளும் கொல்லப்பட்டனர்.

கடந்த 2013 ஒகஸ்ட் மாதம் ஜலாலாபாத்திலுள்ள இந்திய தூதரகம் தீவிரவாத தாக்குதலுக்கு இலக்காகியது. இதில் 9 பேர் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## உளவாளிகள் 5 பேர் சுட்டுக்கொலை

ஈராக் மற்றும் சிரியாவில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ்.தீவிரவாதிகள் உலக நாடுகளுக்கு அச்சுறுத்தலாக திகழ்கின்றனர். தங்களிடம் பிடிபடும் பிணைக்கைதிகளை கொடூரமான முறையில் கொலை செய்து காணொலி மூலம் அச்சுறுத்தி வருகின்றனர்.

சிறிது காலமாக கொலை காணொலிகளை வெளியிடாமல் இருந்த ஐ.எஸ்.தீவிரவாதிகள் அண்மையில் மீண்டும் ஒரு காணொலியை வெளியிட்டுள் ளனர். அதில் ஈராக் மற்றும் சிரி யாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளுக்கு எதிராக தாக்குதல் நடத்தும் சர்வ தேச படைகளுக்கு உதவும் 5 உளவாளிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். (இ-7)

# பொலிஸ்- தீவிரவாதிகள் ஈராக்கில் கடும் மோதல்!

## 19 பேர் உயிரிழப்பு 20 பேர் படுகாயம்

(பக்தாத்)

ஈராக்கில் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பாதுகாப்பு படையினர் மீது ஐ.எஸ் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைப்படை தாக்குதலில் 12 பேர் கொல்லப்பட்டனர்.

மொசூல் மாகாணத்தின் வடக்கு பகுதியில் உள்ள நினெவெஹ்-வை சேர்ந்த பாதுகாப்பு படையினர் ஸ்பெய்ச்சர் இராணுவ முகாமில் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். திக்ரிட் பகுதியில் ஊடுருவிய தீவிரவாதிகள் பொலிஸார் மீது தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர்.

எனவே பொலிஸார் நடத்திய பதில் தாக்குதலில் 7 ஐ.எஸ். தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

இருப்பினும் தீவிரவாதிகளில் 3 பேர் நடத்திய தற்கொலைப் படை தாக்குதலில் 12 பொலிஸார் கொல்லப்பட்டனர். அதில் 3 பேர் உயர் அதிகாரிகள்.

நடு இரவில் நடை பெற்ற இந்த தாக்குதலில் 20 பொலிஸார் படுகாயமடைந்தனர். இந்தத் தாக்குதலு க்கு ஐ.எஸ். தீவிரவாத இயக்கம் பொறுப்பேற்றுள்ளது. (இ-7)

# 47 பேருக்கு மரண தண்டனை விதித்த சவுதிக்கு ஈரான் ஜனாதிபதி கண்டனம்

(டெஹ்ரான்)

சவுதி அரேபியாவில், அரசுக்கு எதிராக போராட்டங்கள் நடத்தி வந்த, ஷியா பிரிவு மதகுரு உட்பட, 47 பேருக்கு, மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, ஈரான் தலைநகர் டெஹ்ரானில் உள்ள சவுதி தூதரகத்தின் மீது ஆர்ப்பாட்டக்காரர்கள் பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் நடத்தினர்.

மேலும், சவுதி தூதரகம் மீது பெற்றோல் குண்டு வீசி தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பாக 44 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



இந்நிலையில், ஷியா பிரிவு தலைவர் உட்பட 47 பேருக்கு மரண தண்டனையை நிறைவேற்றிய சவுதி அரேபியா அரசின் நடவடிக்கைக்கு ஈரான் ஜனாதிபதி ஹஸன் ரெளஹானி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

சவுதி அரசு தன்னுடைய பெயரினை உலக நாடுகளில் மட்டுமல்லாமல் இஸ்லாமிய நாடுகள் மத்தியிலும் கெடுத்து கொண்டது என்றும் ஈரான் ஜனாதிபதி விமர்சித்துள்ளார்.

அதேவேளையில், சவுதி அரேபிய தூதரகம் மீதான ஈரான் மக்களின் தாக்குதலும் முற்றிலும் நீதியற்றது என்று அவர் கூறியுள்ளார். ஈரான மக்கள் இதுபோன்ற முரட்டுதனமான நடவடிக்கையில் ஈடுபட கூடாது என்றும் சட்ட ரீதியான அணுகுமுறையை கையாள வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார். (இ-7)

## அரை சொகுசு பேருந்துக்களில்
# ஆசன எண்ணிக்கைக்கு அமைய பயணிகள் மட்டுப்படுத்தப்படுவர்

அரைச் சொகுசுப் பேருந்தில் ஆசனங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பயணிகள் மாத்திரமே ஏற்றப்பட வேண்டும் எனவும் இதனை மறுக்கும் நடத்துநர்களுக்கு தண்டனை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் எம்.ஏ.பி.ஹேமச் சந்திர தெரிவித்துள்ளார்.

இந்நடைமுறையானது பங்குனி மாதம் முதலாம் திகதி முதல் அமுல் படுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆசனங்களின் எண்ணிக்கைக்கு மேல் பயணிகளை ஏற்றிச்செல்வதால் பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய பிரச்சினைகளை கவனத்தில் கொண்டே இந்நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளது.

இதில் பங்குனி மாதத்திற்குப் பின் நடத்துநர் ஒருவர் இவ்வாறான செயற்பாட்டைச் செய்வாராயின் முதல் தடவை 2 ஆயிரம் ரூபா தண்டப்பணமாக அறவிடப்படும்.

2 ஆவது தடவை அதே நடத்துநர் குற்றம் இழைப்பின் 4 ஆயிரம் ரூபா தண்டப்பணமாக அறவிடப்படும்.

3 ஆவது தடவை எனில் 40 ஆயிரம் ரூபா தண்டப்பணமாக அறவிடப்படும் என்பதுடன் அரைச் சொகுசுப் பேருந்துகள் போக்கு வரத்துச் சேவையில் ஈடுபடுவது தடைசெய்யப்பட்டு சாதாரண வழித்தட பேருந்துகளே சேவையில் ஈடுபடுத்தப் படுமென அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை- 04.01.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 141.94 | 146.16 |
| பவுண்ட் | பிரிட்டன் | 208.05 | 215.76 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 153.14 | 159.50 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 140.92 | 147.03 |
| டொலர் | கனடா | 101.40 | 105.77 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 101.51 | 106.47 |
| டொலர் | சிங்கப்பூர் | 99.28 | 103.27 |
| ரூபா | இந்தியா | 2.1752 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 382.8433 |
| குவைத் | டினார் | 474.5129 |
| ஓமான் | ரியால் | 374.2119 |
| கட்டார் | ரியால் | 39.5578 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.3935 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.2330 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 160 | 160 | 180 | 150 | 180 |
| உருளைக்கிழங்கு | 80 | 60 | 55 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 600 | 450 | 400 | 600 | 450 | 600 |
| தக்காளி | 100 | 80 | 60 | 100 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 30 | 50 | 40 | 60 |
| கோவா | 150 | 140 | 100 | 180 | 140 | 180 |
| கரட் | 200 | 250 | 200 | 200-400 | 400 | 300 |
| பூசணி | 70 | 50 | 35 | 60 | 80 | 50 |
| புடோல் | 80 | 100 | 60 | 100 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 60 | 50 | 50 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 180 | 160 | 140 | 120 | 200 | 140 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 75 | 100 | 80 | 80 |
| பாகற்காய் | 160 | 200 | 140 | 200 | 200 | 250 |
| வெண்டிக்காய் | 180 | 100 | 90 | 200 | 120 | 160 |
| கருணைக் கிழங்கு | 90 | 80 | 70 | 80 | 100 | 80 |
| பயற்றங்காய் | 150 | 130 | 120 | 180 | 120 | 150 |
| லீக்ஸ் | 150 | 130 | 140 | 160 | 140 | 120 |
| பீற்றூட் | 200 | — | — | — | 240 | — |
| கறிமிளகாய் | 400 | 400 | — | 400 | 400 | 300 |
| முருங்கைக்காய் | 500 | — | — | — | — | — |
| போஞ்சி | 250 | — | — | 240 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 150 | — | — | — | 120 | — |
| கீரை - 1 பிடி | 30 | 30 | 50 | 40 | 50 | 40 |
| தேசிக்காய் | 100 | 100 | 80 | 110 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 25-35 | 50 | 30-35 | 50 |
| இராசவள்ளி | 160 | 160 | 100 | 140 | 150 | 150 |
| வெங்காயப்பூ | 300 | 200 | — | 240 | — | 300 |
| முள்ளங்கி | 100 | 100 | — | 80 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 25 | 30 | 30 | 40 |
| வல்லாரை | 10 | 10 | 15 | 10 | 20 | 30 |
| ஈரப்பலா | 40 | 50 | 40 | 70 | 100 | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு
## கறுப்புச் சட்டை அணிந்து எம்.ஜி.ஆர் போராட்டம் 71

...அதே நேரத்தில் அங்கு வன்முறை மூலம் இந்திய மக்கள் குறிப்பாக இலங்கைத் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது.

அந்த வன்முறைக்கு கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அங்கு நடந்த வன்முறையில் இந்தியர்கள் பலியாகியுள்ளனர்.

இதைப் பார்க்கும்போது கவலைப்படாமல் இருக்க முடியவில்லை. அதனால் இலங்கைக்கு எங்களது கடுமையான கண்டனத்தைத் தெரிவிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

### நட்புறவு

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே நீண்டகாலமாக நல்ல நட்புறவு இருந்து வருகிறது.

இந்த நேரத்தில் அங்கு பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவுவதுதான் மிகவும் முக்கியம். எனவே இந்தப் பிரச்சினையில் யாரும் உணர்ச்சிவசப்பட்டு காரியங்களில் ஈடுபட வேண்டாம். அப்படி நடந்துகொண்டால் அது பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்குப் பதிலாக மேலும் அவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்திவிடக்கூடும்.

### வெளிநாடுகளில்

பல்வேறு வெளிநாடுகளில் ஏராளமான இந்தியர்கள் வசிக்கிறார்கள். அவர்களுடைய நலனிலும் பாதுகாப்பிலும் இந்த நேரத்தில் நாம் அக்கறை காட்ட வேண்டும். எனவே மிகவும் எச்சரிக்கையுடன் இந்தப் பிரச்சினையை அணுக வேண்டும்.

வெளிநாடுகளில் உள்ள விவகாரங்களில் தலையிடுவதில் எப்போதுமே இந்தியாவுக்கு நம்பிக்கை இருந்ததில்லை.

இவ்வாறு இந்திரா காந்தி கூறினார்.

### சிறப்புப் பிரதிநிதி

சுதந்திர தின விழாவில் அமிர்தலிங்கம் சிறப்புப் பிரதிநிதியாகப் பங்கேற்றார். ஒரு குட்டி தேசத்தின் எதிர்க் கட்சித் தலைவர், சுதந்திர தின விழாவில் சிறப்புப் பிரதிநிதியாகக் கலந்துகொள்வது இதுவே முதல் முறையாகும்.



இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து, முதலமைச்சர் எம்.ஜி.ஆரும் அமைச்சர்களும் அ.தி.மு.கவினரும் கறுப்புச் சட்டை அணிந்தார்.

இலங்கை வெலிக்கடை



சிறையில் தங்கதுரை, குட்டிமணி, ஜெகன் உள்ளிட்ட தமிழ்ப்போராளிகள், சிங்களக் கைதிகளால் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்குப் பிறகும் இலங்கையில் கலவரங்கள் தொடர்ந்தன. இதற்கு மிகுந்த கவலை தெரிவித்த முதலமைச்சர் எம்.ஜி.ஆர் சென்னை கோட்டையில் சுதந்திர தின விழா அலங்கார அணி வகுப்பு இல்லாமல் எளிமையான முறையில் நடைபெறும் என்று அறிவித்தார்.

இலங்கைப் பிரச்சினை குறித்து அ.தி.மு.க. செயற்குழுக்கூட்டம் ஓகஸ்ட் 13 ஆம் திகதி சென்னையில் அவைத் தலைவர் ஈ.வே.அ. வள்ளிமுத்து தலைமையில் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். முன்னிலையில் நடந்தது. இந்தக் கூட்டத்தில் கீழக் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### வீர அஞ்சலி

1. இலங்கை வாழ் தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராடி, இலங்கை இராணுவத்தினராலும் சிங்கள இனவெறியர்களாலும் படுகொலைக்கு ஆளான தமிழர்களுக்கு இச் செயற்குழு தன் வீர அஞ்சலியைச் செலுத்துகிறது.

இலங்கையில் மனித உரிமைகளுக்காகவும் தமிழகத்தின் பாதுகாப்பிற்காகவும் போராடி பல கொடுமைகளை அனுபவித்துச் சிறைபட்டிருந்த குட்டிமணி, ஜெகன், தங்கதுரை போன்ற ஐம்பதுக்கும் மேற்பட்ட விடுதலை வீரர்கள் சிங்களக் கைதிகளால் மிகக் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டதை இச்செயற்குழு வன்மையாகக் கண்டிப்பதோடு உயிர்துறந்த வீரர்களுக்கு வீர வணக்கம் செலுத்துகிறது.

இலங்கையில் இராணுவத்தினர் சிங்கள வெறியர்கள் ஆகியோரின் கொடுமைகளுக்கு ஆளாகி படுகொலை செய்யப்பட்டு உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் படுகாயமுற்று அவதிகளுக்கு உள்ளாகியிருக்கும் தமிழ் பெருங்குடி மக்களுக்கும் வீடு இழந்து தொழில் இழந்து சொத்து சுதந்திரம் இழந்து தவித்திடும் மக்களுக்கு இச்செயற்குழு தன் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.



(தொடரும்)

# சீனாவை எதிர்த்து களத்தில் அமெரிக்கா

## பாரிய திட்டத்துடன் இலங்கையில் காலூன்றுகிறது

**இலங்கையில் பெரிய முதலீட்டாளராக விளங்கும் சீனாவின் ஆதிக்கத்தை விரைவில் அமெரிக்கா தகர்த்துவிடும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. 1.4 பில்லியன் டொலர்கள் ஒதுக்கீட்டில் போட்சிட்டி திட்டத்தை ஆரம்பித்துள்ளதன் மூலம் சீனா, இலங்கையின் பாரிய முதலீட்டாளராக பரிணமித்துக் கொண்டிருக்கிறது. இந்தநிலையில் தென்னிலங்கையில் 2.5 பில்லியன் டொலர்கள் முதலீட்டுடன் அமெரிக்கா, எரிபொருள் சுத்திகரிப்பு மையங்களை அமைக்கவுள்ளது என தெரிய வருகிறது.**

இந்த முதலீடுகளை அமெரிக்காவின் டெக்ஸாஸ் மாநிலத்தில் உள்ள ப்ளுர் கோப்பரேசன் உட்பட்ட நிறுவனங்கள் மேற்கொள்ளவுள்ளன.

ப்ளுர் கோப்பரேசன், உலகளாவிய பிரதிநிதித்துவத்தை கொணடுள்ளது.

இதன் அடிப்படையில் போச்சுன் சஞ்சிகையின் தரப்படுத்தலில், 2015 ஆம் ஆண்டிலும் தொடர்ச்சியாக நான்காவது தடவையாக முதலிடம் பெற்றுள்ளது.

இந்த நிறுவனத்தின் திட்டப்படி நாளொன்றுக்கு நூறாயிரம் பீப்பாய் எரிபொருள் சுத்திகரிப்புக்கு உள்ளாக்கப்படவுள்ளன.


இந்தநிலையில் நிறுவனத்தின் பணிகள் 2019 ஆம் ஆண்டு நிறைவடையவுள்ளன.

இந்த திட்டத்துக்காக அம்பாந்தோட்டை துறைமுக பகுதியில் 500 ஏக்கர் நிலத்தை முழுமையாக வழங்க முடியாத நிலையில் உள்ளதாக இலங்கை முதலீட்டு சபை தெரிவித்துள்ளது.

எனவே துறைமுகத்துக்குள்ளும் வெளியிலும் இரண்டு இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக முதலீட்டு சபை குறிப்பிட்டுள்ளது. (இ-7)

# அவசரப்பட்டு தவறு செய்யாமல் தாமதித்து சரியாகச்செய்வோம்

## அமைச்சர் துமிந்த கூறுகிறார்



(கொழும்பு)

அவசரப்பட்டு தவறு செய்வதை விட, சற்று தாமதித்து சரியான தீர்மானத்துக்கு வருவதுதான் சிறந்தது என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் தலதா மாளிகைக்குச் சென்று மகாநாயக்க தேரர்களிடம் ஆசீர்வாதம் பெற்ற பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

உள்ளூராட்சித்தேர்தலை பழைய முறைப்படி நடத்தும் படி சிலர் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். இருப்பினும், பழைய முறையிலுள்ள தவறுகளை மீண்டும் செய்யத் தேவையில்லை. அவற்றைச் சரிசெய்து கொண்டு புதிய முறையின் கீழ் முகம் கொடுப்போம்.

புதிய முறையில் குறைபாடுகள் இருக்கலாம். அவற்றை மக்களின் தேவைகளுக்கு ஏற்ப சரிசெய்து முன்னெடுக்க முயற்சிப்போம். மாற்றங்களின் போது எல்லோரையும் திருப்திப்படுத்த முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பசிலின் தேவைக்கேற்ற தேர்தல் முறை மாற்றம்!

## அமைச்சர் கபீர் ஹாசிம் தெரிவிப்பு



(கொழும்பு)

கடந்த ஆட்சியில் பசில் ராஜபக்ஷவிற்கு தேவையான விதத்திலேயே தேர்தல் முறை மாற்றங்கள் ஏற்பட்டது. எனவே இதனை ஏற்றுக் கொள்ள முடியாது.

அனைத்துக் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை கள் நடத்தப்பட்டே மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான கபீர் ஹாசிம், ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்பு மாற்றத்தின் போது தலைமைத்துவ சபை நீக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

புதிய தேர்தல் முறை மாற்றம் அனைத்துக் கட்சிகளுடனும் பேசி ஏற்படுத்தப்படவில்லை. மாறாக கடந்த ஆட்சியில் பஷில் ராஜபக்ஷவின் தேவைக்காகவே ஏற்படுத்தப்பட்டது.

எல்லை நிர்ணயங்கள், தொகுதி பிரிப்பு தொடர்பாக பல பிரச்சினைகள் உள்ளன. சில இடங்களில் தமக்கு தேவையான விதத்தில் கிராமங்கள் பிரிக்கப்பட்டுள்ளன.

வீட்டின் முன்பக்கம் ஒரு தொகுதிக்கும, சமையலறை இன்னொரு தொகுதிக்குமென பிரிக்கப்பட்டுள்ளது.

இதில் இன, மத மற்றும் சிறுபான்மை இன மக்கள் தொடர்பாக சிந்திக்கவில்லை. நாட்டில் மீண்டும் ஒரு பிரச்சினை தலை தூக்கும் விதத்திலேயே எல்லை நிர்ணயங்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.

எனவே இது தொடர்பாக ஆராய்வதற்கு அசோக பீரிஸ் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இதன் அறிக்கை ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் கையளிக்கப்பட்டுள்ளது. இவ் அறிக்கையில் முன்னைய தேர்தல் முறை மாற்றம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

எனவே எல்லை நிர்ணயம் மீள திருத்தப்பட வேண்டும். அதற்கமைய தேர்தல் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கு காலம் எடுக்கும். இதனை காரணமாக வைத்து தேர்தலை பிற்போடுவது நியாயமானது.

உள்ளூராட்சி தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும், புதிய தேர்தல் முறை ஏற்படுத்தப்படும் வரை காத்திருக்காது தற்போதுள்ள முறையிலேயே தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியில் யாப்பு மாற்றம் ஏற்படுத்தப்படவுள்ளதோடு, பல புதிய பதவி மாற்றங்களும் செய்யப்படவுள்ளன. தலைமைத்துவ சபை தற்போது இயங்குவதில்லை. எனவே அது இரத்து செய்யப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## உபதேசங்களை உற்றுக் கவனியுங்கள்

தோரு என்ற சிந்தனையாளர் "இந்த உலகத்திலுள்ள தொளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது பேர்கள் ஒழுக்க போதனை செய்கிறவர்களாகவும் ஒரே ஒருவர் மட்டும் ஒழுக்கத்தோடு இருப்பவராகவும் உள்ளார்" என்று குறிப்பிடுகிறார். பெரும்பாலானோர் ஒழுக்கமுடையவர்களாக இருப்பதைவிட ஒழுக்கமுடையவர்களாகத் தங்களைக் காட்டிக் கொள்வதிலேயே அதிக கவனம் செலுகிறார்கள். எனவே ஒழுக்க போதனைகளுக்குச் செவி சாய்த்து நேரத்தை வீணாக்கிக் கொண்டிருப்பதில் அர்த்தம் ஏதும் இல்லை. உங்களுடைய மனச்சாட்சிக்கு எது சரி என்றுபடுகிறதோ அதைவிட வேறு சிறந்த ஒழுக்கம் இந்த உலகில் இருக்க வழியில்லை.

நமக்கு உபதேசம் செய்கிறவர்கள் அனைவரும் நம்முடைய நன்மைக்காகத்தான் உபதேசம் செய்கிறார்கள் என்று நாம் எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. உங்களுக்கு உபதேசிப்பதில்கூட அவர்களுக்கு ஒரு சுயநல நோக்கம் இருக்கக்கூடும். உங்கள் நலன் பாதிக்கப்பட்டால் யார் பாதிப்புக்கு உள்ளாகிறார்களோ அவர்கள் செய்யும் உபதேசம் வேண்டுமானால் கற்கக்கூடியதாக இருக்கலாம். பொதுவாக உபதேசிகளாக உள்ளவ ர்களும் ஏதோ ஒரு சுயநல நோக்கத்தோடுதான் தங்களுடைய உபதேசங்களைச் செய்கிறார்கள்.

உங்களை விமர்சிக்கிறவர்களும் குறை கூறுகின்றவர்களும் உங்களைச் சுற்றி நிறையப்பேர் இருப்பார்கள். அவர்கள் சொல்வதில் நியாயம் கூட இருக்கலாம். அதற்காக குற்றவாளியைப் போன்ற குற்ற உணர்வுடன் நீங்கள் செயற்பட வேண்டும் என்ற அவசியவமில்லை. உங்களது குற்றம் அல்லது குறையை உடனே ஏற்றுக்கொண்டு அதற்காக வருத்தமும் தெரிவித்து விட்டு உடனே அதை மறந்து விடுவதுதான் நல்லது. ஒருவேளை அவர்கள் குறை கூறுவது தவறாக இருந்தால் அடுத்த கணமே அதை அலட்சியப்படுத்தி நீங்கள் மறந்துவிடலாம்.

மற்றவர்கள் சொல்கிறார்கள் என்பதற்காக எந்தக் காரியத்தையும் நாம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில் எந்தக் காரியத்தைச் செய்தாலும் நமக்கு அதில் ஈடுபாடு இருக்க வேண்டும். மற்றவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக ஒரு காரியத்தை நாம் செய்யும்போது அந்தக் காரியத்தில் மன ஈடுபாடு ஏற்படாமல் போவதோடுகூட நமது முன்னேற்றத்துக்கும் நாம் செய்ய வந்த காரியமே தடையாக இருந்து விடவும் கூடும்.

**உங்களுக்காக மற்றவர்கள் சிந்திப்பது என்பது சாத்தியமில்லை. உங்களுக்காக நீங்கள்தான் சிந்திக்க வேண்டும். மற்றவர்களின் உபதேசமும் ஆலோசனையும் என்றென்றைக்கும் உங்களுக்கு வழிகாட்டிக் கொண்டிருக்க முடியாது.**

தமிழில் தாட்சண்யம் என்கிற சொல் ஒன்று உண்டு. மற்றவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக அல்லது அவர்கள் அதிருப்தி அடையக் கூடாது என்பதற்காக நாம் ஒரு காரியத்தைச் செய்தால் அவர்களின் தாட்சண்யத்துக்காக அந்தக் காரியத்தைச் செய்கிறோம் என்று பொருள்.

**வாழ்க்கையில் நாம் முதன்மைபெற விரும்பினால் முதலில் இந்த தாட்சண்ய மனோபாவத்தை விட்டொழிக்க வேண்டும். பிறரைத் திருப்திப்படுத்த நாம் செய்யும் காரியம் முதலில் நம்மைத் திருப்திப்படுத்துகிறதா என்று பார்க்கலாம்.**

தாட்சண்யப்படுகிறவர்கள் மற்றவர்கள் ஒன்றைச் சொல்லும் போது மறுத்துப்பேச முடியாதவர்களாக இருப்பார்கள். இது ஆபத்தான மனோபாவம். முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடும் மனோபாவம். உங்களுக்குப் பயன்படாது என்கிற போது முடியாது என்று அதை மறுத்து விடுவதில் தவறில்லை. வேண்டுமானால் முகத்தில் அடித்ததைப்போல் அதைச் சொல்லாமல் நளினமாகவும் நாசுக்காகவும் ஆனால் அதே சமயம் உறுதியாகவும் அதைச் சொல்லப் பழகிக் கொள்ளலாம்.

இந்த விடயத்தை நான் இவ்வளவு வலியுறுத்திச் சொல்வதற்குக் காரணம் இருக்கிறது. இது ஒரு சாதாரண விடயம் போல் உங்களு க்குத் தோன்றலாம். ஆனால் உண்மை அதுவல்ல. நம்மைச் சுற்றியுள்ள மனிதர்களில் பெரும்பாலானோர் தங்கள் இஷ்டப்படியே மற்றவர்கள் செயற்பட வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். தங்களது ஆசையை மற்றவர்கள் மீது திணிக்கும் சுபாவம் கொண்டவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் சொல்வதை நாம் கேட்க மறுக்கும் போது நம்மைப் பற்றி அவதூறு பேசுபவர்களாகவும் இருக்கிறார்கள். இம்மாதிரியான மனிதர்களை நிறையக்கொண்டதுதான் இந்தச் சமூகம். இவர்களை விரோதித்துக்கொள்ள வேண்டும் என்று நான் சொல்லவில்லை. அதற்காக இவர்கள் ஆட்டுவித்தபடி ஆட வேண்டும் என்கிற அவசியமும் இல்லை. ஒருவேளை நீங்கள் முடியாது என்று நளினமாகச் சொன்னாலும் இவர்கள் உங்களைப்பற்றி அவதூறு பேசக்கூடும். உங்களைப் பற்றிய தவறான வதந்திகளை பரப்பவும் அவர்கள் முயலக்கூடும்.

நாகரிகமாக அவர்களுடைய யோசனைகளை ஏற்க முடியாது என்று நீங்கள் சொன்னதோடு உங்களுடைய கடமை முடிந்து விட்டது. அதற்குப் பிறகு வரும் அவதூறுகளைப் பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. அவற்றை அலட்சியப்படுத்த நீங்கள் கற்றுக்கொண்டு விட்டால் அந்த வதந்திகள் அல்லது அவதூறுகள் தோன்றிய வேகத்திலேயே மறைந்து போகும். உங்களைப் பற்றிய அவதூறுகளுக்கும் வதந்திகளுக்கும் உயிர் கொடுப்பதே நீங்கள்தான். அவற்றைப் பற்றி நீங்கள் விவாதிக்கத் தொடங்கும்போதும் மறுக்கத் தொடங்கும்போதும் அவை புத்துயிர் பெற்று விடுகின்றன. வதந்தியாளர்களின் நோக்கமே அதுதான். அவருடைய நோக்கம் சுலபத்தில் நிறைவேறி விடுகிறது. அதனால் அவர் உற்சாகம் பெறு கிறார். அந்த வதந்திக்கு மேலும் பலம் உண்டாக்க முயற்சிக்கிறார். அதற்கு நீங்களே காரணமாகிப் போகிறீர்கள்.

காலணா பெறாத விடயத்தைக்கூட சிலர் நீண்டநேரம் விவாதிக்கும் குணம் உடையவர்களாக இருப்பார்கள். அது அவர்களுடைய ஒரு பொழுதுபோக்கு. அம்மாதிரி விவாதங்களில் ஒருபோதும் நீங்கள் பங்கு பெறாதீர்கள். இந்தக் குணம் கொண்டவர்கள் உங்களை சும்மா இருக்க விடமாட்டார்கள். ஏதாவது பேச்சுக் கொடுத்து உங்களை இந்த விவாதத்தில் மாட்டிவைக்கவே முயற்சிப்பார்கள். இம்மாதிரி மனிதர்கள் உங்களை நெருங்கவும் நீங்கள் அனுமதிக் கக்கூடாது. நீங்கள் யாரை மதிக்கின்றீர்களோ அவர்களுடைய கருத்துகளுக்கு பயனுடையதாகவிருக்கும் என்று கருதினால்மட்டுமே நீங்கள் விவாத்தில் ஈடுபட வேண்டும். அப்படிப்பட்ட விவாதம் நிச்சயமாக ஒரு முடிவை உங்களுக்குத் தெளிவுபடுத்துவதாகவே இருக்கும்.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

# புதுவருட பலன்கள் 2016



**ஆண்டின் தொடக்கமே யோகம்தான்! ஆதாயம் அதிகம் ஓகஸ்டில்தான்! எதிர்காலம் பிரகாசமாக இருக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்ட கடக இராசி நேயர்களே!**

நீங்கள் ஆசையோடு எதிர்பார்த்த புத்தாண்டு வந்துவிட்டது. புத்தாண்டு பிறக்கும் நாளில் உங்கள் ராசிநாதன் சந்திரன் குருவோடு இணைந்து சஞ்சரிக்கின்றார். இதனால் இல்லத்தில மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் உண்டாகும்.

புத்தாண்டு பிறப்பது வெள்ளிக் கிழமை. உங்கள் ராசி அடிப் படையில் பார்க்கும் பொழுது பிறக்கும் கிழமைக்குரிய சுக்ரன் 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவார். எனவே, பழைய வாகனங்களைக் கொடுத்து விட்டுப் புதிய வாகனங்களை வாங்கும் யோகம் உண்டு. ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். தக்க விதத்தில் குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி சேமிக்கவும் முன்வருவீர்கள். அன்னிய தேசப்பயணம் எண்ணியபடியே நடைபெறும்.

வருடத் தொடக்கத்தில் அர்த்தாஷ்டமச் சனி விலகிவிட்டது. பஞ்சம ஸ்தானத்தில் சனி சஞ்சரிப்பது யோகம்தான். பூர்வீக சொத்துப் பிரச்சினைகளுக்கு புதிய தீர்வுகள் கிடைக்கும். வருடத் தொடக்கத்தில் ராகு- கேது பெயர்ச்சியாகப் போவதால் நினைக்க இயலாத சில மாற்றங்கள் உருவாகலாம்.

**1.1.2016 முதல் 6.2.2016 வரை**

இக்காலத்தில் குரு கன்னி ராசியில் வக்ரம் பெற்று சஞ்சரிக்கின்றார். அதிசார குருவாகவும் விளங்குகிறார். 6 இறகு அதிபதி வக்ரம் பெறும்பொழுது மிகுந்த நன்மைகளை கொடுக்கும் அல்லவா? எனவே உத்தியோகத்தில் உயர்நிலை உருவாகும். கடன்கள் பைசலாகும். பொது நலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் கூடக் கிடைக்கலாம்.

**ராகு-கேது பெயர்ச்சிக் காலம்!**

இதுவரை உங்கள் ராசிக்கு 3 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான் ஜனவரி 8 ஆம் திகதி முதல் 2 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். அதே நேரத்தில் இதுவரை உங்கள் ராசிக்கு 9 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த கேது பகவான் 8 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். இந்த மாற்றங்களால் எப்படிப்பட்ட மாற்றங்கள் வரும் என்பதைப் பற்றிப் பார்க்கலாம்.

இரண்டாமிடத்தில் ராகு சஞ்சரிக்கும் பொழுது, திரண்ட செல்வங்கள் வழங்கும் என்றாலும்கூட, அவை சேமிக்க இயலுமா என்பது சந்தேகம்தான்.

குடும்பத்தில் கருத்து வேறுபாடுகளை அதிகரிக்கச் செய்யும் விதத்தில் வாக்கு ஸ்தான ராகு செயறபடலாம். முன்கோபமும், முரட்டுப் பிடிவாதமும் உங்களுக்கு வந்து கொண்டே இருக்கும். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

8 ஆம் இடத்தில் கேது சஞ்சரிப்பதும் அவ்வளவு நல்லதல்ல. பெண்களாக இருந்தால் 8 ஆம் இடம் மாங்கல்ய ஸ்தானம் என்று சொல்லப்படுகின்றது. எனவே 8 இல் கேது வந்தால் வாழ்க்கைத் துணையின் உடல் நலத்தில் கவனம் தேவை. உத்தியோகத்தில் திடீர் இட மாற்றம் உருவாகும். எனவே இது போன்ற காலங்களில் கடக ராசிக்காரர்கள் மிகுந்த விழிப்புணர்ச்சியுடன் செயறபட வேண்டும்.

ஆண்களாக இருந்தால் 8 ஆம் இடத்தில் கேது வரும்பொழுது, தொழிலில் எதிர்பார்த்த இலாபம் கிடைப்பது அரிது. புதிய முதலீடு செய்யும் பொழுது கவனம் தேவை. தொழில் போட்டிகள் அதிகரிக்கும். இருப்பினும் மலைபோல் வந்த துயர பனி போல விலகும். மங்கல ஓசையும், மழலையின் ஓசையும் மனையில் கேட்கும்.




**சிம்ம குருவின் சஞ்சாரம்!**

வருடத் தொடக்கத்தில் அதிசாரத்தில் இருக்கும் குரு கன்னி ராசியில் சஞ்சரிக்கின்றார். 7.2.2016 முதல் 1.8.2016 வரை மீண்டும் உங்கள் ராசிக்கு 2 ஆம் இடமான சிம்மத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். இதில் 17.5.2016 வரை சிம்மத்திற்குள்ளேயே வக்ரம் பெற்று சஞ்சரிக்கின்றார். 18.5.2016 முதல் வக்ர நிவர்த்தியாகி 1.8.2016 வரை தன ஸ்தானத்திலேயே சஞ்சரிக்கும் குரு தனவரவைத் தாராளமாக வழங்கப் போகின்றார். ராகுவையும் அவர் தன்னோடு இணைத்துக் கொண்டிருப்பதால் உங்கள் சோகத்தைப் போக்கி சுகத்தைக் கொடுக்கும் விதத்தில் அதன் பார்வை பலத்தைப் பகிர்ந்தளிக்கப் போகின்றார்.

குருவருள் நமக்கு அமைய வேண்டுமானால் ஒவ்வொரு வியாழக்கிழமையும் விரதமிருந்து குரு பகவானை வழிபாடு செய்ய வேண்டும். உங்கள் சுய ஜாதகத்தில் குரு பகை வீட்டில் இருந்தாலோ, பகைக் கிரகத்தின் காலில் சஞ்சரித்தாலோ திசைமாறிய தென்முகக் கடவுளை வழிபடுவது நல்லது.

குருவின் பார்வை உங்கள் ராசிக்கு 6, 8, 10 ஆகிய இடங்களில் பதிகின்றது. உத்தியோகத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தவர்களுக்கு அது கிடைக்கும். ஊதிய உயர்வு, நினைத்தபடியே மாறுதல், மேலதிகாரிகளின் ஆதரவு ஆகியவை குரு பார்வையால் அமையும். மேலும் நீண்ட தூரப்பயணங்கள், தொழிலில் புதிய பங்குதாரர்கள் இணைவதன் மூலம் பொருளாதார நிலை உயர வழி வகுத்தல் போன்றவைகள் நடைபெறும் நேரமிது.

**சனியின் சஞ்சார நிலை!**

27.3.2016 முதல் 10.8.2016 வரை விருச்சிகத்தில் சனி வக்ரம் பெறுகிறார். 11.8.2016 முதல் வக்ர நிவர்த்தியாகி உலா வருகின்றார்

**விருச்சிகச் சனியால் வாழ்வில்**
**வியத்தகு மாற்றம் தோன்றும்!**
**பொருத்தமாய் மணம் முடிக்க**
**புத்திரர் மகிழ்ச்சி காண்பர்!**
**விருத்திக்கும் பூமி யோகம்!**
**வேண்டிய பொருளும் சேரும்!**
**அர்ச்சித்து வழிபட் டோர்க்கு**
**அருள் தருவார் சனியும்தானே!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

அந்த அடிப்படையில் சனி பகவான் 5 ஆம் இடத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். பஞ்சம ஸ்தானம் புத்திர பலத்தைக் குறிக்கும் இடமாகும். எனவே பிள்ளைகள் வழியில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். பூர்வீக சொத்துக்களில் ஏற்பட்ட பாகப்பிரிவினைகள் வழக்கில் இருக்கிறதே என்று கவலைப்பட்டவர்கள் இப்பொழுது சாதகமான பலனைக் காண்பர்.

அதுமட்டுமல்லாமல் புதிய பூமி சேர்க்கையும் ஒரு சிலருக்கு உருவாகும். கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவீர்கள். சமூகத்தில் மதிப்பும், மரியாதையும் உயரும். அரசியல் மற்றும் பொது நலத்தில் இருப்பவர்களுக்கு முன்னேற்றமான காலகட்டம் இது. மேலிடத்து நிர்ப்பந்தத்திற்கு இதுவரை ஆளாகியவர்கள் இப்பொழுது மேலிடத்து ஆதரவோடு புதிய பொறுப்புகளைக் காண்பர்.

**செவ்வாய் சனி சேர்க்கைக் காலம்! 27.2.2016 முதல் 9.9.2016 வரை**

விருச்சிக ராசியில் செவ்வாயும், சனியும் சேர்க்கை பெறுகிறார்கள். இக் காலத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. சொந்தங்களால் பிரச்சினைகள் உருவாகலாம். சொன்ன சொல்லைக்




காப்பாற்ற இயலாமல் போகலாம். வாங்கல் கொடுக்கல்களில் ஏமாற்றங்கள் அதிகரிக்கும். வாங்கிய பூமியை விற்க நேரிடுகிறதே என்று கவலைப்படுவீர்கள். வழிபாடுகளால் மட்டுமே வளர்ச்சியைக் கூட்டிக்கொள்ள இயலும்.

இக்காலத்தில் யாருக்கு நன்மை செய்தாலும் அது தீமையாகவே தெரியும். உறவினர்கள் அனுசரிப்புக் குறைவாகவே இருக்கும் இந்த நேரத்தில் விட்டுக் கொடுத்துச் செல்வதுதான் நல்லது. வியாபார விரோதங்கள் அதிகரிக்கும். மொத்தத்தில் வரவு ஒரு மடங்கு வந்தாலும் பிள்ளைகளாலும், பெற்றோர்களாலும் செலவுகள் அதிகரிக்கும். குறிப்பாகக் குழந்தைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்வது நல்லது.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

உங்கள் ராசிநாதன் சந்திரன் என்பதால் பூரணத்துவம் அடையும் பௌர்ணமி அன்று கிரிவலம் வருவது சிறப்பாக அமையும். பிள்ளையார், அபிராமி அம்மன், அமிர்த கடேஸ்வரர் ஆகியோரை வழிபட்டு காலம் முழுவதும் வளத்தையும், நலத்தையும் வரவழைத்துக் கொள்ளுங்கள்.

**கடக ராசியில் பிறந்த பெண்களுக்கு!**

இந்த ஆண்டு வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும் என்றாலும் மன நிம்மதி குறைவாகவே இருக்கும். உங்களைக் காட்டிலும் மற்ற சகோதர சகோதரிகளிடம் பெற்றோர்கள் பாசம் காட்டுகிறார்களே என்று நினைப்பீர்கள். ராகு-கேது பெயர்ச்சிக்குப் பின்னால் வாழ்க்கைத் துணையின் உடல் நலத்தில் கூடுதல் கவனம் செலுத்தக் கூடிய சூழ்நிலை உருவாகும். குழந்தைகளின் கல்யாணக் கனவுகள் நனவாக உகந்த நேரம் குருப்பெயர்ச்சிக் காலமாகும். சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகும் வாய்ப்பு உருவாகும். எதிர்பார்த்த இடமாற்றம், பணிபுரியும் இடத்தில் இருந்த பிரச்சினை அகலும். 8 இல் இருக்கும் கேதுவால் இடையூறுகள் ஏற்படாதிருக்கவும், தடைகள் அகலவும் சர்ப்ப சாந்தி செய்து கொள்வது நல்லது. சனிக்கிழமை தோறும் ஆனைமுகப் பெருமானையும், அனுமனையும் வழிபட்டு வாருங்கள். வருடத்தின் கடைசி இரண்டு மாதங்கள் வளர்ச்சி கூடுதலாக இருக்கும். வருமானமும் போதுமானதாக இருக்கும். குழந்தைகளின் கனவுகளை நனவாக்க எடுத்த முயற்சி வெற்றி பெறும்.

**ஆடி பதினெட்டில் தேடி வரும் யோகம்!**

ஆடி பதினெட்டு (2.8.2016) முதல் குரு பகவான் மூன்றாமிடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். அப்பொழுது அதன் பார்வை 7, 9, 11 ஆகிய இடங்களில் பதியப் போகின்றது. 7 ஆம் இடத்தைக் குரு பார்த்தால் இனிய இல்லறம் வாய்க்கும். வரன்கள் வரவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு இனி இல்லம் தேடி நல்ல தகவல் வரும். குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும். தந்தை வழிப் பிரச்சினைகள் மறையும். லாப ஸ்தானம், குரு பார்வையால் புனிதமடைவதால் வருமானம் இரு மடங்காக உயரும். தொழிலை விரிவுபடுத்த போதுமான வசதியில்லையே என்று நினைத்தவர்களுக்கு, அரசு வழிச் சலுகைகள் எதிர்பார்த்தபடி அமையும். இளைய சகோதரத்தோடு இணக்கம் ஏற்படும். வெளிநாட்டிலருந்து வரும் அழைப்புகளை ஏற்றுக்கொள்ள ஒரு சிலர் முன்வருவர். பல ஆண்டுகளாக வசூல் ஆகாத பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும்.

ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்

நாளை சிம்மம

## ஆண்டின் தொடக்கமே யோகம்தான்! ஆதாயம் அதிகம் ஓகஸ்டில்தான்!

# ‘சீபா’ உடன்படிக்கை கைச்சாத்திடப்படாது

## அரசாங்கம் திட்டவட்டம்



(கொழும்பு)

**இந்தியாவுடன் “சீபா” உடன்படிக்கை கையெழுத்திடப்படமாட்டாது. அதற்குப் பதிலாக வர்த்தக தொழில்நுட்ப உடன்படிக்கை கையெழுத்திடப்படவுள்ளதாக சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.**

இந்தியாவுடன் சீபா (பரந்த பொருளாதார உடன்படிக்கை) கையெழுத்திடப்படப் போவதாகவும் இதனால் இலங்கையை இந்தியா ஆக்கிரமித்துவிடும் என்றும் பிரசாரங்கள் செய்யப்படுகின்றன. இதில் உண்மையெதுவுமில்லை. இது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெளிவான அறிக்கையொன்றை விடுத்தார்.

தனது இந்திய விஜயத்தின் போது சீபா உடன்படிக்கை தொடர்பாக பேசப்படவில்லை. அவ் உடன்படிக்கை கையெழுத்திடப்படமாட்டாது என்றும் தெரிவித்தார்.

தேசப்பற்று தொடர்பாக பேசும் உதய கம்மன்பில போன்றோர் எமது நாட்டுப் பிரதமரின் கருத்தை நம்பாது வெளிநாடுகளின் கருத்துக்களுக்கு முதலிடம் வழங்குகின்றார்கள். இந்தியாவுடன் வர்த்தக மற்றும் தொழில்நுட்ப உடன்படிக்கை தான் கையெழுத்திடப்படவுள்ளது. இது தொடர்பாக பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

எனவே இந்தியாவுடன் நட்புறவை சீர்குலைப்பதற்கு உள்நாட்டிலுள்ள சில தீய சக்திகள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன என்றார்.

இதேவேளை இலங்கை, இந்தியா இடையேயான (ETCA) வர்த்தக தொழில்நுட்ப உடன்படிக்கை தொடர்பான நகல் பெப்ரவரி மாதம் கையெழுத்திடப்படவுள்ளது. இது தொடர்பாக ஆராய்வதற்காக அமைச்சர் மலிக் சமரவிக்ரம உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இந்தியாவுக்கு செல்லவுள்ளதாகவும் அறிய முடிகிறது. (இ-7)

## ஜனாதிபதியின் ஓராண்டு பூர்த்தி; இசை நிகழ்ச்சிகள் இடம்பெறாது

### அமைச்சர் சஜித் தெரிவிப்பு

எதிர்வரும் 8ஆம் திகதி ஜனாதிபதியின் ஓராண்டு பதவிக்கால பூர்த்தியினை முன்னிட்டு எந்தவித இசை நிகழ்ச்சிகளும் இடம்பெறாது என வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கட்டுவன பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போதே இது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ளார்.

2016 ஆம் ஆண்டில் நாட்டை வளர்ச்சி பாதையில் இட்டுச் செல்லக்கூடிய பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை அரசாங்கம் முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் மேலும தெரிவித்துள்ளார்.

“முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச, சுற்றுலாவில் நாட்டை விட்டு சென்று தற்போது நாடு திரும்பிய வேளையில் தற்போதைய அரசாங்கம் எதிர்வரும் 8ஆம் திகதி “அப்பப் புரட்சியை” ஏற்படுத்தப் போவதாகவும் அதனை முன்னிட்டு 7 நாட்களுக்கு களியாட்ட நிகழ்வுகளை நடத்தவுள்ளதாகவும் ஊடகவியலாளர்கள் மத்தியில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு மறுப்பு தெரிவிக்கு முகமாகவே அமைச்சர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் களியாட்ட நிகழ்வுகளை நடத்த எங்கள் அரசாங்கம் முயலவில்லை. அதற்கு மாறாக 8ஆம் திகதி முதல் இந்த வருடம் முழுவதும் 9 மாகாணங்கள், 25 மாவட்டங்கள் ஊடாக 320 பிரதேச செயலாளர் பிரிவு, 14,022 கிராம சேவகர் பிரிவு, 38 ஆயிரம் சிறு கிராமங்கள் என அனைத்து பகுதிகளிலும் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுப்பதே எமது அரசாங்கத்தின் நோக்கம் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 594

Search for people, places and things    Nagendram  Home

**சுதன் சர்மா**





**நதீபன் நதீ**





**ராகுலன் பாலா**




**சந்திரன் சிந்துஜா**




**இமானு சோபி**



**பரமகம்சன்**



**நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

# இராணுவ மறுசீரமைப்பு அரசின் முக்கிய சவால்



இராணுவத் தலைமை அதிகாரியாக இருந்த மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் கிறிஸ்மஸ் நாளன்று சத்தமின்றி ஓய்வு பெற்றுச் சென்றிருக்கிறார்.

55 வயதை எட்டிய மேஜர் ஜெனரல்களுக்கு சேவை நீடிப்பு வழுங்குவதில்லை என்ற விதிமுறையை தற்போதைய அரசாங்கம் இறுக்கமாகப் பின்பற்ற முடிவு செய்த பின்னர் ஓய்வு பெற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள முக்கிய இராணுவ அதிகாரி இவராவார்.

கடைசி நேரத்திலாவது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சேவை நீடிப்பை வழுங்குவார் என்ற எதிர்பார்ப்பு மேஜர் ஜெனரல் ஜகத் டயஸிடம் இருந்தது.

இறுதிப் போரில் பங்கெடுத்த இராணுவ உயர் அதிகாரிகளுக்குச் சேவை நீடிப்பு வழுங்கப்பட வேண்டும் என்று, கடந்த மாதம் பாராளுமன்றத்தில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கோரிக்கை விடுத்திருந்ததும், மேஜர் ஜெனரல் ஜகத் டயஸை மனிதில் வைத்துத்தான்.

போர்க்குற்ற விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ள சூழலில் இவர்கள் இராணுவத்தில் இருந்து விலகிவிட்டால் நிறுவன ரீதியான பாதுகாப்பு கிடைக்காது என்பது மகிந்த ராஜபக்ஷவின் கருத்து.

இந்த அச்சம் இராணுவ உயர்மட்டத்தில் உள்ள அதிகாரிகள் பலருக்கும் குறிப்பாக இறுதிப் போரில் படைப்பிரிவுகளை வழிநடத்திய அதிகாரிகள் பலருக்கும் ஏற்பட்டிருக்கிறது.

அதனால்தான் அண்மையில் நீர்கொழும்பில் உள்ள விடுதியொன்றில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஒன்பது மேஜர் ஜெனரல்கள் தனியாகச் சந்தித்து பேச்சு நடத்தியிருந்தனர்.

இந்தச் சந்திப்புக்குப் பின்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முடிவு மாறக்கூடும் என்றும் பரவலான கருத்து காணப்பட்டது.

இதன் அடிப்படையில் தான் மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் அடுத்த இராணுவத் தளபதியாக நியமிக்கப்படக் கூடும் என்ற ஒரு செய்தியும் வெளியானது.

அது மிகவும் ஆபத்தான நகர்வு என்பதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உணர்ந்திருந்தார்.

ஏற்கனவே மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் விடயத்தில் அவர் சர்ச்சைகளைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

கடந்த ஆண்டு மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் இராணுவத்தின் இரண்டாவது நிலைப் பதவியான இராணுவத் தலைமை அதிகாரியாக நியமிக்கப்பட்ட போது சர்வதேச மனித உரிமை அமைப்புகள் காட்டமான கண்டனங்களை வெளியிட்டிருந்தன.

இதற்குக் காரணம் மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ் போர்க்குற்றச் சாட்டை எதிர்கொள்ளும் ஒருவராக இருப்பதுதான்.

இறுதிப் போரில் 57வது டிவிஷனுக்குத் தலைமை தாங்கியிருந்த மேஜர் ஜெனரல் ஜகத் டயஸுக்கு எதிராக சுவிற்சலாந்து நீதிமன்றத்தில் வழக்கு ஒன்று கூடத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகிய ஒருவர் மீது விசாரணைகள் நடத்தப்பட்டு அந்தக் குற்றச்சாட்டுகளில் இருந்து அவர் விடுவிக்கப்படாத நிலையில் உயர் இராணுவப் பதவிகளில் அமர்த்தப்படுவது கடுமையான அழுத்தங்களைக் கொடுக்கும் என்பதை அரசாங்கத்துக்கு உணர வைத்த முதல் சம்பவம் இது.

இதற்குப் பின்னர் வெளியான ஐ.நா மனித உரிமை ஆணையாளர் விசாரணை அறிக்கையின் பரிந்துரைகளிலும் ஐ.நா மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையிலும் கூட, தொடர்புடைய படையினருக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து முக்கியமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தகையதொரு நிலையில் மேஜர் ஜெனரல் ஜகத் டயஸுக்கு சேவை நீடிப்பு வழுங்கினால் அது சர்வதேச அளவில் கேள்விகளை எழுப்பும் என்பதை அரசாங்கம் அறிந்திருந்தது.

அதனால் அவரை மெதுவாக கழற்றி விட்டிருக்கிறது. கிறிஸ்மஸ் விடுமுறையுடன் அவர் ஆரவாரங்களோ, அணிவகுப்புகளோ இன்றி வீட்டுக்குச் சென்றிருக்கிறார்.

இது தற்போதைய அரசாங்கத்தின் இராணுவத்துக்குள் மறுசீரமைப்பை ஏற்படுத்தும் முதல் நடவடிக்கையாகும்.

2016 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில் இராணுவத்தில் உள்ள 45 மேஜர் ஜெனரல்களில் 24 பேர் ஓய்வுபெற வேண்டிய நிலையில் இருக்கின்றனர்.

இவ்வாறு ஓய்வுபெற வேண்டிய நிலையில் உள்ளவர்களில் இறுதிப் போரில் 55வது டிவிஷனுக்குத் தலைமை தாங்கிய மேஜர் ஜெனரல் பிரசன்ன டி சில்வா (2016 மே 04) , 53வது டிவிஷனை வழிநடத்திய மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன (2016 செப்டம்பர் 05), 59வது டிவிஷனின் கட்டளை அதிகாரியாக இருந்த மேஜர் ஜெனரல் நந்தன உடவத்த (2016 நவம்பர் 16) ஆகியோரும் அடங்கியுள்ளனர்.

ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் அறிக்கையில் கூட பாதுகாப்புத்துறை மறுசீரமைப்புத் தொடர்பாக கூறப்பட்டுள்ளது.

ஆனாலும் அதுதான் மிகவும் கடினமான பணி என்று ஐ.நா மனித உரிமை ஆணையாளர் செய்ட் ராட் அல் ஹுசேன் தம்மிடம் தெரிவித்ததாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

உலகில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயன்ற பல நாடுகள் இந்த விடயத்தில் தோற்றுப்போய் விட்டதாக ஐ.நா மனித உரிமை ஆணையாளர் குறிப்பிட்டதாகவும் சுமந்திரன் கூறியிருந்தார்.

போர்க்காலத்தில் உச்ச அதிகாரங்களுடன் செயற்பட்ட இராணுவத்தை ஒரு ஒழுங்கிற்குள் கொண்டு வந்து சேர்ப்பது கடினமான பணி.

இந்த விடயத்தில் தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டால் அது ஆபத்தை ஏற்படுத்திவிடும்.

குறிப்பாக வடக்கில் காணிகள் விடுவிப்பு மற்றும் இராணுவமய நீக்கம் உள்ளிட்ட பல விடயங்களில் இராணுவத்தின் கருத்தை புறந்தள்ள முடியாத நிலையில் அரசாங்கம் இருக்கிறது.

அதுபோல இராணுவப் புலனாய்வு அமைப்புகள், தன்னிச்சையாகச் செயற்படாதிருப்பதையும் உறுதிப்படுத்த வேண்டியுள்ளது.

பாகிஸ்தான் போன்ற பல நாடுகளில் அரசாங்கத்தின் முடிவுகள் அனைத்தையும் புலனாய்வு அமைப்புகள் ஏற்றுக் கொளவதோ, பின்பற்றுவதோ இல்லை.

தமக்கென வகுக்கப்பட்ட பாதையில் தான் அவை செல்கின்றன. இத்தகைய போக்கு இலங்கையில் வளர்ச்சி பெறுவதை தடுக்கவே இராணுவ மறுசீரமைப்புத் திட்டம் மேற்குலகினால் முன்வைக்கப்பட்டிருக்கிறது.

இதனைக் குழப்புகின்ற அரசியல் ரீதியான முயற்சிகளும் இடம்பெறத்தான் செய்கின்றன.

இதையெல்லாம் சமாளித்தே இராணுவத் துறைசார் மறுசீரமைப்புகளை மேற்கொள்ள வேண்டிய நிலையில் அரசாங்கம் இருக்கிறது.

2016 ஆம் ஆண்டில் இராணுவத்தை மறுசீரமைப்பதில் அரசாங்கம் முக்கியமான சவால்களைச் சந்திக்க நேரிடும்.

அதாவது போரில் பங்கெடுத்த உயிரைக் கொடுத்துப் போராடியவர்களை அரசாங்கம் ஓரம் கட்டுவதான குற்றச்சாட்டுகளையும், போராட்டங்களையும் இந்த ஆண்டில் அரசாங்கம் கூடுதலாக எதிர்கொள்ள நேரிடலாம்.

ஏற்கனவே ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடத்தல் விவகாரத்தில் கைது செய்யப்பட்ட இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் விடயத்தில் அரசாங்கம் இத்தகைய அரசியல் அழுத்தங்களையும் போராட்டங்களையும் சந்தித்துக் கொண்டிருக்கிறது.

கைது செய்யப்பட்டுள்ள இரண்டு லெப். கேணல்கள் உள்ளிட்ட இராணுவப் புலனாய்வு அதிகாரிகளுக்கான சம்பளங்களை இராணுவம் இடைநிறுத்தியும் வைத்திருக்கிறது.

**இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி அவர்களுக்கான சம்பளங்களை மகிந்த ராஜபக்ஷ அணியினர் கொடுத்து வருகின்றனர்.**

**அதேவேளை கைது செய்யப்பட்டுள்ள இராணுவ அதிகாரிகளை இராணுவம் முழுமையாக கைவிட்டுவிட்டது என்றும் கூற முடியாது.**

வழக்கத்தில் கிரிமினல் குற்றச்சாட்டுகளை ஏதிர்கொள்ளும் படையினருக்கு இராணுவ சட்டப்பிரிவு உதவுவதில்லை.

ஆனால் வெளியில் உள்ள சட்டத்தரணி ஒருவரை இந்த இராணுவ அதிகாரிகளுக்காக இராணுவ சட்டப்பிரிவு அமர்த்தியிருக்கிறது.

இது அரசாங்கத்திற்குள்ளேயும், இராணுவத்துக்குள்ளேயும் இருக்கின்ற மறுசீரமைப்பு சவால்களை தெளிவாகவே எடுத்துக் காட்டுகிறது.

போர்க்குற்ற விசாரணையை எதிர்கொள்ளும் படையினருக்கும் கூட அரசாங்கம் ஆதரவாக இருக்கும் என்றும் கூறி வருகிறது. இது ஒரு சிக்கலான நிலைதான்.

அதேவேளை, இராணுவ மறுசீரமைப்பை இந்த ஆண்டில் அரசாங்கம் வெற்றிகரமாக கையாண்டால்தான் வடக்கில் இராணுவமய நீக்கம், காணிகள் விடுவிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளிட்ட தமிழர் தரப்புக்குத் திருப்தியை ஏற்படுத்தும் நகர்வுகளை முன்னெடுக்க முடியும்.

இல்லாவிட்டால் இரண்டு தரப்புகளினதும் அவநம்பிக்கைகளைத் தான் அரசாங்கம் சம்பாதிக்க நேரிடும்.

இந்த ஆண்டில் ஓய்வுபெற வேண்டிய நிலையில் உள்ள மேஜர் ஜெனரல்களில் சிலருக்கு இரண்டு ஆண்டு சேவை நீடிப்பு வழுங்கப்படலாம் என்ற எதிர்பார்ப்புக் காணப்பட்டாலும் அது இறுதிப் போரில் பங்கெடுத்தவர்களுக்கு அளிக்கப்படுமா என்ற சந்தேகம் உள்ளது.

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்குள்ளானோரைப் பாதுகாக்க அரசாங்கம் தயாராக இல்லை என்பதை வெளிப்படுத்தவே தற்போதைய நிலையில் அரசாங்கம் கூடுதல் அக்கறை செலுத்தலாம்.

எனவே தற்போது ஏற்பட்டுள்ள இராணுவத் தலைமை அதிகாரி வெற்றிடத்துக்கோ, வரும் ஓகஸ்ட் மாதம் இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் கிரிசாந்த டி சில்வா ஓய்வுபெறும் போது ஏற்படும் வெற்றிடத்துக்கோ இறுதிப் போருடன் தொடர்புடைய இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட வாய்ப்பில்லை என்றே கருதப்படுகிறது.

இராணுவத்தை மறுசீரமைப்பது தொடர்பாக சர்வதேச நாடுகளுடன் குறிப்பாக அமெரிக்கா, பிரித்தானியா, ஐ.நா போன்றவற்றுடன் இலங்கை இணைந்து செயற்படத் தொடங்கியுள்ளது. இந்த மறுசீரமைப்பு நிலையான அமைதி மற்றும் நல்லிணக்கத்துக்கு மிகவும் முக்கியமானது.


**சுபத்ரா**

## சத்தியாக்கிரகம்

(கொழும்பு)

புதிய அரசாங்கம் பதவி யேற்று ஒரு வருடம் பூர்த்தி யாகும் எதிர்வரும் 8 ஆம் திகதி கொழும்பு கோட்டை யில் சத்தியாக்கிரகப் போரா ட்டத்தை நடத்த எண்ணி யிருப்பதாக துறவிகள் குரல் அமைப்பின் தலைவரும் நாராஹேன்பிட்டி அபயராம விகாரையின் விகாராதிபதியு மான முருந்தொட்டுவ ஆன ந்த தேரர் தெரிவித்துள் ளார்.

அபயராம விகாரையில் நேற்று நடைபெற்ற ஊடகவி யலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். (இ-7)




# செய்தித்துளிகள்

## ஆசிரியர்கள், அதிபர், உத்தியோகத்தர் வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும்

கல்வித் துறையிலுள்ள 20ஆயிரம் வெற்றிடங்கள் எதிர்வரும் மூன்று மாதத்துக்குள் நிரப்பப்படும் என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் 15 ஆயிரம் ஆசிரியர்கள், 4431 அதிபர் கள் மற்றும் 852 கல்வி நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் ஆகியோர் நியமிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித் தார். அத்துடன் ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் கல்வி நிர்வாக உத்தியோகத்தர்கள் காரணமாக கல்வித்துறை குறிப்பிட்ட அளவுக்கு பாதிப்புக்குள்ளாகியுள்ளது. இதனால் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தற்போது வெற்றி டமாக உள்ள வேலைவாய்ப்புக்கள் அனைத்தும் தகுதியா னோரைக் கொண்டு நிரப்பப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ)

# இலங்கை வரலாற்றில் முக்கிய நாளாக ஜனவரி மாதம் 9ஆம் திகதி பதியப்படும்

### கலாநிதி ஜயம்பதி தெரிவிப்பு

ஜனவரி மாதம் 09ஆம் திகதி இலங்கை வரலாற்றில் ஒரு முக்கியமான நாளாக பதியப்படும் என கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன தெரி வித்துள்ளார். எதிர்வரும் 09 ஆம் திகதி நாடாளுமன்றம் அர சியலமைப்பு நிர்ணய சபையாக மாற்றப்படவுள்ள நிலையில் அவர் இதனை தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பில் இலங்கையின் இனப்பிரச்சி னைக்கான தீர்வுகள் மற்றும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை இரத்து, தேர்தல் முறை மறு சீரமைப்பு சட்டங்கள் என்பன உள்ளடக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இது தொடர்பில் கருத்து தெரிவித் துள்ள ஐக்கிய தேசியக் கட்சி யின் நாடாளுமன்ற உறுப்பி னரும் அரசியல் அமைப்பு நிபுணருமான ஜயம்பதி விக்கி ரமரத்ன, ஜனவரி 09 இலங் கையின் வரலாற்றில் ஒரு முக்கிய திருப்புமுனையாக அமையும் என அவர் நம் பிக்கை வெளியிட்டுள்ளார்.

புதிய அரசியல் அமைப்பு உருவாக்கத்தில் நாடாளுமன் றத்தில் உள்ள அனைத்து உறுப் பினர்களினதும் கருத்துக்கள் செவிமடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் அவ்வாறு உருவா க்கப்படும் புதிய அரசியல் அமைப்பானது நாடாளுமன்றத் தின் மூன்றில் இரண்டு பெரும் பான்மையைப் பெற்ற பின் னரே நடைமுறைக்கு கொண்டு வரப்படும் என கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன கூறியுள்ளார்.

எனவே ஒருசிலர் கூறு வது போன்று நாங்கள் ஒரு போதும் அரசியலமைப்புக்கு அப்பால் சென்று செயலாற்ற வில்லை என அவர் சுட்டிக் காட் டியுள்ளார். இதேவேளை குறி த்த விடயம் தொடர்பில் அனை த்து நடவடிக்கைகளும் அர சியலமைப்பின்பிரகாரமேமுன் னெடுக்கப்பட்டுள்ளதாக கலாநிதி ஜயம்பதி விக்கிரமரத்ன மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# குமார் பொன்னம்பலத்தின் நினைவுதினக்கூட்டம் இன்று

மாமனிதர் குமார் பொன் னம் பலத்தின் நினைவு தின கூட்டம் இன்று செவ் வாய்க்கிழமை மாலை 5 மணி முதல் கொழும்பு தமிழ் சங்க மண்டபத்தில் சட்டத் தரணி இராஜ குலேந்திரா தலைமையில் இடம்பெறு மென ஜனநாயக மக்கள் காங்கிரஸ்தலைவர் கலாநிதி. என்.குமரகுருபரன் அறி வித்துள்ளார். இதில் கலா நிதி விக்ரமபாகு கருணா ரத்ன, கலாநிதி அஷ்ரப் அசீஸ் , த.வி.கூ. தலைவர் வீ.ஆனந்தசங்கரி. முன் னாள் பாராளுமன்ற உறுப் பினர் சட்டத்தரணி விநாயக மூர்த்தி. சட்டத்தரணி. ஆ. கெங்காதரன், முன்னாள் பிரதி அமைச்சர் பாராளும ன்ற உறுப்பினர் பிரபா கணே சன், சட்டத்தரணி ந.காண் டீபன் சட்டத்தரணி சி.வி விவேகானந்தன, பிரபல நொத்தாரிஸ் க.மு. தர்மராஜா மற்றும் பலர் உரையாற்ற வுள்ளனர். (இ-7)

# கல்வி அமைச்சருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்ய முடிபு

முதலாம் தர மாணவர்களின் அனுமதி எண்ணிக்கையை 40 ஆக உயர்த்தியமை தொடர்பாக கல்வி அமைச்சரு க்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய இலங்கை ஆசிரியர் சங்கச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தீர்மானித்துள்ளார்.

மாணவர்களின் எண்ணிக்கை 2016 ஆம் ஆண் டின் படி 35 ஆக இருக்க வேண்டுமென உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. திடீர் என கல்வி அமைச்சர் மாண வர்களின் எண்ணிக்கையை அதிகரித்தமையால் அதிபர் கள் குழப்பமாகவுள்ளனர் என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவாசம் 2017 ஆம் ஆண்டில் தான் முதலாம் தர மாணவர்களின் எண்ணிக்கை 35 ஆக இருக்கும் என தெரிவித்துள்ளார். (இ-7)

# பொலிஸாரின் மோட்டார் சைக்கிள் காருடன் மோதி விபத்தில் சிக்கியது

போக்குவரத்து பொலிஸ் அதிகாரிகள் சென்ற மோட் டார் சைக்கிள் ஒன்று பிரதி பொலிஸ் அத்தியட்சகரின் மனைவி செலுத்தி வந்த காருடன் மோதி விபத்துக் குள்ளான சம்பவம் நேற்று முன்தினம் கொழும்பு பிலிப் குணவர்தன பகுதியில் இடம் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் நடை பெற்ற இலங்கை கிரிக்கெட் சபை தேர்தலில் திலங்க சுமதிபாலவுக்கு ஆதரவு வழங்குவதற்காக காரில் சென்ற பொலிஸ் அத்தியட்சக ரின மனைவியின் வாகனத்தி லேயே. 100கிலோ மீற்றர் வேகத்தில் வந்த பொலிஸ் அதிகாரிகளின் மோட்டார் சைக்கிள் மோதியுள்ளது.

குறித்த பெண் தனது வாகனத்தை நிறுத்தி வைப் பதற்காக சினமன் கார்டன் வாகன தரிப்பிடத்திற்கு திருப பிய போதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலி ஸார் தெரிவித்தனர். (இ-7)

# பொலிஸ் சுற்றிவளைப்பால் விசம் குடித்தவர் தப்பினார்

சட்டவிரோதமாக மதுபானத்தை உற்பத்தி செய்த நிலையமொன்றை பொலிஸார் சுற்றி வளைத்த சந்தர்ப்பத்தில், அங்கு நபர் ஒருவர் விஷ மருந்தை குடித்து விட்டு உயிருக்கு போராடியபடி இருந்துள்ளார்.

இந்த சம்பவம் நீர்கொழும்பு கொச்சிக்கடை, மடம் பெல்ல பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடந்துள் ளது.

குறித்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்போது குறித்த மதுபான உற்பத்தியில் ஈடுபட்ட உரிமையாளரே இவ்வாறு விஷ மருந்தை குடித்ததாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (இ-7)

# பகல் தூக்கம் நல்லதா?

மதியம் உணவு உண்ட பிறகு, அலுவலகத்தில் தூங்கி னால், அவர் வேலைசெய்யத் தவறிவிட்டார் என்றுதானே நினைப்போம். ஆனால், ஜப்பானில் பல தனியார் நிறு வனங்கள் தங்கள் ஊழியர் களுக்கு பகலில் 15 முதல் 20 நிமிடங்கள் தூங்க அனுமதி அளித்துள்ளன. இது அவர் களைப் புத்துணர்வுடன் இரு க்கச் செய்வதாக தெரிவிக் கின்றனர்.

உணவு, உடை, வீடு போல தூக்கமும் அனைவ ருக்கும் அவசியம். நம் உட லுக்கும் உள்ளத்துக்கும் ஓய் வைத் தந்து, ஆற்றலையும் புத்துணர்ச்சியையும் தருவது தூக்கம்தான். இரவில் தூங் குவதுபோலவே பகலில் ஒரு குட்டித்தூக்கம் போடுவது இன்று பலருக்கும் வாடிக் கையாக உள்ளது. பகல் தூக் கத்தால் உடல் எடை கூடி விடும், சோம்பேறித்தனம் அதிகரிக்கும் என்பன போன்ற கருத்துக்கள் நம்மிடையே உலவிவருகின்றன. உண் மையில் பகல் தூக்கம் நல் லதா... கெட்டதா?

**பகல் தூக்கம்**

பகலில் உறங்கும் குட்டித் தூக்கத்துக்கு “நாப்' (Nap) என்று பெயர். காலை முதல் மதியம் வரை உடல் அல்லது மூளைக்குக் கடுமையான வேலை தரும்போது, 20-30 நிமிடங்கள் உறங்கினால், உடலும் மூளையும் மீண் டும் சுறுசுறுப்பாகிவிடும்.

**அனைவருக்கும் பகல் தூக்கம் தேவையா?**

பகல்தூக்கம்என்பது அனை வருக்கும்அவசியமானது அல்ல. இரவில் தேவையான அளவு தூக்கமும் பகலில் வேலை நெருக்கடியும் இல்லாதவர் களுக்கு, பகல் தூக்கம் அவ சியம் இல்லாதது. இவர்கள் பகலில் தூங்கினால் இரவுத் தூக்கம் பாதிக்கப்படும் என் பதையும் கவனத்தில்கொள்ள வேண்டும்.

இன்னும் சிலருக்கு எவ் வளவுதான் வேலைக் களை ப்பு இருந்தாலும் பகலில் தூக்கம வரவே வராது. இவர்களும் பகல்தூக்கத்தைப் பற்றி கவ லை கொள்ள வேண்டியது இல்லை.

**யார் தூங்கலாம்?**

இரவு முழுவதும் விழித் திருந்து வேலை பார்க்க வேண் டிய அவசியம் உள்ளவர்கள், வேலைக்கு முன்னரே ஒரு குட்டித்தூக்கம் போட்டு விழிக் கலாம்.


தொடர்ச்சியாக நீண்ட நேரம வேலை செய்பவர்கள், சிறிது நேர ஓய்வாகத் தூங்கலாம்.

பொதுவாக, நீண்ட தூரம் வாகனம் ஓட்டுபவர்கள் குட்டித் தூக்கம் போடலாம்.

20 நிமிடத் தூக்கம் நம்மை ரீசார்ஜ் செய்துகொள்ள உத வும். நினைவுத்திறனை அதிக ரிப்பதுடன வேண்டாத விடயங் களையும் ஞாபகத்தில் இருந்து நீக்க உதவும். சில நாடுகளில் இதுபோன்று பகலில்ஒரு குட்டித் தூக்கம் போடுவது ஒரு வழக்க மாகவே கடைப்பிடிக்கப்படுகிறது.

**பகல் தூக்கத்தின் நன்மைகள்**

பகலின குட்டித்தூக்கத்தால்



நமது விழிப்புணர்வு அதிக ரிக்கிறது. மேலும், நமது செயல் திறனில் 24 சதவிகிதம் அதி கரிக்கிறது.

பகலில் குறிப்பிட்ட நேரம் மட்டுமே தூங்க வேண்டும். அதீத பகல் தூக்கம், உடலுக்கு நல்லது அல்ல. நேர வரை யறை செய்யப்பட்ட குட்டித் தூக்கத்தால் உற்சாகமாகச் செயறபட முடியும்.

பகல் தூக்கம், புத்துணர்ச் சியையும் உற்சாகத்தையும் தருவதோடு, அந்த நாளின்செயல் திறனையும் அதிகரிக்கிறது.

பகல் தூக்கமானது இரு தய நோய்களில் இருந்து நம் மைக் காத்துக்கொள்ள உத வுகிறது.

உயர் இரத்த அழுத்தம் குறைவது உறுதி செய்யப்ப ட்டுள்ளது.

**தூக்கத்தின்போது கவ னிக்க வேண்டியவை**

குட்டித் தூக்கமானது 30 நிமிடங்களுக்கு மேலே செல் லாமல் பார்த்துக்கொள்வது அவசியம். ஏனெனில், 30 நிமிடங்களுக்கு மேலான பகல் தூக்கம் சோம்பல் உணர் வைக் கொடுப்பதோடு நமது இரவுத் தூக்கத்தையும் கெடு க்கும்.

தூங்குவதற்கு அமை தியான காற்றோட்டமான இடத்தைத் தேர்ந்தெடுப்பது அவசியம். மங்கலான ஒளி உள்ள இடமும் உகந்தது.

பகல் தூக்கத்துக்கு சரி யான நேரத்தைத் தேர்ந்தெ டுப்பது அவசியமான ஒன்று.

வழக்கமாக எந்த நேர த்தில் நீங்கள் உற்சாகம் இழக்கிறீர்கள் என்பதைப் பொறுத்து நேரத்தைத் தேர்ந் தெடுக்கலாம்.




# குள்ளநரியின் விவசாயம்!

ரொம்ப காலத்துக்கு முன்னாலே ஒரு காட்டுல குள்ள நரி ஒண்ணு வாழ்ந்து வந்துச்சு. அதற்கு அறிவு ரொம்ப அதிகம். தன்னோட அறிவாற்றலை பயன்படுத்தி கஷ்டம் இல்லாம நிறைய இலாபம் சம்பாதிச்சிட்டிருந்தது. எல்லா விலங்குகளும் அந்த குள்ள நரியை பொறாமையா பார்த்தது. பின்னே அந்த காட்டு ராஜாவுக்கே குள்ள நரி அமைச்சரா ஆயிருச்சே!

அமைச்சரா ஆனா பின்னாலும் நரியாலே சும்மா இருக்க முடியலை! இன்னும் எப்படி சம்பாதிச்சு வாழ்க்கையிலே முன்னேறலாம்னு யோசிச்சுது. அப்படி அது ஒருநாள் யோசிச்சுக்கிட்டே ஆத்தங்கரையோரமா வர்றப்ப அங்கே ஒரு முதலை கரையை விட்டு மேலேறி ஓய்வெடுத்துக்கிட்டு இருந்துச்சு.

" என்ன் அமைச்சரே? இந்த பக்கம்?" அப்படின்னு கேட்டுது முதலை.

"என்னத்தை பெரிய அமைச்சர் வேலை! அரசவை கூடுவதே மாதத்தில் சில நாட்கள்தான்! அதிலும் உருப்படியாக ஒன்றும் செய்ய வாய்ப்பில்லாமல் போகிறது? ஏன் தான் அமைச்சர் ஆனோம் என்று வருத்தமாக இருக்கிறது? ஓய்வு நேரத்தில் ஏதாவது உருப்படியாக செய்து சம்பாதிக்கலாம் என்று தோன்றுகிறது!" சலித்து கொண்டது நரி.

"அரசாங்க உத்தியோகத்தில் இருந்தும், அரசரின் நம்பிக் கையை பெற்ற மந்திரியாக இருந்தும் உங்களுக்கு உங்கள் தொழிலின் மீதே சலிப்பாக இருக்கிறது போலிருக்கிறதே! உங்கள் ஓய்வுப்பொழுதை கழிப்பதற்கு நான் ஒரு யோசனை சொல்லவா?"

"சொல்! சொல்!"

"இதோ இந்த ஆற்றங்கரைச் சமவெளி சும்மாத்தான் இருக்கிறது! காட்டு விலங்குகள் இருக்கிறது என்று மனிதர்களும் வருவது இல்லை. இந்தப் பகுதியில் விவசாயம் செய்தால் என்ன?"

"நல்ல யோசனையாகத்தான் இருக்கிறது! ஆனால்..!"

"என்ன ஆனால்?"

"நான் வேலைக்கு போய்விட்டால் யார் கழனியை கவனிப்பது?"

"அதற்குத்தான் நான் இருக்கிறேனே! நாம் இருவரும் சேர்ந்து விவசாயம் செய்வோம்! ஒப்பந்தம் படி மகசூலை பகிர்ந்து கொள்வோம்! சரிதானே!" என்றது முதலை.



இப்போதே நிலத்தை சமப்படுத்துவோம்! உடனே களத்தில் இறங்கின. நிலத்தை செப்பனிட்டு விவசாயத்திற்கு ஏதுவாக மாற்றி அமைத்தனர்.

"நிலம் கிடைத்து விட்டது! எதை விதை ப்பது?

"உருளைக்கிழங்கு கிடைத்திருக்கிறது அதை விதைப்போம்" என்றது நரி.

"விதை ப்பது சரி! மகசூல் எப்படி பங்கிடுவது?" கேட்டது முதலை.

"நிலத்தின் மேலே விளைவது எல்லாம் உனக்கு! அடிப்பாகம் எனக்கு!" என்று புத்திசாலித்தனமாக சொன்னது நரி.

அப்பாவி முதலை ஏற்றுக் கொண்டது. கண்ணும் கருத்துமாக காவல் காத்தது. அறுவடைக் காலம் வந்தது. நரி கிழங்குகளை மூட்டை மூட்டையாக அறுவடை செய்து எடுத்துச் செல்ல முதலைக்கு ஒன்றும் கிடைக்கவில்லை.

"என்ன நரியாரே! இப்படி ஏமாற்றலாமா?"

"நான் எங்கே ஏமாற்றினேன்? ஒப்பந்தப்படி நடந்து கொள்கிறேன்! நீ வேண்டுமானால் அரசரிடம் கூட புகார் சொல்லிக் கொள் என்றது நரி.

சரி மீண்டும் பயிரிடுகையில் ஒப்பந்தம் மாற்றிக் கொள்வோம்! எனக்கு அடிப்பகுதி உனக்கு மேல் பகுதி! அப்படியானால் நான் பயிரிட உதவுகிறேன் என்றது முதலை

"அப்படியே ஆகட்டும்! உன் கஷ்டம் எனக்கு வேண்டாம்! உன்னிஷ்டம் போல நீ அடிப்பாகத்தையே எடுத்துக் கொள்!" என்று பதவிசாகச் சொன்னது நரி.

இந்த முறை நெல்லைப் பயிரிட்டது நரி. விளைச்சல் நன்றாக வந்தது. அறுவடையில் போது முதலைக்கு வெறும் தாள்தான் மிஞ்சியது. நரியோ மூட்டை மூட்டையாக நெல்லை அள்ளிச் சென்றது.

முதலைக்கு கோபமாக வந்தது" இந்த முறையும் என்னை ஏமாற்றி விட்டாய்?" என்றது.

ஒப்பந்தப்படி நீ கேட்டது கிடைத்தது. நான் எங்கே ஏமாற்றினேன் என்றது நரி. அடுத்த போகம் பயிரிட நரி வந்த போது. முதலை சொன்னது. இந்த முறை நான் விதை போடுகிறேன். என்றது.

நரி உஷார் ஆனது! "சரி நீயே விதைத்துக் கொள்! ஆனால் ஒப்பந்தம் போட்டுக் கொள்வோம்."

"என்ன ஒப்பந்தம்?"

"விளைச்சலில் மேல் பகுதியும் கீழ்ப் பகுதியும் எனக்கே வேண்டும். நடுப்பகுதியை நீ வைத்துக் கொள்!"

முதலை கரும்பை விதைத்தது. அறுவடை காலம் வந்தது. மேல் கரும்பும் அடிக்கரும்பும் ஒப்பந்தப்படி நரிக்கு போக தண்டுக் கரும்புகள் முதலைக்கு கிடைத்தது.

நரிக்கு ஆச்சர்யம்! "முதலையாரே! இந்த முறை நீங்கள் ஜெயித்து விட்டீர்கள்! ஆனால் இதை நீங்களே யோசித்து செய்ததாக தெரியவில்லையே!

"ஆமாம்! நானாக யோசிக்கவில்லை! இந்த பக்கமாக வந்த மனிதன் ஒருவன் தான் இந்த யோசனையை சொன்னான்."

"அதானே பார்த்தேன்! ஆனால் நாம் மோசம் போனோம்! முதலையாரே! இதுவரை இங்கே மனித தடமே இல்லை! நாம் சந்தோஷமாக இருந்தோம். இன்று இந்த இடத்தை மனிதனுக்கு காட்டிக் கொடுத்துவிட்டீர்கள் நம்மை அவன் சந்தோஷமாக இருக்க விடமாட்டான். அவன் தொல்லை தர ஆரம்பித்து விடுவான். இந்த இடம் மட்டுமல்ல கானகத்தையே அவன் அழிக்க ஆரம்பிக்க போகிறான். ஒருவிதத்தில் என் பேராசையும் இதற்கு காரணம் ஆகிவிட்டது நான் மட்டும் உங்களுக்கு சரி பாதி விளைச்சலை தந்திருந்தால் இந்த நிலை வந்திருக்காது! நானே குற்றவாளி!" என்றது வருத்தமாய்.

முதலை சொல்வதறியாமல் முழிக்க ஒரு மனிதக் கூட்டம் அங்கே வந்து நரியையும் முதலையையும் விரட்டிவிட்டு கரும்புகளை அள்ள ஆரம்பித்தது. காடுகள் இப்படித்தான் கொஞ்சம் கொஞ்சமாக கொள்ளை போக ஆரம்பித்தது. அதற்கு காரணமான நரி இன்னும் வயல்வெளிகளில் இரவுப் பொழுதில் ஊளையிட்டு அழுது கொண்டிருக்கிறது.




- 1477 - பேர்கண்டி இளவரசன் சார்ல்ஸ் கொல்லப்பட்டான். பேர்கண்டி பிரான்சின் பகுதியானது.
- 1554 - நெதர்லாந்தில் ஐண்ட்ஹோவென் என்ற இடத்தில் பரவிய தீயினால் 75 விழுக்காடு வீடுகள் சேதமாயின.
- 1896 - வில்ஹெம் ரொண்ட்ஜென் ஒரு வகைக் கதிர்வீச்சைக் கண்டுபிடித்ததாக ஆஸ்திரியப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்தது. இது பின்னர் எக்ஸ் கதிர் எனப் பெயரிடப்பட்டது.
- 1905 - யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான மோர்னிங் ஸ்டார் வாரப் பத்திரிகையாக பெரிய அளவில் வெளிவர ஆரம்பித்தது.
- 1940 - பண்பலை வானொலி முதற்தடவையாக காட்சிப்படுத்தப்பட்டது.
- 1967 - இலங்கை வானொலி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் எனப் பெயர் மாற்றம் பெற்றது.
- 1971 - உலகின் முதல் ஒருநாள் கிரிக்கெட் போட்டி ஆஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் மெல்பேர்ணில் நடைபெற்றது.
- 2000 - இலங்கையின் தமிழ் அரசியற் தலைவர் குமார் பொன்னம்பலம் கொழும்பில் படுகொலை செய்யப்பட்டார்.
- 2005 - ஐக்கிய அமெரிக்காவின் கலிபோர்னியாவைச் சேர்ந்த மைக்கல் பிரவுண் தலைமையிலான வானியல் ஆராய்ச்சிக் குழுவினர் சூரியக் குடும்பத்தில் ஏரிஸ் என்ற புதிய குறுங்கோள் (dwarf planet) ஒன்றைக் கண்டுபிடித்தனர்.
- 2007 - கொழும்பிலிருந்து 36 கி.மீ தொலைவில் நித்தம்புவ என்ற இடத்தில் இடம்பெற்ற பேருந்துக் குண்டுவடிப்பில் 6 பொதுமக்கள் கொல்லப்பட்டு 50 பேர் வரை காயமும் அடைந்தனர்.

**பிறப்புகள்**

- 1592 - ஷாஜகான், மொகாலயப் பேரரசர் (இ. 1666)
- 1876 - கொன்ராடு அடேனார், செருமனியத் அரசியல் தலைவர் (இ. 1967)
- 1902 - ரா. கிருஷ்ணசாமி நாயுடு, தமிழக அரசியல்வாதி (இ. 1973)
- 1926 - ஜே. பி. ஜெயரத்தினம், சிங்கப்பூர் அரசியல்வாதி (இ. 2008)
- 1927 - சிவாய சுப்ரமணியசுவாமி, இந்து அமெரிக்க ஆன்மிகவாதி (இ. 2001)
- 1928 - சுல்பிக்கார் அலி பூட்டோ, பாக்கித்தான் அரசுத்தலைவர் (இ. 1979)
- 1932 - உம்பெர்த்தோ எக்கோ, இத்தாலிய எழுத்தாளர்
- 1937 - சித்தி அமரசிங்கம், ஈழத்துக் கலைஞர், பதிப்பாளர் (இ. 2007)
- 1938 - நுகுகி வா தியங்கோ, கென்ய எழுத்தாளர்

**இறப்புகள்**

- 1762 - எலிசவேத்தா பெட்ரோவ்னா (பி. 1709)
- 1933 - கால்வின் கூலிஜ், ஐக்கிய அமெரிக்காவின் 30வது குடியரசுத் தலைவர் (பி. 1872)
- 1943 - கார்வர், அமெரிக்க தாவரவியலாளர் (பி. 1864)
- 1952 - விக்டர் ஹோப், இரண்டாம் லின்லித்கொபிரபு, ஸ்கொட்லாந்து அரசியல்வாதி (பி. 1887)
- 1970 - மாக்ஸ் போர்ன், நோபல் பரிசு பெற்ற செருமானிய இயற்பியலாளர் (பி. 1882)
- 1981 - அரால்டு இயூரீ, நோபல் பரிசு பெற்ற அமெரிக்க வேதியியலாலளர் (பி. 1893)
- 2000 - குமார் பொன்னம்பலம், இலங்கையின் தமிழ் அரசியற் தலைவர், (பி. 1938)

முயற்சியும் வாய்ப்பும் சந்திக்கும் போது அந்த இரண்டையும் அதிர்ஷ்டம் இணைத்து வைக்கிறது. – ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தோற்ற இனமாக நினைத்து தீர்வு பெற நினைத்தல் கேடாம்

தமிழ் மக்களின் வாழ்வியல் தளம் என்பது தனித்து இலங்கை அரசு தரும் தீர்வுத்திட்டத்தால் மட்டும் நிவர்த்திக்கப்படக் கூடியதன்று. மாறாக எங்கள் மண்ணை வாழ்விக்க நாங்கள் ஒன்று சேர்ந்து செய்ய வேண்டிய பணிகள் ஏராளம் உண்டு.

ஒரு இனம் தனது இருப்பை நிலைநிறுத்த வேண்டுமாயின் அதற்கான அந்த இனம் பல்வேறு தளங்களில் தனது முன்னேற்றத்தை காட்டுவது கட்டாயம்.

அந்த வகையில் யுத்தத்தினால் பாதிப்படைந்த எங்கள் தமிழினமும் பொருளாதாரம், கல்வி, பண்பாடு, சுகாதாரம் உள்ளிட்ட அனைத்து நிலைகளிலும் உயர்த்திக் கொள்வது அவசியமாகும்.

ஒரு இனம் தனது பண்பாட்டை, ஒழுக்க நெறியை பிறழ்வுக்கு உட்படுத்துமாக இருந்தால் அந்த இனம் உரிமை பெற்ற போதிலும் வாழ முடியாமல் தத்தளிக்கும் அவலநிலை ஏற்படும்.

எனவே, ஒரு பக்கத்தில் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பதை வலியுறுத்துவதும் அது தொடர்பிலான இராஜதந்திர வியூகங்களை அமைப்பதிலும் நடந்து கொண்டிருக்கின்ற அதேநேரம்,

எமது தாயகத்தின் பொருளாதார அபிவிருத்தி, கல்வி, சுகாதார, சமூகமேம்பாடுகள் தொடர்பிலும் ஆரோக்கியமான திட்டமிடல்கள் எழுச்சி பெற வேண்டும்.

இருந்தும் எங்களின் வாழ்நாளில் பெரும் பகுதி இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயப் பொருளை பேசுபடு பொருளாக்கி ஏனைய விடயங்களை கவனிப்பின்றி விட்டதன் காரணமாக எங்கள் இளம் சமூகத்தின் நடத்தைக் கோலங்கள் குறித்து கவலை கொள்ள வேண்டிய இனமாக இன்று நாம் உள்ளோம்.

எனவே, இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற முயற்சிகளின் சமாந்திரப் பயணிப்பாக, எங்களின் ஒட்டுமொத்த அபிவிருத்தி குறித்த விடயங்களும் பயணிக்க வேண்டும்.

அப்போதுதான் நாங்களும் இந்த மண்ணில் மன உறுதி படைத்தவர்களாக, எதிர் தாக்கங்களுக்கு ஈடுகொடுக்கக் கூடியவர்களாக நின்று நிலைக்க முடியும். அதேசமயம் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயத்தின் எச் சந்தர்ப்பத்திலும் நாம் தோற்றுப் போன இனம் என்ற நினைப்போடு தீர்வு பற்றிப் பேச நினைப்பதோ அல்லது தீர்வைப் பெற நினைப்பதோ மிகப் பெரும் தவறாகும்.

இத்தகைய தோல்வி மனப்பாங்குடன் தீர்வைப் பெற நினைத்த எந்த ஒரு இனமும் எச் சந்தர்ப்பத்திலும் மீள் எழுச்சி பெற்றதாகச் சரித்திரமில்லை.

அதேநேரம் ஒரு இனத்தின் தலைமை என்பதற்குள் இனம் சார் பற்றும் அந்த இனம் சார்ந்த மக்களை நேசிக்கின்ற பெரும் குணமும் இருந்தாக வேண்டும்.

இதைவிடுத்து யுத்தத்தில் பாதிக்கப்பட்டவர்களை, யுத்தத்தின் பின்னர் புனர்வாழ்வு பெற்றுத் திரும்பியவர்களை வெறுப்போடு பார்க்கின்ற மனநிலை என்பன இருக்குமாயின் ஒரு போதும் எங்களுக்கான முழுமையான தீர்வை நாம் பெற்று விட முடியாது.

ஆகையால் முதலில் தமிழினம் வாழ வேண்டுமாயின் தமிழ்த் தலைமை தமிழ் மக்களை தனது உயிராக நினைக்க வேண்டும். அத்துடன் நாங்கள் தோற்ற இனம் அல்ல; எங்கள் போராட்டத்தின் வீரச் செறிவு கண்டு கலங்கிய உலகம் ஒன்றுகூடி தோற்கடிக்கப்பட்ட இனம் என்று உணர்தல் வேண்டும்.

தோற்பது வேறு; தோற்கடிக்கப்படுவதுவேறு. நாங்கள் வல்லரசுகள் கூடி தோற்கடிக்கப்பட்டவர்கள் எனில், நாங்களே இந்த உலகத்தின் வீரர்கள். ஆகையால் எங்கள் தோல்வி எங்களுக்கு இன்னமும் உத்வேகத்தை, ஓர்மத்தைத் தர வேண்டும். இந்த நினைப்போடு எங்களுக்கான தீர்வைக் கேட்பதே எங்களை நிம்மதியாக வாழ வைக்கும்.

# கடற்படை வசமுள்ள பாடசாலைகள் இன்னும் விடுவிக்கப்படவில்லை

## தமிழாசிரியர் சங்கம் கவலை

(கொழும்பு)

இலங்கையின் கிழக்கே திருகோணமலை மாவட்டத்திலுள்ள சம்பூர் பிரதேசத்தில் மீள்குடியேற்றத்திற்கு அனுமதி வழங்கப்பட்டு மாதங்கள் பல கடந்தும் கடற்படை வசமுள்ள அரசாங்க பாடசாலைகள் இதுவரை விடுவிக்கப்படாமை குறித்து கிழக்கு மாகாண தமிழாசிரியர் சங்கத்தினர் கவலை வெளியிட்டுள்ளனர்.

சம்பூர் பிரதேசத்தில் 818 ஏக்கர் காணி விடுவிக்கப்பட்டுள்ள போதிலும் கடற்படை பயிற்சி முகாம் அமைந்துள்ள 237 ஏக்கர் காணி இன்னும் விடுவிக்கப்பட வேண்டியுள்ளது.

கடற்படை பயிற்சி முகாம் அமைந்துள்ள எல்லைக்குள்தான் சம்பூர் மகா வித்தியாலயம் மற்றும் ஸ்ரீ முருகன் ஆரம்ப பாடசாலை ஆகிய பாடசாலைகளும் மக்கள் குடியிருப்பு நிலங்களும் உள்ளன.

குறித்த பாடசாலைகள் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை கடற்படை முகாமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

2005-ம் ஆண்டில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த சம்பூர் பிரதேச மக்கள் யுத்த சூழ்நிலையில் தமது பிரதேசத்தை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் அந்த பிரதேசம் அரசினால் சுவீகரிக்கப்பட்ட நிலையில் அந்த பிரதேச மக்களின் மீள்குடி யேற்றமும் தடைப்பட்டிருந்தது.

கடந்த ஆண்டு ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தையடுத்து தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மக்களின் காணிகளை மீள கையளிக்கும் உத்தரவை பிறப்பித்திருந்தார்.

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் சம்பூர் பிரதேச மீள் குடியேற்றத்தை அதிகார பூர்வமாக ஆரம்பித்து வைத்த ஜனாதிபதி அங்குள்ள கடற்படை முகாமுக்கு மாற்று காணி அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அறிவித்திருந்தார்.

இரண்டு, மூன்று மாதங்களில் கடற்படையினர் குறித்த பாடசாலைகளிலிருந்து வெளியேறிவிடுவார்கள் என ஜனாதிபதியினால் அவ்வேளை உறுதிமொழி வழங்கப்பட்டிருந்த போதிலும் அது நிறைவேற்றப்படவில்லை என்கிறார் கிழக்கு மாகாண தமிழாசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ். ஜெயராஜா.

இது தொடர்பாக தெளிவுபடுத்துமாறு மாகாண முதலமைச்சர் மற்றும் மாகாண கல்வி அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பி வைத்துள்ள அவசர மனுக்களில் அவர் வலியுறுத்தி கேட்டுள்ளார். (எ-11)

## இளைஞன் கடத்தல் விவகாரம் ஹிருணிகா அணியினருக்கு மறியல்

தெமட்டகொட பகுதியில் கடந்த டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்ற கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதான ஹிருணிகா எம்.பி.யின் ஆதரவாளர்கள் 8 பேரையும் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதவான் நீதிமன்ற நீதவான் நேற்று உத்தரவிட்டுள்ளார். (இ-7)

## கையில் கத்தி வெட்டுக்கு இலக்கான இளைஞன்

(யாழ்ப்பாணம்)

கையில் கத்தி வெட்டுக்கு இலக்கான இளைஞர் ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இரவு அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நண்பர்களுக்கிடையில் இடம்பெற்ற கைகலப்பு ஒன்றே இறுதியில் கத்தி வெட்டில் முடிந்துள்ளது.

இச்சம்பவம் வடமராட்சி துன்னாலை மந்திகைப் பகுதியில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6.30 மணியளவில் இடம் பெற்றது.

இதில் அதேயிடத்தைச் சேர்ந்த வசந்தன்- சாருஜன் (வயது- 23) என்ற இளைஞரே கத்திவெட்டுக்கு இலக்காகி காயமடைந்துள்ளார்.

குறித்த இளைஞர் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5,30)

## மஞ்சள் கடவை வேண்டும்

(கரணவாய்)

நெல்லியடி புதிய சந்தைப பகுதியில் மஞ்சள் கடவை அமைக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடப்பட்டுள்ளது.

மஞ்சள் கடவை அமைக்கப் படாது காணப்படுவதால் சந்தைக்கு செல்கின்ற பொது மக்கள் பல்வேறு வீதி விபத்துக்களை சந்திக்க நேரிடுகிறது.

இதில் குறிப்பாக வயோதிபர்கள், சிறுவர்கள், கர்ப்பிணிப் பெண்கள் போன்றோர் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்தில் எடுத்து குறித்த பகுதி வீதியில் மஞ்சள் கடவை அமைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5,60)

## யாழ்ப்பாணம்- ஹற்றன் இரவு பேருந்துச் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்- ஹற்றன் நோக்கி பேருந்துச் சேவை நேற்று முதல் ஆரம்பிக்கப் படடுள்ளது. இச்சேவை யாழ். மதிய பேருந்து நிலை யத்திலிருந்து தினமும் இரவு 8.45 மணிக்கு ஹற்றன் நோககி புறப்படும் அதேபோல ஹற்றனில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி மாலை 4 மணிக்கு பேருந்துபுறப்படும் இச்சேவைக்கான யாழ்ப்பாணம் ஹற்றன் ஒரு வழிக் கட்டணம் ரூபாய் 720 ஆகும்.

ஹற்றன் நோக்கி சேவையாற்றும் இப் பேருந்தில் பயணிக்கும் பயணிகள் ஆசன முற்பதிவினை யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் மேற்கொள்ளலாம் என இ.போ.ச. யாழ்.சாலை முகாமையாளர் செ.குலபாலசெல்வம் அறிவித்துள்ளார். (இ-7)

## கட்சிகளின் ஒன்றிணைவு பற்றி எனக்கு எதுவும் தெரியாது

### மகிந்த மறுப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் மேலும் 9 கட்சிகள் இணையவுள்ளதாக பல்வேறு தகவல்கள் வெளிவருகின்றமை தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள்சுதந்திர முன்னணியை ஏனைய கட்சிகளுடன் ஒன்றிணைப்பது தொடர்பில் எந்தவொரு நபரும் தன்னுடன் இது வரை பேசவோ அல்லது அபிப்பிராயங்களோ கேட்கப்படவில்லை எனவும் தெரிவித் துள்ள மகிந்த,

வேலையற்ற ஒரு சிலர் இவ்வாறான கதைகளை கட்டவிழ்த்து விடுவதாகவும் தெரிவித்துள்ளார். (இ-7)

## வீதியில் தேங்கி நிற்கும் நீரால் மக்களுக்குச் சிரமம்

பருத்தித்துறை மந்திகை சிலையடிக்கு அருகாமையில் இருந்து காந்தியூருக்கு செல்லும் வீதியில் உள்ள குழியில் தண்ணீர் தேங்கி நிற்கின்றது.

பருத்தித்துறை-யாழ்ப்பாண பிரதான வீதியில் இருந்து காந்தியூருக்குச் செல்லும் வதியில் பால்சாலைக்கு அருகாமையாக உள்ள வடிகால் அமைப்பு சீரின்மை காரணமாகவே வீதியில் மழைநீர் தேங்கி காணப்படுதாக கூறப்படுகிறது. அதிக மக்கள் பயன்படுத்தி வருகின்ற இவ் வீதி 2016 ஆம் ஆண்டிலாவது புனரமைப்புச் செய்யப் படுமா? என பொதுமக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (இ-5,60)

## அவசர அம்புலன்ஸ் சேவை நாளை ஆரம்பம்

வடக்கு மாகாணத்தில் அவசர மருத்துவ நிலைகளிலும் விபத்துக்களின் போது ஏற்படும் உயிரிழப்புக்களை குறைக்கும் நோக்குடன் அவசர அம்புலன்ஸ் சேவையொன்று நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வடக்கு மாகாண சபை சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி பத்மநாதன் சத்தியலிங்கத்தினால் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படும். (2)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



முன்னேறிச்செல்லுங்கள், முன்னேறிச் செல்லுங்கள் வீரர்களே! கட்டுண்டவர்களின் தளைகளை வெட்டியெறியவும் எளியவர்களின் துயரச் சுமையைக் குறைக்கவும் பாமரர்களின் இருண்ட உள்ளங்களை ஒளிபெறச் செய்யவும் முன்னேறிச் செல்லுங்கள்.

'அஞ்சாதே அஞ்சாதே' என்று முழங்குகிறது வேதாந்த முரசு. பூமியில் வசிக்கின்ற மனிதர்கள் அனைவருடைய இதய முடிச்சுக்களையும் அது அவிழ்த்தெறியட்டும்.

நம் மாணவர்கள் பெறும் கல்வி எதிர்மறையானதாக உள்ளது. மாணவன் புதிதாக ஒன்றையும் கற்பதில்லை; அதேவேளையில் தன்னிடம் உள்ளவற்றையும் இழக்கிறான்.

கல்வியால் நம்பிக்கை வருகிறது, தன்னம்பிக்கையில் வலிமையால் உள்ளிருக்கும் ஆன்மா விழித்தெழுகிறது.

# இந்தியாவுக்கு எதிரான ஆஸி அணி அறிவிப்பு




இந்திய அணிக்கு எதிராக ஒருநாள் தொடரில் பங்கேற்கும் அவுஸ்திரேலிய அணி நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்திய கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் செய்து 5 ஒருநாள் மற்றும் மூன்று இருபது-20 போட்டிகளில் விளையாடுகிறது.

ஒருநாள் தொடர் எதிர்வரும் 12 ஆம் திகதி பெர்த்தில் தொடங்குகிறது. அதேபோல் 26 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை இருபது- 20 போட்டி நடைபெறுகிறது.

இந்நிலையில் ஒருநாள் தொடருக்கான அவுஸ்திரேலிய அணியை அந்நாட்டு கிரிக்கெட் வாரியம் அறிவித்துள்ளது.

இதில் புதுமுக வீரர்கள் ஸ்காட் போலண்ட், ஜோயல் பேரிஸ் இடம் பெற்றுள்ளனர். கானே ரிச்சர்ட்சனும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.


காயத்தில் இருந்து குணம் அடைந்ததால் பல்க்னெர், ஹாசல்வுட் மற்றும் ஷான்மார்ஷ் மீண்டும் அணிக்கு திரும்பி உள்ளனர்.

வாட்சன், ஜோபர்ன்ஸ், ஆஸ்டன் ஆகர், ஹாஸ்டிங்ஸ், ஸ்டார்க், கும்மின்ஸ், பேட்டின்சன், நாதன் கோல்ட்டர் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலிய அணி வீரர்கள் விபரம்:

ஸ்டீவ் சுமித் (அணித்தலைவர்), டேவிட் வோர்னர், ஆரோன் பிஞ்ச், ஷான் மார்ஷ், பெய்னி, மக்ஸ்வெல், மிட்சேல் மார்ஷ், மேத்யூ வாடே, பல்க்னெர், கானே ரிச்சர்ட்சன், ஹாசல்வுட், ஸ்காட்போலண்ட், ஜோயல் பேரிஸ். (க)

# சுவிஸ் புயல் வாவ்ரிங்கா சென்னை ஓபன் டென்னிஸில்



'சுவிஸ்' புயல் வாவ்ரிங்காவுக்கு என்று சென்னையில் ஏராளமான ரசிகர்கள் பட்டாளம் உண்டு. அவரது 'ரொக்கெட்' மின்னல் வேகத்தில் சுழன்று அடிப்பதை காண ரசிகர்கள் ஆவலோடு காத்திருப்பார்கள். அவர் 2014 ஆம் ஆண்டு சென்னை ஓபனில் வெற்றி பெற்ற போது, அந்த ஆண்டில் கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற அவுஸ்திரேலிய ஓபனை முதல் முறையாக உச்சிமுகர்ந்து வரலாறு படைத்தார்.

2015 ஆம் ஆண்டில் இங்கு வெற்றி கிரீடம் ஏந்திய போது மற்றொரு கடினமான கிராண்ட்ஸ்லாமான பிரெஞ்ச் ஓபனை கைப்பற்றி வியப்பூட்டினார். இந்த ஆண்டில் சென்னை ஓபனை தொடர்ச்சியாக 3 ஆவது முறையாக தனதாக்கி 'ஹாட்ரிக்' சாதனை படைப்பதில் அவர் தீவிரமாக இருக்கிறார். இங்கு வெற்றி பெற்று அவர் கிராண்ட்ஸ்லாமிலும் 'ஹாட்ரிக்' நிகழ்த்துவாரா? அந்த ராசி தொடருமா? என்பதை பொறுத்திருந்து பார்ப்போம். (க)

# இலங்கை கிரிக்கெட் வாரியத் தலைவராக திலங்கா சுமதிபாலா நியமனம்



இலங்கை கிரிக்கெட் வாரியத்தின் புதிய தலைவராக திலங்கா சுமதிபாலா தெரிவு செய்யப்பட் டுள்ளார். இலங்கை கிரிக்கெட் வாரியத்தின் நிர்வாகிகள் தேர்வு நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது.

இதில் துணைத் தலைவர் பதவிக்கு உலகக்கிண்ணம் வென்று கொடுத்த முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்கா போட்டியிட்டார்.

அதேபோல் தலைவர் பதவிக்கு ரணதுங்கா சகோதரர் நிஷாந்தா போட்டியிட்டார். இந்நிலையில் அர்ஜுன ரணதுங்கா (80 ஓட்டுகள்) 22 ஓட்டுகள் வித்தியாசத்தில் ஜெயந்தா தர்மதாசாவிடமும் (102 ஓட்டுகள்), நிஷாந்தா (56 ஓட்டுகள்) 32 ஓட்டுகள் வித்தியாசத்தில் திலங்கா சுமதிபாலாவிடமும் (88 ஓட்டுகள்) வீழ்ந்தனர்.

இதன் மூலம் திலங்கா சுமதிபாலா புதிய தலைவராக தெரிவு செய்யப்பட்டார். பெரும்பாலான பதவிகளை திலங்கா சுமதிபாலா அணியே கைப்பற்றியது. (க)

# இங்கிலாந்து கவுண்டி அணி வீரர் மெத்தியூ ஹொப்டனன் திடீர் மரணம்



இங்கிலாந்து சசெக்ஸ் கவுண்டி அணியின் வேகப்பந்து வீச்சாளர் மெத்தியூ ஹொப்டனனின் திடீர் மரணம் இங்கிலாந்து கிரிக்கெட் வட்டாரத்தை கவலைக்குள்ளாக்கியுள்ளது. சசெக்ஸ் அணியில் கடந்த 2014 ஆம் ஆண்டு முதல்தர போட்டியில் அறிமுகமான மெத்தியூ ஹொப்டன், அந்த அணிக்காக நடைபெற்ற 3 வகையான போட்டிகளிலும் 48 விக்கெட்டுகளை வீழ்த் தியுள்ளார். வேகப்பந்து வீச்சில் சிற ந்து விளங்கிய மெத் தியூ ஹொப்டனன் தனது 22 வயதில் திடீரென மரணமடைந்துள்ளார். இவரது மரணம் குறித்து சசெக்ஸ் ஹவுண்டி அணி விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஹொப்டனனின் மரண செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்துள்ளோம். அவரை இழந்து வாடும் குடும்பம் மற்றும் நண்பர்களுக்கு எங்களது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை, ஹொப்டனன் எவ்வாறு மரணம் அடைந்தார் என்பதற்கான விளக்கம் அளிக்கப்படவில்லை. இவரது மரணத்திற்கு சக விளையாட்டு வீரர்கள் இரங்கல் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க)

# ரணதுங்கா என்னை கடுமையாக திட்டுவார் நான் பயத்தில் அழுவேன்:வாஸ்

இலங்கை அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் சமிந்த வாஸ், 1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணம் பற்றி மனம் திறந்து பேசியுள்ளார்.

1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியில் கத்துக் குட்டி அணியாக கருதப்பட்ட இலங்கை அணி, அர்ஜுன ரணதுங்கா தலைமையில் உலகக்கிண்ணம் வென்று வரலாறு படைத்தது.

இந்த தொடரில் வேகப்பந்து வீச்சாளர் சமிந்த வாஸ் தான் ரணதுங்காவின் துருப்பு சீட்டாக இருந்தார்.

வாஸ் கூறுகையில்.

1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியில் அதிவிரைவில் விக்கெட்டுகளை வீழ்த்துவதும், ஓட்டங்களை கட்டுப்படுத்துவதும் தான் எனது முக்கிய பணியாக கொடுக்கப்பட்டது என்றார்.




அவர் மேலும் கூறுகையில், நான் ரணதுங்கா மேல் அதிக மரியாதை வைத்துள்ளேன். ஆரம்ப காலத்தில் அவர் என்னை கடுமையாக திட்டுவார். இதனால் நான் அழுவேன். பிறகு அவரது விமர்சனங்கள் என்னை திருத்தவே என்பதை உணர்ந்து செயற்படுவேன். அவர் வீரர்களை நல்ல வழியில் அழைத்துச் செல்வதை விரும்புவார். தற்போது எனக்கு நல்ல நண்பராக இருக்கிறார் என்றார்.

பந்துவீச்சாளர்கள் பற்றி கூறுகையில், கடந்த 2001 ஆம் ஆண்டு மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான தொடரில் நான் 26 விக்கெட்டுகள் எடுத்தேன்.

இதை மறக்க முடியாது. இலங்கையில் பெரும்பாலும் ஆடுகளங்கள் முரளிதரனுக்கு ஏற்றவாறு தான் அமைக்கப்பட்டன. அனைவரின் கேள்வியும் அத்தகைய ஆடு களத்தில் எப்படி விக்கெட் எடுத்தேன் என்பது தான். பந்துவீச்சாளர்கள் பாலைவனத்தில் பந்துவீச சொன்னால் கூட அதற்கு ஏற்றவாறு செயற்பட வேண்டும். அந்த அளவு வளைந்து கொடுக்க வேண்டும் என்று கூறினார். (க)

## மாணவர் அனுமதி இம்முறை அதிகரிப்பு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியிலுள்ள பல்கலைக் கழகங்களுக்கு இம்முறை 2 ஆயிரம் தொடக்கம் 2 ஆயிரத்து 500 வரையான மாணவர்கள் மேலதிகமாகச் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளதாக பல்கலைக்கழகக் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

சுமார் 2 ஆயிரம் வரையான மாணவர்கள் தொழில்நுட்பவியல் கற்கை நெறிக்கு ஈடுபடுத்தப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் டீ.சீ.திசாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

5 பல்கலைக்கழகங்களில் தொழில்நுட்பவியல் கற்கை நெறியை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

# ஐ.ம.சு முன்னணியிலிருந்து தேசிய சுதந்திர முன்னணி விலக்கல்!

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவது குறித்து ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டணி கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எனினும் இந்த பேச்சுவார்த்தையில் விமல் வீரவன்சவின் தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி உள்ளடக்கப்படவில்லை என கூறப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் 4 அரசியல் கட்சிகள் அங்கம் வகிப்பதாகவும் மேலும் 9 கட்சிகள் கூட்டணியில் இணைய எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தேச விடுதலை மக்கள் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, இலங்கை மக்கள் கட்சி ஆகிய கட்சிகளே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டணி கட்சிகளாகும்.

விமல் வீரவனசவின் தேசிய சுதந்திர முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கூட்டணி கட்சி அலல எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்தன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் அண்மையில் பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்ததுடன் அவர் மகிந்த அணியில் இருந்து விலகி, மைத்திரி அணியுடன் இணைய விருப்பதாக ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டிருந்தன.

இந்த நிலையில், மக்கள் ஐக்கிய முன்னணியுடனான பிரச்சினைகள் குறித்து பேச்சு நடத்தி, இறுதி முடிவு எடுக்கப்படும் எனவும் திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான சூழ்நிலையில், வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோரின் கட்சிகளுக்கு எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து போட்டியிடும் வாய்ப்பு கிடைக்காமல் போயுள்ளது. (எ-11)

## விளக்கமறி...

டையைச்சேர்ந்த 8 மீனவரகளும், காரைக்காலை சேர்ந்த 14 இந்திய மீனவர்களும், பருத்தித்துறை, ஊர்காவற்றுறை மற்றும் மன்னார் ஆகிய கடற்பகுதிகளில் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு யாழ் மற்றும் மன்னார் மாவட்ட கடற்தொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைக்கப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

நேற்றைய தினம் ஊர்காவற்துறை பருத்தித்துறை மற்றும் மன்னார் நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்ட போது அந்தந்த நீதிமன்றங்கள் அவர்களை எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளன. (எ-9)

## பஸ் - ஆட்டோ விபத்து...

விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் யாழ்ப்பாணம் 561 கஸ்தூரியார் வீதியை சேர்ந்த யோகேஸ்வரன் தவமணி (வயது 65) என்ற பெண்மணியே உயிரிழந்தவராவார்.

சடலமானது நேற்று இரவு 8 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேதப்பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக காரைநகர் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட வருகின்றனர்.

இவ் விபத்தில் ஆட்டோவில் பிரயாணம் செய்த ஏனையவர்கள் காயங்கள்எதுவுமின்றி தப்பியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-30)

## இந்திய வெளி...

சமரவீர உள்ளிட்ட அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இதன்போது இருதரப்பு வர்த்தகம், முதலீடு மற்றும் பொருளாதார உறவுகளை வலுப்படுத்துதல் தொடர்பிலும், மீனவர்களின் பிரச்சினைகள் குறித்தும் கூடுதல் கவனம் செலுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-11)

## அரசியல் கைதி...

குறித்த வழக்கில் சட்டமா அதிபர் திணைக்களத்தால் இவர்களுடைய புனர்வாழ்வு தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் ஆலோசனைகளும் சமர்ப்பிக்காத நிலையில் கைதிகளை எதிர்வரும் 13 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் இவர்கள் சார்பாக மனித உரிமை செயற்பாட்டு சட்டத்தரணிகளேமன்றில் ஆஜராகியிருநதமை குறிப்பிடத்தக்கது. (எ-9)

## பொங்கலுக்கு முன் விடு...

க்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர். அவர்கள் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நல்லாட்சி அரசு என கூறும் இந்த அரசு எம்மை விடுவிப்பதாக கூறி ஏமாற்றி வருகின்றது. தமிழ் அரசியல் கைதிகளை மனித கேடயமாக பயன்படுத்தி தமது செயற்பாடுகளை செய்துவருகின்றனரேதவிர எம்மை விடுவிப்பதற்கான நோக்கம் எவையும் அவர்களிடத்தில் இல்லை. இந்த நிலையில் தேசிய தைப்பொங்கல் தினத்தை தமிழ் மக்களுடன் கொண்டாடுவதாக கூறியிருப்பது எமக்கு ஆச்சரியமாக உள்ளது.

எனவே இந்தப் பொங்கல் விழாவில் எம்மில் அக்கறை உள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள், வடமாகாண சபை உறுப்பினர்கள் மலையக தமிழ் அரசியல் தலைவர்கள் எவரும் கலந்து கொள்ளக் கூடாது.

எமக்கு சரியான தீர்வை பெற்றுத் தரும் வரையில் அரசுக்குஅழுத்தம் கொடுக்க வேண்டும் எனமேலும் தெரிவித்தனர். (எ-9)

## ஆர்ப்பாட்...

நுகேகொட - கொஹுவல சந்தியில் எதிர்வரும் 8ஆம் திகதி மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ள இந்த ஆர்ப்பாட்டத்தில், சிவில் சமூகத்தினர், புத்திஜீவிகள், மாற்றத்தை விரும்பும் மக்கள் என அனைவரையும் கலந்துகொள்ளுமாறு விஜித ஹேரத் அழைப்பு விடுத்துள்ளார். (எ-11)

## பாக். பிரத...

யத்தில் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீபை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர்கள் மற்றும் இராஜதந்திரிகள், உயரதிகாரிகள் வரவேற்றனர். அதை யடுத்து இராணுவ அணிவகுப்பு மரியாதையும் அளிக்கப்பட்டது.

அதன் பின்னர், நவாஸ் ஷெரீப், அவரது மனைவி மற்றும் அதிகார பூர்வ குழுவினர், கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து, வாகன பவனியாக கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இலங்கை வந்துள்ள பாகிஸ்தான பிரதமர், அரசியல், பொருளாதார, வர்த்தக உறவுகளை வலுப்படுத்துவது தொடர பாக இலங்கை தலைவர்களுடன் பேச்சு நடத்தவுள்ளார். (எ-11)

## 6500 மாணவர்கள்...

பெற்றுக்கொண்டுள்ளனர்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் டபிள்யு.எம்.என்.ஜே. புஸ்பகுமாரவின்கையொப்பத்துடன்வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு மூன்று ஏ சித்திகளைப் பெற்றுக்கொண்ட பரீட்சார்த்திகளில் 5 ஆயிரத்து 960 பேர பாடசாலை மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

உயர்தரப் பரீட்சையில் 2 இலட்சத்து 55 ஆயிரத்து 191 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர்.

இதில் ஒரு இலட்சத்து 31 ஆயிரத்து 137 பரீட்சார்த்திகள் பல்கலைக் கழகத்திற்கு பிரவேசிக்க குறைந்த பட்ச தகுதிகளைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

2014ம் ஆண்டில் மொத்த பரீட்சார்த்திகளில் 60.43 வீதமான பரீட்சார்த்திகள் பல்கலைக்கழகம் செல்ல குறைந்த பட்ச தகுதியை பூர்த்தி செய்திருந்ததுடன், 2015-ம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 60.91 வீதமாக காணப்படுகின்றது என அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-11)

## ரொனி பிளே...

எதிர்நோக்கியுள்ள தீர்வு காணப்பட வேண்டிய பல்வேறு விடயங்கள் தொடர்பில் முன்னாள் பிரதமருக்கு சம்பந்தன் தெளிவுப்படுத்தியுள்ளார்.

இதில் வடக்கிலே காணப்படும் அதிகளவிலான இராணுவப்பிரசன்னம், இன்னும்விடு விக்கப்படாமல் இருக்கும் காணிப்பிரச்சினை, காணாமல் போனோர் தொடர்பிலான விசாரணைகள், தமிழ் அரசியல்கைதிகளின் விடுதலை போன்ற விடயங்கள் தொடர்பில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் எடுத்துரைத்ததுடன் இந்த பிரச்சி னைகளுக்கு உடனடித் தீர்வுகள் காணப்படுவதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

மேலும் வடக்குகிழக்கு பிரதேசங்களில் காத்திரமான அபிவிருத்தித் தட்டங்கள் முன்னெடுக்கப்படவேணடும் எனவும், மக்களின் வாழ்வாதாரங்கள் வலுப்படுத்தப்படவேண்டும் எனவும் தெரிவித்தார்.

ஐ.நா. தீர்மானம் குறித்து கருத்து தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர், பொறுப்பு கூறுதலானது உண்மை, நீதி, போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்தப்பட வேண்டும் என தெரிவித்தார், அது மாத்திரமன்றி நிலையான, ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய, நியாயமான, செயற்படுத்தபடக் கூடிய ஒரு அரசியல் தீர்வை எட்டுவதன் அவ சியத்தையும் வலியுறுத்தினார். (எ-11)

## இராணுவத்தை வெளியேறக்...

காலை பத்து மணியளவில் நடைபெற்ற இப்போராட்டத்தில் பெருமளவிலான மக்கள் கலந்து கொணடிருந்தனர்.

கேப்பாப்புலவில் 490 ஏக்கர் பொதுமக்களின் நிலப்பரப்பினை இராணுவம் அபகரித்து வைத்துக் கொண்டு அந்த நிலத்திற்கு சொந்தமான மக்களை வேறு இடங்களில் மாதிரிகிராமம் என்ற பெயரில் குடியமர்த்தி விட்டுள்ளது. இதனை உடனடியாக விடுவிக்குமாறு கோரியே அப்பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

கேப்பாப்பிலவு மாதிரி கிராமத்தில் 320 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இவர்களில் 120 குடும்பங்கள் இராணுவம் பிடித்து வைத்துள்ள குறித்த இடத்திற்கு சொந்தக்காரர்களாவர்கள். எனினும் அம்மக்களின் காணிகளை விடுவிக்காமல் மக்களின் காணிகளில் பாரியளவு முகாமை அமைத்து தமது நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தமது காணிகளை விடுவிக்குமாறு அப்பகுதி மக்கள் பல தடவைகள் முல்லை மாவட்ட அரச அதிபர் ஊடாகவும், மற்றும் தமது போராட்டங்கள் ஊடாகவும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்த போதிலும், அவர்களது கோரிக்கைகளை கவனத்திலெடுக்காத அரசு, சொந்த நிலத்தில் அம்மக்களை மீளக்குடியமர்த்தாமல் அருகில் உள்ள இடமொன்றில் மாதிரிக்கிராமம் என்ற இடத்தை அமைத்து அங்கு மக்களை குடியமர்த்தியுள்ளனர்.

அந்த மாதிரி கிராமத்தில் எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி வாழ்ந்து வரும் அம்மக்கள், தமது இந்த மாதிரி கிராமமும் அரசாங்கத்தின் உதவிகளும் வேண்டாம், எங்கள் சொந்த நிலங்களை தந்தால் போதும்.

எங்களால் முன் னேற முடியும், ஆகையால் எங்கள் இடத்தில் உள்ள இராணுவம் வெளியேற வேண்டும் என வலியுறுத்தியே மேற்படி போராட்டம் இடம்பெற்றுள்ளது.

இப்போராட்டத்தில் கலந்து கொண்டிருந்த மக்கள், நல்லாட்சி அரசாங்கத்தின் நூறு நாள் திட்டத்தில் எமது நிலம் இல்லை, எமக்கு வேண்டாம் அகதி வாழ்க்கை, சீரழிய போகின்றது இளைய சந்ததி, எமது ஊர் எமக்கு வேண்டும், இராணுவமே உடனடியாக வெளியேறு என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இப்போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் திருமதி விவேகானந்தன் இந்திராணி ஆகியோர் கலந்து கொண்டிருந்ததோடு நூற்றுக்கணக்கான மக்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இப்போராட்டம் நடைபெற்றுக் கொண்டு இருக்கும் போது இராணுவத்தின் டாங்கி வாகனம் ஆர்பாட்ட காரர்களின் அருகில் நிறுத்தப்பட்டதோடு, பெருமளவிலான பொலிஸார் ஆர்ப்பாட்ட காரர்களை சூழ்ந்து காணப்பட்டதோடு, பொலிஸாரில் சிலர் பொதுமக்களை புகைப்படமும் எடுத்தவண்ணம் இருந்தனர். இதனை விட புலனாய்வு பிரிவினரின் கண்காணிப்பும் தீவிர மாக காணப்பட்டிருந்தது.

இந்த கெடுபிடிகளால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த பொது மக்களில் பெரும்பாலானோர் ஊடகங்களுக்கு தமது காணிகளை விடுவிக்குமாறு கருத்து தெரிவிக்க கூட தயங்கியிருந்தனர்.

இன்னும் சில புலனாய்வாளர்கள ஊடகங்கள் சிலவற்றோடு சேர்ந்து நின்று மக்கள் கருத்துக்களை ஒலிப்பதிவு செய்திருந்ததனையும் காண முடிந்தது. (எ-4,12,250,281)

## இராணுவம் வெளியேற்றப்பட்டு...

அலரிமாளிகையில் நேற்றுக் காலை விசேட உரை நிகழ்த்திய பிரதமர் ரணில விக்கிரமசிங்க மேலும் தெரிவிக்கையில், இவ் வருட இறுதிக்குள் போரில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு சகல உரிமைகளும் வழங்கப்படும். ஏனைய சமூகத்துக்கு நிகரான வாழ்க்கையை ஏற்படுத்துவோம்.

இந்த புதிய வருடத்தில் அரசியல் ரீதியாக பல மாற்றங்களை முன்னெடுப் போம். குறிப்பாக தற்போது உள்ள அரசி யலமைப்பை மாற்றி புதியதொரு அரசியலமைப்பை உருவாக்குவோம்.

மேலும் நாட்டில் காணப்படும் பொருளா தார பிரச்சினையை தீர்க்க மும்முரமாக செயற்படுவோம். நாங்கள் ஆட்சிக்கு வந்து ஒரு வருடமே நிறைவடைந்துள்ள நிலையில் எதிரணியினர் எமக்கெதிராக பல குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர்.

இதற்காக நாம் முன்னெடுக்கும் அபிவிருத்தி திட்டங்களை தடை செய்ய முடியாது. எம்மை விமர்சிக்கும் சிலர் எதிர்காலத்தில் எம்மோடு இணைந்து கொள்வார்கள் என்பது உறுதியாகும் என்றார். ஜனவரி 8 ஆம் திகதி இந்த மக்கள் வழங்கிய ஆணைக்கு அமைவாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நாட்டில் புதியதொரு பயணம் ஆரம்பமானது.

இந்த நாட்டின் வரலாற்றில் முதற் தடவையாக அரசியலமைப்பின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தைக் குறைப பதற்கு ஜனாதிபதி தனது விருப்பத்தை தெரிவித்தார்.

சர்வதேச மட்டத்தில் நாம் எதிர்கொண்ட மனித உரிமைப்பிரச்சினைகளை வெற்றி கொண்டு அவர்களை எம்முடன் இணைத்துக் கொண்டு எமது உரிமைகளை வென்றெடுக்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

வடக்கில் பெரும் சிரமங்களை துன் பங்களை எதிர்கொண்ட மக்களை அவர களது காணிகளில் குடியமர்த்திவரு வதுடன், ஏனைய பிரதேச மக்களது உரிமைகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துவருகிறோம்.

இதே போன்று நாட்டின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கான மூன்று வருட திட்டத்தை ஜனாதிபதி தலைமையில் முன்னெடுக்கவுள்ளோம் என்றார். (எ-11)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள அசைவ உணவகமொன்றுக்கு றொட்டி, கொத்து றொட்டி தயாரிக்கத் தெரிந்த ஒருவரும் சகல வேலையும் செய்யத் தெரிந்த உதவியாளர் ஒருவரும் தேவை. தொடர்பு:-0771258072 (3069)

## விற்பனைக்கு உண்டு

உழவு இயந்திரமும் பெட்டியும். இல.NP.RC.1472 (TAFE), கனகாம்பிகைக் குளம், கிளிநொச்சி. தொடர்பு:- 0775302573, 0756283406 (சி-3328)

## NAC

மானிப்பாய் (மகளிர் கல்லூரி அருகில்)

A/L 2018 வர்த்தகப் பிரிவு
ஆரம்பம்:-இன்று 3 மணிக்கு

A/L Day Class (2016)
08.01.2016 (Fri-3.30PM) (3071)

## BEACON

மணிக்கூட்டு கோபுர வீதி, வெலிங்டன் சந்தி, யாழ்.நகர்

A/L 2016 DAY வர்த்தகப்பிரிவு

பொருளியல்–K.பிரதீபன்
கணக்கீடு:–R.சுகிர்தன்
வணிகக் கல்வி:–S.முகுந்தன்

நாளை ஆரம்பம் காலை 8 மணி

கடந்த வருடம் சிறந்த பல பெறுபேறுகள் எமக்கே...

மேற்படி எமது ஆசிரியர் குழாம் யாழ்நகரின் மத்தியில் வேறெங்கும் கற்பிப்பதில்லை என்பதனை மாணவர்கள், பெற்றோர்கள் கவனத்தில் கொள்க (சி-3323)

## FALC FRENCH LANGUAGE CENTRE FOR BETTER FRENCH

பிரெஞ்சு மொழி வகுப்பு

Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Diploma in French
FRANCE, CANADA, SWISS, BELGIUM செல்வோர் எம்மிடமே கற்கின்றனர்.

விரிவுரையாளர் : MR. V. JEGAN (Trained in France - 2007, University இல் French விரிவுரைகளை மேற் கொண்டவரும்)

DELF A1, A2 Exam இல் 100 % சித்தி.. 1025 மாணவர்கள் French கற்றுள்ளனர்...
உடன் அனுமதியை பெற்றுக் கொள்ள : 0779 789 456 / 021 221 7781

| No. 40, பலாலி வீதி. ஆரிய குளத்துக்கு அண்மையில் ஆரம்பம் : 09.01.16 சனி 2 மணி | பிரதான வீதி, நெல்லியடி TP: 021 3202973 ஆரம்பம்: 11.01 @ 4pm. | கண்டி வீதி, சாவகச்சேரி. ஆரம்பம்: 13.01 @ 4pm |
|---|---|---|

Bus நிலையம் → ஆரியகுளம் → 100M → பலாலி வீதி → FLCentre (C-3317)

## விற்பனையாளர் தேவை

யாழ்.நகரில் உள்ள பிரபல்யமான புடவை விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள, பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை.

குறிப்பு : யாழ் நகரை அண்டியவர்களாக இருக்க வேண்டும்.

தொடர்பு: 0775556904, 0213213117

## யாழ் BCAS CAMPUS இல் புதிய பிரிவுகள்...

PEARSON | UNIVERSITY OF WOLVERHAMPTON | London South Bank University



UK Degree in **Quantity SURVEYING**
Leading to BSc (Hons)

- அனுபவம் வாய்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் குழாம்.
- இலகு தவணைக் கட்டணம்.
- வசதியான நவீன கற்றல் முறை மற்றும் சூழல்.
- பிரசித்தி மற்றும் பெறுமதி வாய்ந்தது.

RECOGNIZED UGC RECOGNIZED

www.bcas.lk

BCAS CAMPUS · BRITISH COLLEGE OF APPLIED STUDIES
16, Point Pedro Road, Jaffna
Tel : 021 221 9910
Hotline 077 710 2131
16 YEARS of Trust & Excellence in Higher Education

Colombo | Mt.Lavinia | Kandy | Kurunegala | Jaffna | Batticaloa | Ampara | Qatar

## NEC

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. இரு இடத்திலும் மணிக்கூட்டு வீதி, யாழ் நகர்.

A/L DAY CLASS
கலை, வர்த்தகம், தொழில்நுட்பம்

ஆரம்பம்
06/01/2016 புதன் 7.00 மணி

Note: யாழ் நகரில் கலை, வர்த்தக, தொழில் நுட்ப பெறுபேறுகளில் முன்னணி பெறுபேறுகளை பெற்று 60இற்கு மேற்பட்ட மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்த ஒரே ஒரு கல்வி நிறுவனம்

பாடம் மாறி கற்பவர்களுக்கு விசேட பிரிவு
A/L 2018 கலை, வர்த்தக தொழில்நுட்ப பிரிவுகளுக்கான அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

(C-3324) T.P 0774696695

## D.C.M

சுன்னாகம்
A/L Day Class
கலை, வர்த்தகம்
ஆரம்பம்:-நாளை 3.00PM (சி-3325)

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பிரித்தானிய பட்டப்படிப்புகள்

NEW INTAKE 2016

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
JAFFNA

Hotline 077 710 2131 (சி-3299)

பல்லாயிரக்கணக்கான மாணவர்களின் நன்மதிப்பை வென்ற யாழ்ப்பாணம் ஈ-சிற்றி ஆங்கிலக் கல்லூரியின் 2016 ஆண்டில் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன..

ஆங்கில மொழியைச் சில மாதங்களில் கற்று சரளமாக பேச
யாழ் நகரின் முன்னனிக் கல்லூரியில்
இணைந்து உங்கள் ஆங்கிலக் கனவுக்கு முற்றுப்புள்ளி வையுங்கள்

## DIPLOMA IN ENGLISH

(சனி/ஞாயிறு 10.00 - 12.30 PM)
(16 வயதிற்கு மற்பட்டவர்களுக்கான 06 மாத கால பாடநெறி)
ஆரம்பம் : 09.01.2016 சனி காலை 10.00 மணி (சி-3326)

இந்த வருடம் A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், பல்கலைக் கழகங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட மற்றும் பல்கலைக் கழக மாணவர்களுக்கான விசேட பாடநெறி

- சர்வதேச சான்றிதழ்கள்
- அரச மற்றும் சர்வதேச நிறுவனங்களின் பதிவு பெற்ற நிறுவனம்
- எங்கும் ஆங்கிலம் கற்க முடியும் ஆனால் இங்கு மட்டுமே சரளமாகப் பேசமுடியும்
- கணனிப் பாடநெறிகள்



E-CITY
COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT
இல. 372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 0212217106 / 0773400418

## NEW SCIENCE WORLD

Navalar Road - Brown Road Junction - Jaffna.

2016 DAY CLASSES
(திங்கள் - வெள்ளி)

| | |
|---|---|
| பௌதிகவியல் | R.குகன் / R.குமரன் |
| இரசாயனவியல் | டயஸ் / K.T.சிவகுமார் |
| உயிரியல் | S.பொன்திவாகரன் / V.உமாசங்கர் |
| இணை.கணிதம் | S.S.செந்தில்ராஜ் |

(C-3231)

வகுப்புக்கள் நடைபெறுகின்றன

Hurry Up! New Year Special Offer

புதுவருடத்தினை முன்னிட்டும் O/L,A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் நலன் கருதியும் BRITISH COLLEGE OF HIGHER STUDIES வழங்கும் 50% கட்டண கழிவு

## Quick Learning Course

**Spoken English With Grammar**

உரையாடற் பயிற்சிகள், பேச்சுப் பயிற்சிகள், உச்சரிப்புப் பயிற்சிகள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைய Audio & Video Visuals மூலமாக நடாத்தப்படுகிறது.

G.C.E A/L பெறுபேறுகளின் பின்னர் உங்களின் அடுத்த கட்டம்?

**Diploma In English** (Speaking, Reading, Listening, Writing)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைக்கேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர், மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு. (சி-3338)

கிழமை, வார இறுதி நாள் வகுப்புகள்
BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
No. 15 2/1, Sirambiyadi Lane, Off Stanley Road, Jaffna
ஆரியகுளத்துச் சந்திக்கருகில் சதொச SM மேல்
Tel: 021 2224550 Hotlines: 0770365728, 0777585913, 0777222422, 0776555677

Batches Start
06.01.2016, 08.01.2016
09.01.2016

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முன்கூட்டியே தங்கள் பதிவுகளை மேற்கொள்வதன் மூலம் ஏற்ற நேர அட்டவணையை தெரிவு செய்து வீண் விரயத்தை தவிர்க்கவும்.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.